# VICTORIA JUBILEE HOSTEL
# MISCELLANY.

ARA PUBLIC LIBRARY
21 NOV 1956
MADRAS

337
2-55

*April 1955.*

CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1956
MADRAS

## EDITORIAL COMMITTEE.

*Principal & Warden:* Dr. A. Sankaran, M.A., PH.D.

*Sub-Warden:* Sri V. Gopalan Nair, B.A. (HONS)

*Proctor:* Sri V. Sukumaran, B.A., B.SC.

*Editor:* R. Desabandu.

*Associate Editors:* V. Sambasivam,
G. Subramanian.

*Sub-Editor:* A. Ramaiyan.

CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1956
TAMIL SECTION
MADRAS


# CONTENTS.

| | | | |
|---|---|---|---|
| குழலோசை | .... | நா. சீனு | 5 |
| ஏன் அழுகிறாய்? | .... | ஆ. கந்தசாமி | 19 |
| ஏன் நடக்கக் கூடாது? | .... | வி. ந. சோமசுந்தரன் | 22 |
| விடுதி வாழ்க்கை | .... | சொ. ஆனந்தன் | 28 |
| "புத்தகப் புழு" | .... | அ. இராமையன் | 30 |
| சமுதாயமும் மாணவர் கடமையும் | .... | ப. குணசேகரன் | 34 |
| "கண்கள்" | .... | எஸ் துரைராசன் | 39 |
| பிரிவும் பரிவும் | .... | அ. சிகாபுதீன் | 48 |
| வள்ளுவன் வகுத்த வழி | .... | அ. தனுக்கோடி | 51 |
| ஏழை மகன் | .... | வே. சந்திரகாசன் | 59 |
| நட்பு | .... | இரா. தேசபந்து | 66 |
| என் கனவு | .... | பொ. அரங்கராசன் | 70 |
| விலங்கின் பால் அன்பு | .... | க. கணேசன் | 71 |
| எங்கள் பயணம் | .... | டி. பி. சீனிவாசன் | 74 |
| திருவள்ளுவரும் — ஷேக்ஸ்பியரும் | .... | வ. பெருமாள் | 77 |

ENGLISH SECTION.

| | | | |
|---|---|---|---|
| Shall Students take part in politics | .... | *N. Radhakrishnan* | 1 |
| World Peace | .... | *R. Desabandu* | 5 |
| The National Savings Scheme | .... | *V. Sambasivam* | 9 |
| The Upholder of Civilization | .... | *V. Sukumaran* | 11 |

EDITORIAL BOARD.



CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1956
MADRAS

L. to R. A. Ramaiyan, Sub Editor; V Sambasivam, Assoc. Editor; R. Desabandu, Editor; Dr. Sankaran, Principal & Warden; V. Gopalan Nair, Sub Warden;

EMARA PUBLIC LIBRARY
21 NOV 1956
MADRAS

# FOREWORD

It gives me great pleasure to congratulate the members of the Victoria Jubilee Hostel on their laudable enterprise of collecting a large number of readable articles of general and literary interest, and publishing them in the form of a Miscellany. Life in a Hostel is an education in itself; it brings together young people from different cross-sections of society with different habits and different views; they learn to make minor sacrifices of personal comfort in the interests of a larger community; their angularities are rounded off, their prejudices broken and their sympathies enlarged. It is my hope and prayer that my wards of the Hostel will strive incessantly towards intellectual and moral perfection.

**V. Gopalan Nair,**
Sub Warden.

# EDITORIAL.

We think that there is no need to apologise for the publication of this journal but if any apology is needed it must be on the ground that this journal ought to have started publication a few years back. Other hostels, though less historic, have stolen a march over us in this enterprise. Our hostel has passed through half-a-century of change and progress; present boys and old boys alike want other informations such as the influence of personalities, the corporate aspect of hostel life, the impressions of our colleagues and compeers, the conditions and ideals, the experiments and aspirations that shape us in the most impressionable period of our life.

The journal is designed, to some extent, to represent the importance we attach to all the sides of hostel life which are not strictly academic. In fact, the journal respects, in a tangible way, the expression of our belief that in the life of a nation and in the development of character, the social aspect of hostel life plays a far more vital and important part than the academic. Its real value lies elsewhere, in the dawn of a new and wide comprehension of life, the first rubbing of shoulders with the world. The meeting of man with man, student with student, the formation of new ideas, ambitions, hopes, the making of friends, the ups and downs and the give-and-take of a world in miniature, the social gatherings, the play fields, the development of initiative and self-reliance—these mark the birth of new generation.

And so this journal, it is hoped, will be a memory of the past and a mirror for the present, a link

between old and new. It will primarily be a record of hostel life, but it will also try to promote and foster the literary and journalistic talent of the inmates of the hostel by the publication of articles on literary and other subjects. Be it remembered that it is, first and foremost, a journal by students for students. The standard of its attainment may not be very high but it will serve its purpose. Almost all articles in this issue have been written by students. We hope also to make the journal especially attractive to the present and Old Boys of the hostel. We shall be happy to establish an intimate contact between the present boys and those many gentlemen who have preceded us in the same rooms and the same grounds. Many of our Old Boys must be now actively contributing their share in the national work of the country and their articles and reminiscences will be of invaluable help to us in guiding our conduct and in shaping our character. We request them, therefore, to favour us with their contributions.

We have a heavy debt to discharge in thanking those who have made the publication of this journal possible. We are very grateful to Dr. A. Sankaran, our Warden and Principal, for the permission he accorded us to publish the journal. Our Sub-Warden has given us guidance from time to time and Sri G. Venkatachalam, M. A., has been kind enough to correct the Tamil articles. We are deeply thankful to those gentlemen who have made voluntary contributions and enabled us to print this Miscellany. The Editor wishes to take this opportunity to thank the Associate Editors and the office-bearers of the Hostel Union for their willing and sincere co-operation.

THE VICTORIA JUBILEE HOSTEL, 1954 — 55
*with*
The Honb'le Sri S. S. Ramaswami Padayachi
&
Sri K. A. P. Viswanatham.


CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1956



THE VICTORIA JUBILEE HOSTEL,

Office-bearers and Representatives.

21 NO
MADRAS



# "குழலோசை"

**கோபாலன்:** **நா. சீனு.**

கோழியின் கூவுதலும், குயிலின் கூவுதலும், காகத்தின் கரைதலும், வண்டினத்தின் ஓசையும், தென்றலின் அசைவும் என் காதிலே ரீங்கார ஓசையிட்டன. அந்த ஓசையும் என் செவிக்கு ஒரு இசையாகவே இருந்தது. சோம்பல் முறித்துக் கொண்டே எழுந்திருந்தேன். இருந்தாலும் படுக்கைக்கு என்னைவிடப் பிரியமில்லை போலும்! மறுபடியும் உறங்கிவிட்டேன்...........

" ஐயா நீராகாரம இருந்தால் ஊற்றுங்கள் " என்ற ஓசை என்னை மறுபடியும் விழிக்கச் செய்தது. விழித்தது தான் தாமதம் வீட்டுக்கு வெளியே ஒரு சிறு பெண்ணைக் காணும் துர்ப்பாக்கியம் கிடைத்தது. ஏனென்றால் அன்று முழுவதும் எனக்கு நிம்மதியே இல்லை........... அந்தப் பெண்ணின் நிலை. வறுமையின் வளர்ப்புப் பெண்ணாக விளங்கினாள். ஆனாலும் இயற்கைத்தாய் அவளுக்கு இயன்ற வரையிலும் உதவிசெய்து கொண்டு இருந்தாள். கருத்தமேனி செந்நிறமாயிற்று. ஆதித்தனின் அருளால் துளிர்விட்டு காற்றிலே பறந்துகொண்டிருந்த கோதைகள் தண் பனியால் மென்மையாயின. அரை நிர்வாண மேனியை எங்கள் வீட்டு முன்புறத்தில் இருக்கும் கனகாம்பரச்செடி மறைத்துக்கொண்டிருந்தது. குழிவிழுந்த கன்னங்கள் தூசிகளின் பெருக்கால் நிரப்பப்பட்டிருந்தன. பக்கத்துக் குப்பைகளிலிருந்து காற்றிலே மிதந்துவரும் சாம்பல்பொடி அவள் முகத்துக்குப் பவுடர் அடித்துக்கொண்டிருந்தது. வாடிய முகம். ஏதேனும் கிடைக்குமா என்ற ஓயாத எண்ணம். யாராவது வருவார்களா என்ற ஆவல் நிறைந்தகண்கள். திருப்தியான பதில் வருமா என்ற சந்தேக மனம். இவைகள் அந்த எட்டு வயதுச் சிறுமியிடத்தில் நிரம்பியிருந்தன. இரக்கமுள்ள வதனத்தை நோக்கியும் எனக்கு அரக்கமனம் வந்துவிட்டது. என்ன தான் வறுமையிருந்தாலும் பொழுது விடிவதற்குள்ளாகவா பிச்சை........... " போ........ போ........ காலையில் வந்துவிட்டாய்........ பக்கத்து வீட்டைப் போய்ப்பார்........"

" அங்கேயும அதேடதில் தான் அய்யா...........".

என்ன சொல்வது என்றே எனக்குத் தெரியவில்லே. சில சமயத்தில் சிறுபிள்ளேகள் கேள்விக்கு கேள்வி ஞானம் படைத்த பெரியோர்களால்கூடப் பதில் சொல்லமுடியாது என்ற நினேவு வந்ததுதான்........ ஓசை........ இனிய ஓசை........ குழல் ஓசை........ புல்லாங்குழல் ஓசை...... ஆம்...... என் எதிரில் நின்றுகொண்டிருந்த பெண்தான் ஊதினுள்........ ஊதினளா... தன் வறுமை நிலேயை குழலின் வாயால் எடுத்துக் கூறினுள். நன்கொடைக்குச் செல்லும்போது, அந்தப் பணக்காரர் களுக்குத் தெரிந்தவர்களே அழைத்துச் செல்லுதல் போல...... குழலிலிருந்துவரும் அவளது குமுறுகின்ற வாக்கியங்கள் ஓசை யில் மென்மைப்பட்டு என் உள்ளத்தை உருக்கிவிட்டது. ஓசை மட்டுமல்ல....... அவளது கள்ளங்கபடற்ற முகம்கூட எனக்கு ஒரு பரிதாபத்தை விளேவித்தது.

தம்பி எழுந்திருந்து குளித்துவிட்டு பள்ளிக்கூடத்துக்குப் போறதை கவனிடா....... புல்லாங்குழல்லே அப்படியே மயங்கி இருக்கிருயே....... என்ற தாயின் எச்சரிக்கை என் உள்ளத்தை நில உலகிற்குத் திருப்பியது. அப்படியானல் இதுவரையிலும் நான் இருந்த உலகம் இசை உலகமா....... அல்லது குழல் உலகமா........ சே........ ஏன் என் தாய் இந்தச் சமயத்தில் சப்தம் போட்டாள்........ இல்லாவிட்டால் இன்னும் கொஞ்சம் கேட்கலாம் அல்லவா........

ஆமாம் உன் பெயர்.......

என் பெயர் மருதாயிங்க........

டேய் தம்பி குளிக்கப்போடா........... தாயின் சொற்கள் சிறிது சினத்துடன்........

சே.... அழகு இருக்கும் இடத்தில் ஆபத்து என்றுமே இருக்கிறது....... என் காலேக்கடன் முடிந்தது. பள்ளிக்குச் சென்றேன். பாடங்கள் தொடங்கின. கணக்கு உபாத்தி யாயரின் கேள்விகள் என்மேல் பொழியத்தொடங்கின........

" ஒரு குழாய்போன்ற உருவத்தின் வட்டப் பாகத்திற்கு எப்படிப் பரப்பளவு காண்பது?

" ஒன்றுமே புரியலே சார் "

" சரி முதலில் குழாய்க்கு எத்தனை பக்கங்கள்? "

" இருபக்கங்கள் சார்........' அதிலே ஒரு பக்கம் களிமண் வைத்து அடைத்திருந்தது. மற்றெரு பக்கம் திறந்து இருந்தது. மேலே ஆறு துவாரங்கள் இருந்தன. அந்தக் குழலுக்கு ................

வகுப்பிலே ஒரே ஆரவாரம்.... ... " என்னடா கோபால் நான் என்ன கேட்கிறேன் நீ என்ன பதில் சொல்கிருய்"

" உடம்பு சுகமில்லை சார்..........." " சரி உட்கார்..........." இப்படித்தான் உள்ளத்தை வெளிச்சொன்னல் ஒரே சிரிப்பாக இருக்கிறது. நான் என்ன செய்வேன். குழல் ஓசை என் உள்ளத்தில் நர்த்தனமாடிக்கொண்டிருந்தது.

அடுத்த வகுப்பு தமிழ்........ தமிழ் ஐயாவின் வினைக்கள் என்னைத்தான் விளித்தன.

" இயல் இசை நாடகம் இதில் இசையின் இலக்கணம் என்ன?"

" இசையா சார்... .... அது எப்படி தெரியுமா இருந்தது.... என்னையே இசையின் வெள்ளத்தின் அமிழ்த்துவிட்டது. வகையுற்ற இசை. வறுமை தான் ஊதிற்று. இருந்தாலும் சொல்வளம் குறையவில்லை.... ... அழுக்குக் கைகள் தான் நர்த்தனமாடின. இருந்தாலும் அது ஒரு நடனக்கலை பயில்வதுபோல் இருந்தது.

வகுப்பு அதிர, மேலிடம் உதிர, சிரிப்பு கொந்தளித்தது. எனக்கே வெட்கமாயிருந்தது. ஏன் இப்படி? வகுப்பிலே நல்ல பெயர் எடுத்த நான். இன்று, இவ்விதம் மனம் குழம்பிவிட்டதே.... ... உண்மை தான். மனம் ஒரே நிலையில் இருந்தால் உலகம் முன்பே முன்னேறி, இன்பத்தின் உச்சியில் ஆனந்த மாடிக்கொண்டிருக்கும்........

அடுத்த வகுப்பு விஞ்ஞானம் .......

" இசை எப்படிப் பரவும் என்று யாராவது சொல்வீர்களா "........

இசைதானே சார்........இனிமையான இசை........வறுமையின் கர்ப்பத்திலே ஊறி........அமைதியின்மையின் தாய்க்குப்

பிறந்து, எள்ளிநகையாடும் உலகத்தில் தவழ்ந்து........துன்பம் உருவெடுத்து, பட்டினியில் உறங்கிய நரம்புகள் நிமிர்ந்து குழலின் மேற்புறத்திலே இருக்கும் துவாரங்களில் தாளம் போட, குரல் ஒலிக்க, குரலிலிருந்துவரும் அலை ஓசை குழலில் சென்று, விரல்களின் அசைவால் தடுக்கப்பெற்று இன்னிசையைக் கிளப்பி, இன்பநாதம் ஊற்றெடுத்தது சார். அது என்னைமட்டுமல்ல ஐந்தறிவு படைத்தவைகளையும் இன் பத்தில் ஆழ்த்திவிட்டது....சார்........மறுபடியும் சிரிப்புதான் .. ....

சே........என்ன இன்று இவ்வளவு மோசமாகிவிட்டோம். ஒரே நினைப்பைக்கொண்டு மற்ற காரியங்களை மறந்துவிடு வதா.... ...இன்பத்தையே வாழ்நாளில் முக்கால் பாகம் அனு பவித்தவனை. துன்பம் வறுமையோடு சேர்ந்து அவனை இன்னல் படுத்துங்கால்.......தற்கொலை அல்லது, சாவு இதைத்தான் எதிர்பார்ப்பான். முன் அனுபவித்த இன்பம் அந்தச் சமயத் திற்கு வராது. வந்தாலும் அது வானிலே தோன்றும் மின்னல் தான். அதேபோல்தான் என்னிலையும் ஆயிற்று.

வளர்ப்பானேன்........... இரண்டு நாட்கள் நான் என்ன செய்தேன் என்றே தெரியவில்லை. பார்த்தால் சிறுமியின் கோலம். கேட்டால் குழலின் நாதம். எனக்கு என்றுமே இசை என்ருல் ஒரு ஆசை. ஏன்..... ஒரு பித்து, பைத்தியம். வித்தைக்காரன் பாம்பை எடுத்து அதற்குப் படம் எடுத்து ஆடும் வரையிலும் அடித்து பிறகுதான் குழலை எடுத்து ஊது வான். உண்மையில் பாம்புக்கு இசைஞானம் இல்லை. ஆனல் சிலர் பாம்பு இசையில் மயங்கி ஆடுகிறது என்று கூறுவார்கள். வித்தைக்காரன் மகுடி ஊதிக்கொண்டே தலையை அசைப் பான், மகுடி முன்னும் பின்னும் செல்லும். மகுடியிலேயே கண்ணுங்கருத்தும் உள்ள பாம்பு மகுடியின் ஆடுதலுக்கு ஒப்ப தன் தலையை ஆட்டும். அதைப் பார்த்து எல்லோரும் பாம்பு இன்னிசை கேட்கிறது என்று கூறுவார்கள்.

ஆனல் நான் இசையில் மூழ்கியவன். இசைக்கத் தெரியா விட்டாலும், திருப்திக்குத் தலை ஆட்டுகிறவர்களைப்போல் அல்லாமல் இசையென்ருல் உயிரையும் அடகு வைக்கும் எண்ணம் இருந்தது. பழங்காலத்து சிபியைப்போல.

நாட்கள் வாரங்களாகின........வாரங்கள் திங்கள்களாக மாறின........ திங்கள் ஆண்டுகள் ஆயிற்று........ நாட்கள்

வளர உலகமும் வளர்ந்தது........காலமும் உலகமும் வயதில் ஒத்த நண்பர்கள் என்பது என் தாத்தாவின் கீதா உபதேசம் ........நான் கும்பகோணத்தில் ஏதோ ஒரு சிறு வேலையில் அமர்ந்தேன்...... .வேலையைப்பற்றி சொல்ல நா கூசுகிறது........ கும்பகோணம் கோயில்களுக்கு குறைவில்லை என்பது நான் வந்து ஒரு வாரத்திற்குள் அறிந்துகொண்டேன்..... .. மாபெரும் கோவில்தான்........ஆனால் புள்ளினங்கள் அங்கு வீடு கட்டி வசித்துக்கொண்டிருந்தன..... .. ஓர் சமயம் அந்தப் புள்ளினங் களுக்கும் பக்திமேலீட்டு கடவுளை என்றுமே பார்த்துக்கொண் டிருக்கவேண்டும் என்ற ஆவலோ ?........இருக்கும்........இல்லா விட்டால் காலையிலும் மாலையிலும் பக்தர்கள் கடவுள் வழி பாடு செய்வதைப்போல அவைகளும் இன்னிசை எழுப்பு வதற்குக் காரணம்........புள்ளினத்தின் ஓசை கடவுளுக்குப் பக்த கீதமாயிற்று........அவைகள் இறகு அடித்து விக்கிரகத் தைச் சுற்றுவது கடவுளுக்கு வெண்சாமரம் வீசுவதுபோல் இருந்தது........ இருந்தாலும் கடவுள் கொடுத்துவைத்தவர் தான் .. ....

கும்பகோணம் கொசுக்களுக்குப் பெயர்பெற்றது என்பது மோனைக்காகக் கூறியதல்ல ....... அனுபவப்பட்டுக் கூறியது தான் என்று வந்தநாளே தெரிந்து கொண்டேன். மனிதன் தன்னைவிடப் பெரிய மிருகங்கள்........ சிங்கம், புலி ஏன் யானையைக்கூடப் பிடித்து விடுகிறான்.... அடக்கி விடுகிறான்.... அதிகாரத்திற்குக் கீழும் கொண்டுவந்து விடுகிறான். ஆனால் கொசு, நெல்லுக்கு இறகு முளைத்ததுபோன்ற கிருமி அதை அடியோடு அழிக்க இயலவில்லையே....... ஓர் சமயம் அணுக் குண்டுக்கு அழியுமோ!........

என் வாடகை ரூமில் தினப்புளுகு இனத்தாளுடன் நாற் காலியில் உட்கார்ந்திருந்தேன்........ "புல்லாங்குழல் ராணி ஊர்மிளா" என்று ஒரு சிறுபகுதி இருந்ததை என் கண்கள் கண்டுபிடித்து விட்டன. அந்தப் பகுதியைப்பிடிக்க ஆரம் பித்தேன்........ " முதல் மந்திரி ராஜரத்தினம் அவர்கள் தலைமையில் புல்லாங்குழல் கச்சேரி குமாரி ஊர்மிளாவின லும், கோமதியினலும் நிகழ்த்தப்பட்டது....... குழலோசை யில் மகிழ்ந்த அமைச்சர் ஊர்மிளாவுக்குப் புல்லாங்குழல் ராணி என்ற பெயரும் தங்கமெடலும் கொடுத்தார்

ஊர்மிளாவின் குழல்இசை ஓங்கட்டும்" என்ற பகுதி இசைப் பித்துப்பிடித்த என்னை மகிழச்செய்தது........ ஊர்மிளாவின் இசையையே கேட்காத நான் ஏதோ ஒரு பெண் குழல்ஊது வது போலவும்........ அந்த இசைக்கு வசப்பட்டு, குழல் ராணி என்ற பெயரும் தங்கப்பதக்கமும் கொடுப்பது போல வும் மனத்திரையில் கண்டேன் ...

மனத்திரை இருக்கிறதே, நடந்ததையும், நடந்து கொண்டு இருப்பதையும், நடக்கப் போவதையும் எவ்வளவு சீக்கிரம் படம்பிடித்து விடுகிறது. கிடைத்ததற்கு அரிய பொருள்கள்...... நிறைவேறாத எண்ணங்கள், இவைகள் யாவும் மனக்கடையில் ஏராளம்...... தொட்டு வாங்கலாம்.... மனதிலேதான்.... ஆனால் சுயஉணர்வு வந்தபிறகு ...எல்லாம் போய்விடுகிறது. சிறிது நேரமாவது அந்த மனத்திரை அமைதி தருகிறதே அதுவே போதும்........

ஊர்மிளாவின் புகழ் பத்திரிகை உலகின் உச்சிக்கு உயர்ந்து கொண்டேயிருந்தது. வானொலியில் சில சமயம் குழல்ஓசை கேட்டால் அப்படியே என்னைமறந்து நின்றுவிடு வேன்........ இசையில் ஊறியவர்களுக்குத் தான் அதன் அருமைதெரியும்........

கும்பகோணம் வந்து பல நண்பர்களைப் பிடித்துவிட்டேன். அதிலே மிகவும் என்னிடம் நேயம் காட்டுவோன் சுப்பிர மணியன் தான். நாங்கள் இருவரும் காந்திப் பூங்காவுக்குப் போவோம். சிறிதுநேரம் உட்காருவோம். மணி ஆறு அடித் ததும் வானொலிப் பெட்டியில் இசைத்தட்டுகள் வைப்பது வழக்கம். அதற்காக ஏதேனும் வானொலிப்பெட்டி உள்ள சிறு கடைக்குச்சென்று இசையின் வெள்ளத்தில் மிதந்து கொண்டிருப்பேன்........ பூங்காவின் வானொலிப் பெட்டியிலும் தான்.... 5 மணி முதல் ஆறு மணிவரை சங்கீதப்பயிற்சி என்று ஒரு நிகழ்ச்சி இருக்கிறது. அதுவும் இசைதான். ஆனால் அந்த இசை ஈட்டியாகவும், வாளாகவும் மாறி என் இதயத்தைப் பிளந்துக்கொண்டு செல்வதுபோல் இருக்கும்........ சொல்லிக் கொடுப்பவன் உண்மையில் சோகம் நிறைந்த உள்ளத்துடன் தான் இருப்பான், பாட்டின் பொருள் இன்பமாக இருந்த போதிலும். இல்லாவிட்டால் அவன் பாடும்போது என் உள்

ளம் கலங்குவதேன். கண்ணீர்விட என் கண்கள் காத்திருப் பழ்தேன். அதன் பிறகு கிராம நிகழ்ச்சிகள்........

இந்தியச்செய்தி என்ற ஒரு பகுதியை எடுத்து அதை வசனங்களாக்கி வானொலியில் அதைப் பொழிந்து கொண் டிருப்பார்கள். அது கூர்மிக்க அம்புகளாகி என் இதயத்தை நோக்கி வருவதால் கிளம்பி வந்துவிடுவேன். நிம்மதியாக இருக்கவேண்டும் என்று பூங்காவிற்குப்போய் நிம்மதியைக் குலைக்கும் வானொலிப் பெட்டியால் திரும்ப வேண்டியிருக் கிறது. சென்னைக்குப் பதிலாக அந்தச் சமயத்தில் கொழும்பு வைத்தால் இசை தட்டுக்களின் இன்னிசை எழுச்சி ஓர் அளவு நிம்மதிதரும் அல்லவா. அது இன்னும் தெரியாம லிருப்பது ஏன் ?

என் நாட்கள் கும்பகோணத்தில் ஊர்ந்துகொண்டுதான் இருந்தது..... பூங்காவிற்குப் போகும் பாதைமுழுவதும், சுவர் முழுவதும், சுவரொட்டிகள் இருந்தன. என்னவென்று பார்த் தேன். ஊர்மிளாவின் பெயர் கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தது. மறுபடியும் நோக்கினேன். ஞாயிற் றுக்கிழமை பச்சையப்பமுதலித்தெருவில் ஐயங்கார் வீட்டுக் கல்யாணத்திற்குப் புல்லாங்குழல் கச்சேரி என்று இருந்தது. கல்யாணத்திற்குக் கச்சேரி என்று ஒருவருமே சுவரொட்டிகள ஒட்டமாட்டார்கள். நேயர்களின் விருப்பம். அதுமாதிரி செய்யத்தொடங்கிவிட்டது. மாலை 5½ மணி. உள்ளக்கவலை யோடு உட்கார்ந்திருந்தேன் நாற்காலியில்.

" எம்பா கச்சேரிக்கு வரல்லே என்ருன் சுப்பிரமணியன் "

" உள்ளத்தில் நிம்மதியில்லேப்பா...."

" உனக்கு எப்பொழுதும் நிம்மதி இல்லைதான். எழுந்திரு, புல்லாங்குழல் என்ருல் உயிரையே விட்டுவிடுவாய். இப்படி உட்கார்ந்திருக்கிருயே " என்று கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு போனுன். உள்ளத்தில் கவலை இருக்கும்போது எந்த ஞானமும் கேட்காமல், அவர்களைப்பற்றிச் சொல்லும் போது நிம்மதி அடைவதில்லை என்ற நினைப்பு என் மனத் திரையில் நிழல்படக் காட்சியாயிற்று.

நண்பன் அழைத்துக்கொணடு போனுன். அழகான பந்தல். விதவிதமான மின்விளக்குகள். " உங்கள் வரவு நல்

வரவாகுக '' என்ற எழுத்துகள் மின்னிமின்னி பிரகாசித்துக் கொண்டிருந்தன. Welcome என்ற ஆங்கில எழுத்தும் ஒளி விட்டு மின்னிற்று. சாதாரண தென்னைமரக் கீற்றுகள், பார்ப் பதற்கு அழகற்றதாயிருந்தது. இன்று பந்தலில் பலவிதக் கோணங்களுடன் பின்னி பின்னும் மின்விளக்குகளால் அழகு செய்யப்பட்டு இருந்தன. இயற்கையின் வனப்பைவிடச் செயற்கையின் வனப்பு அழகுதருகிறது என்று நினைத்துக் கொண்டேன். ஒரு பக்கம் காந்தியின் படமும், மற்றொரு பக்கம் நேருவின் படமும் புன்சிரிப்புடன் மின்விளக்கில் தோன்றின.

நாங்கள் இருவரும் மேடைகளின் முன்புபோய் உட் கார்ந்துகொண்டோம். 5½ மணிக்கு வரவேண்டியவர்கள் இன் னும் வரவில்லையே என்று குசு, குசுவென்று ஒவ்வொருவர் காதையும் கடித்துக்கொண்டனர். சே........ இந்தியர்களின் குணமே இப்படித்தான். சொன்ன நேரத்திற்கு வந்துசேரு வதில்லை. அவர்களின் குணத்தை நன்றாகத் தெரிந்துகொண்டு தான் மக்களும் 5½ மணியென்றால் 6½ மணிதான் என்று நினைப்பது சரியாக இருக்கிறது. அதன்படியே ஜனங்கள் 6½-க்கு வருகிறார்கள். கச்சேரியும் ஆரம்பமாகிறது.

மணி 6½ ஆயிற்று, மேடைக்குப் பல இசைக்கருவிகள் வந்து குவிந்தன. சப்புதட்டினர் பலர். எல்லோரும் வந்து உட்கார்ந்து விட்டனர். புல்லாங்குழல் ராணி வருகிறாள் என்ற ஒலி. எல்லோரும் திரும்பினர். ஒரே சிகப்பு. ஆம்! அவள் உடையெல்லாம் சிகப்பு வர்ணம். என் விழிகள் மேல்நோக்கிப் பார்த்தது, பார்த்துக்கொண்டே தான் இருந்தது. மேடையில் அமர்ந்தாள். இசைக்கருவியை எடுத்தாள். தன் வேலையைத் தொடங்கினாள். குழல் இசை ஆனந்தம் தான். வெறிக்கப் பார்த்தேன், அழகான உடல். செக்கச்சிவந்த மேனி, கயல்விழி, மயிலின் சாயல், குயிலின் இசை, கருமேகக் கூந்தல், மூன்றாம் பிறைத் திலகம், மதனனின்வில் புருவம், சந்திர முகம், இன்னும் எவ்வளவோ.....

அவள் குழலுக்கரசி தான். இல்லாவிட்டால் என் நண் பன் உணர்ச்சி மேலிட்டால். என் தொடையில் அப்படி ஓங்கி அடிப்பானா? உணர்ச்சியினால் உள்ளக்கிளர்ச்சி ஏற்பட்டு என்ன செய்வது என்று அறியாத நிலையை நானும் அடைந் தேன். இசை வானத்தின் மேகக்கூட்டங்களால் பொழிந்து

நீர்வீழ்ச்சியின் வழியாகக் கீழ்நோக்கி இரைச்சலுடன் பெய்து மலைகளையும் அருத்து, மேடு என்றும் பள்ளம் என்றும் எதிர் பாராது எங்கும் பரந்து அருவிகளாகவும், நீரோடைகளாகவும் பெருக்கெடுத்து, ஏழையென்றும், செல்வந்தரென்றும் சீர் தூக்கி நோக்காது பெய்துகொண்டே இருந்தது.

கைதட்டல் அதிகம். கவனிப்பும் அதிகம். "ஆஹா" என்ற உச்சரிப்பும். "சபாஷ்" என்ற குரலும் சேர்ந்து எதி ரொலித்தன.

நான் எதையும் கவனிக்கவில்லை. அவள் முகத்தையும், குழலிசையையும் தவிர "சின்னஞ் சிறுகிளியே" என்ற பாரதி யாரின் பாட்டும் பெருக்கெடுத்து வந்தது. என்னை அறியாமல் சுற்றுமுற்றும் ஒருதடவை பார்த்தேன், என் நிலையை யாரேனும் கவனிக்கிருர்களா என்று? என்னைக் கவனிக்க அவர்களுக்கு, ஏன் என் நண்பனுக்குக்கூட நேரமேது? எல்லோரும் அவள் முகத்தைத்தான்...... அவளின் இசை, உண்மையிலேயே ஒரு வர் குரலிசைத்து பாடுவது போல்தான் காணப்பட்டது. இசை அவ்வளவு தெளிவு. அவ்வளவு இனிமை. அவள் மக்களைப் பரவசப்படுத்த அப்படி இசைக்கிருளா? அல்லது புகழேணி யின் உச்சிக்குச் செல்வதற்கு அப்படி இசைக்கிருளா? சே! மக்களைப் பரவசப்படுத்திய பிறகுதானே புகழை அடையலாம். மக்களின் அபிப்பிராயமின்றி எந்த ஒரு பொருளும் புகழை அடையமுடியாது.

அந்தக் குழலூதி ஏன் என்னையே பார்க்கிருள்? ஓர் சமயம் என்மேல்..... சே சே யார் கண்டது. எல்லோரையும் தான் பார்க்கிருள். அப்படியாளுல் எல்லோரையும் பார்ப் பதைப்போன்ற பார்வை என்னைப் பார்க்கும்போது இல்லையே. அப்படியாளுல் என்னைப் பார்க்கும் பார்வை அர்த்தபுஷ்டி உள்ளதோ! ஆனல் என் பார்வை அவள்மேல் வேறுதான். கண்ணுலும் தரிசிக்கிறேன். செவியாலும் கேட்கிறேன். கருத் தாலும் மகிழ்கிறேன். ஏன், நான்கு புலன்களாலும் ரசிக் கிறேன். இவளை எங்கேயோ பார்த்த ஞாபகம் உற்றுநோக்கும் போது தெரியவந்தது,.... தெரிந்துகொண்டேன்.... குழலூதி பிச்சைக்காரிதான், புல்லாங்குழல் ராணி. கொலம்பஸ் அமெரிக்

காவைக் கண்டுபிடித்ததைப்போல.... நண்பனின் காதில் ஓதி விட்டேன், என் இரகசியத்தை. இருக்காது என்ருன். அவள் தான் என்று அடித்துக்கூறினேன். காலத்தின் போக்கைக் கண்டும், என் விடாப்பிடியைக்கண்டும் ஒத்துக்கொண்டான். அவளோடு பேசலாமா என்றது மனம். சே.... பேசிஞல் முகம் கொடுத்துப் பேசுவாளா.... அன்று அலட்சியமாக நாம் பார்த்தோம். இன்று அவள் நம்மை அலட்சியமாய் பார்த்தால் என் மனம் கொந்தளிக்கும், கொந்தளிக்கும் என்று சொன்ஞேமே அதைப்போல் தானே அன்றும் அவளுக்கும் கொந்தளித்துக்கொண்டு இருந்து இருக்கும்.....

என்ன செய்வது? நிலைமை மாறும் என்று யார் கண்டார் கள்? கச்சேரி கடைசி ஆங்கிலப் பாட்டுடன் முடிந்தது. ஒரே கைதட்டல். மாலைகள் பல. வாழ்த்துகள் பல. அவள் வெளிநாட்டிலும் கலையை வளர்க்கப் போகிருள். இந்திய அரசாங்கம் அதற்கு உதவப்போகிறது என்ற சிற்சில வாக்கியங் களும் காற்ருேடு காற்ருய் மிதந்து வந்தன. அழகரசி மேடை யினின்றும் இறங்கி தனி அறைக்குச் சென்ருள்........ நானும் தொடர்ந்தேன்........ எதற்கு என்று எனக்கே தெரியவில்லை. நண்பனின் கைப்பிடி என்னை என் அறைக்குக்கொண்டு சென்றுவிட்டது.

இரவு முழுதும் தூக்கம் ஏது? குழலோசை தான்.......... தென்றலின் ஓசையும், வண்டினத்தின் இசையும், மரங்களின் சலசலப்பும் எனக்குக் குழலோசையைப் போல் தான் இருந் தன........ ஊர்மிளா அழகான பெயர்....... நூறுதடவை நோட் டுப் புத்தகத்திலே எழுதிப்பார்த்திருப்பேன். என்ன இன்பமோ எனக்குத் தெரியவில்லை........

நேரிடையாகச் சென்று பேசிவிடுவோமா என்றது என் மனம்........ வேண்டாம் என்றது மற்ருெரு மனம். மனதிற் குள்ளேயே எத்தனை போராட்டங்கள்........ எத்தனை கொந் தளிப்புகள்........

வாசற்படியிலே நின்றது ஓர் உருவம்........ யாரது........ ஓ........ "மருதாயியா........"

" என் பெயர் ஊர்மிளா என்பது ஞாபகமிருக்கட்டும் "

" புல்லாங்குழல் ராணியான பிறகு தானே!"

" உங்களுக்கு எப்படி தெரிந்தது என் பழைய பெயர்"

" உனக்கு எப்படித் தெரிந்தது என் அறை?"

" பெண்களால் முடியாததுண்டா?"

" ஆண்களும் இளைத்தவரல்லர்........ ஊர்மிளா எப்படி இந்த நிலைக்கு வந்தாய்?"

" வந்தது தவறு?........

" தவறல்ல........ ஏழை பணக்காரர்கள் ஆக வேண்டியது தான்........ எப்படி நீ........

" இன்னிசைப் பற்றுள்ளவர்களும், இரக்கமுள்ளவர்களும் என் உயர்ச்சிக்கு முயற்சி எடுத்தார்கள்........

" ஊர்மிளா உன்கலை, உலகம் எங்கும் பரவவேண்டும் என்பதே என் நோக்கம். உலகம் சூதுவாது நிறைந்தது........ கலையின் கொலையாளர்கள் நிறைய இருக்கின்றனர் சிக்கி விடாதே........ உன் புகழையே என் புகழெனக்கொள்கிறேன். அது சரி ஏன் என்னை அப்படிப் பார்த்தாய் கூட்டத்தில்........

" அதே கேள்வி உங்களைக் கேட்கலாம் என்று வந்தேன்........

" எனக்கே தெரியவில்லை ஊர்மிளா.......

" அதுதான் காதலின் சக்தி என்பது தெரிந்ததா........

" உண்மையாகவா ஊர்மிளா........ ஆஹா இன்றே நான் அமிர்தம் பெற்றவனானேன். கலைரசிகனும், கலையின் இருப்பிடமும் ஒன்று கூடிவிட்டது. இனி நம்மை ஒருவருமே பிரிக்க முடியாது ஊர்மிளா........ ஊர்மிளா........ ஊர்மிளா........ ஊர்மிளா........

" டேய்........ கோபாலா........ என்னடா குழலிசை கும்மாளம் போடுதா........ எட்டு மணிக்கே கனவுவேறு........ அதுவும் ஊர்மிளாவாம் ஊர்க்காயாம்........

நண்பனின் பேச்சு என்னைத்திடுக்கிட வைத்தது. ஆஹா....... அவள்மட்டும் என் இல்லரசியாகிவிட்டால்........ சிறு பெண்

களின் மணல் வீடுதான் என் கோட்டை....... ஊர்மிளாவின் புகழ்........நாடு எங்கும், அயல் நாடு எங்கும், ஒலித்துக் கொண்டிருந்தது........ என் உள்ளமும் ஒலித்துக்கொண்டிருந் தது........அவள் இந்தியாவுக்கு வரும்போது என்னுடைய வரவேற்புதான் முதலாக இருக்கவேண்டும்........ அந்த வர வேற்பின்போது நிச்சயமாக அவளோடு பேசவேண்டும்........ என்று நினைத்தேன். பேசுவதிலே அவ்வளவு விருப்பம்....... ஏன் பேசிக்கூடத்தான் இருக்கிறேன்........ பிச்சைக்காரியாக இருக்கும்போது!

தினத்தாள்கள் ஒலித்தன........ வானொலிகள் அதிர்ந்தன. எங்கும் மரணகீதம்.... யாருக்கு?....... ஊர்மிளாவுக்கா........ "ஐயோ" என்றேன் கடைதெருவில். பிறகு கண்விழித்த போது என் அறையில் நான் கிடக்க........ என்பக்கம் மணி அமர்ந்து இருந்தான்.

"என்னடா கோபாலா ஏன் மூர்ச்சையாகிவிட்டாய்"

"நான் இன்னும் இறக்கவில்லையா ?

"எதற்கு"

"ஊர்மிளாவின்........

"ஊர்மிளா இறந்தற்காகத் தியாகம், செய்கிருயா? பைத்தியக்காரா........

"மணி........

"கோபாலா பாரிஸில் குழல் ஊதிக்கொண்டே இருந் தாளாம், மக்களின் மகிழ்ச்சி கரை புரண்டு ஓடுவதைப் பார்த்து ஊர்மிளாவுக்கும் வெறி பிடித்து மிக சுவாரஸ்யத் துடன் ஊதியவள்தானும்........ மாரடைப்பினுல்.

"இறந்துவிட்டாள்........ கலையரசி இறந்து விட்டாள்........ இந்தியாவின் பொக்கிஷம் பிரிந்துவிட்டது. என் இதயக் கோவில் இடிந்துவிட்டது........ புல்லாங்குழல் ராணி மறைந்து விட்டாள். மக்களின் மாணிக்கம் மறைந்துவிட்டது. தமிழ் நாட்டின் நற்ருய் பறந்துவிட்டது........ இசைபோயிற்று. இன்பம் போயிற்று, மகிழ்ச்சி போயிற்று. நிம்மதி அழிந்தது

என்றுதானே சொல்லப்போகிறாய்? அதற்குப்பதில் என்னைக் கொலை செய்துவிடு மணி.......கொலை செய்து விடு.

" கோபாலா என்னடா இது........

" ஏ உலகமே நல்லவர்களையும் கலைஞர்களையும் ஏன் சீக்கிரம் அழைத்துக்கொள்கிறாய்? உனக்கு ஏன் எங்கள் நாட்டின் மீது அவ்வளவு பொறுமை. உன் பசி நாட்டின் பல நல்லோரை விழுங்கியும் அடங்கவில்லையா? ஏ மாநிலமே உனக்கு இசைஞானம் இல்லையா அன்பு உள்ளம் இல்லையா? அமைதி எண்ணம் கிடையாதா? ஏ அகிலமே உனக்கு மக்கள் நிம்மதியுடன் இருப்பது பிடிக்காதா ? ஒருவருக்குப் புகழ் வரும்போதே உன் பொறுமை, உள்ளத்தில் சுடர் விட்டு எரியுமோ? என் எண்ணம் உனக்குத்தெரியாதா? வரவேற்பு அளிக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன் என்று உனக்குத்தெரியுமா ?........ ஐயோ........ கலைபோயிற்று........ ஞானம் போயிற்று. இசை போயிற்று........ இன்பம் போயிற்று நிம்மதி போயிற்று. எல்லாமே போய்விட்டது. அஹ் ஹஹ்ஹஹ்........

**சுப்பிரமணியன்**

என்று அன்று இவ்விதம் புலம்பினவன்தான்...,.... அது முதல் அவன் ஒரே பைத்தியக்காரனாகவே இருக்கிறான் ........

" பைத்தியமே தெளியாதா மணி? "

" முத்து, இது தினப்பைத்தியம் அல்ல........ வாரம் ஒரு முறை, அதுவும் ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் ஊர்மிளா ஊர்மிளா என்று கத்திக்கொண்டே கடைத்தெருப் பக்கம் ஓடிவிடுகிறான். எவ்வளவு முயன்றும் முடியவில்லை. இரவு 10-மணிக்கு வீடு வந்து சேருகிறான். பிறகு மீதிநாட்களை நிம்மதியில்லாமல் கழிக்கிறான். முகத்தில் களை இல்லை. உதட்டில் சிரிப்பு இல்லை. கண்ணில் ஒளி இல்லை. நெற்றியில் சுருக்கங்கள் இல்லாத நாள் இல்லை.........

" கல்யாணம் ஆகிவிட்டதா மணி. "

" கல்யாணமா? கருமாதிதான் ஆகணும். ஊர்மிளாவைத் தான் காதலித்தானாம் ?

" அவள் சம்மதம் பெற்று "

" சம்மதப்பட்டுக்காதலிப்பது வெகு கஷ்டம்டா. அவளைக் கேட்காமலே இவன் மட்டும் அவளைக் காதலித்துவிட்டான் அதன் கோளாறுதான் இது.

" கடைத்தெருப்பக்கம் ஓடுகிறனே விபத்து ஒன்று மில்லையே !

" இவன் வாழ்க்கை தெரிந்தவர்கள் இரக்கப்பட்டு ஒதுங்கிக் கொள்வார்கள், தெரியாத பையன்கள் ஒன்றுமே புரியாமல் கற்களால் அடிப்பார்கள், அடிபட்டும் ஊர்மிளாவின் ஒலி அவன் வாயிலிருந்து உதிர்ந்துகொண்டுதானிருக்கிறது ........ என்ன செய்வது.......: சரி அவன் வரும் நேரமும் .ஆயிற்று. பேசாமல் இரு........

" ஊர்மிளா........ கலையரசி, குழல் ராணி, இசையின் கற்பகமே, இன்பத்தின் ஊற்றே "

" மணி, அவன்தானேடா "

" வேறு யார் ஊர்மிளாப் பைத்தியம்தான்". வந்து உட்கார்ந்து சிறிது நேரம் கழித்துதான் சுயஉணர்வுப் பெறுவான். பிறகு கேட்டால் ஒன்றுமே தெரியாது என்பான்........ பிறகு குழலோசை கேட்குது என்பான்........ என்ன செய்வது அவன் விதி"........

" குழல் ஓசையடா, அது குழவிகளின் மழலை ஓசையடா அது இறுதியில் மரணகீதமடா"........ என்று கூறிக்கொண்டே நுழைந்தான் குழலோசைப் பித்தன் கோபாலன்........

# ஏன் அழுகிருய்?

**ஆ. கந்தசாமி,**
புத்தர் பகுதி.

1. ஏதென்ன அண்ணே யழுகிருய் குந்தி
ஏங்கியே கண்களில் நீரையே சிந்தி
ஏதோ நடந்தது போய்தொலே யட்டும்.
இல்லாதொழி நெஞ்சில் துன்பத்தை மட்டும்.
தீதான கொள்கையை நீகொண்ட தாலே
தீய்ந்ததுமிக்கப் பயன்கள தாலே.
ஆதலால் சிந்தித்து வாழவும் வேண்டும்
அப்படி யென்ருல் துயர்படாய் மீண்டும்.

2. எல்லாம் தலேவிதி என்றுநீ நம்பி
ஏமாந்து போயின் றழுகிருய் வெம்பி
எல்லாம் அவன்செயல் என்றத ஞலே
ஏற்படும் நற்பயன் இல்லேய தாலே.
நல்ல முயற்சியை இல்லாத தாக்கி
நச்சுவிதி செய்த துண்மையைப் போக்கி
நல்ல முறையில் உழைத்து முன்னேற்றம்
நாடிடும் ஆசையை போக்கவிம் மாற்றம்.

3. நன்ரு யுழைத்துநாம் பாடுபட்டாலும்
நன்ரு யுழைக்காதெக் கேடுகெட்டாலும்
என்றும் தலேவிதி போல நடக்கும்.
எவ்வகை நல்ல உழைப்புங் கடக்கும்.
என்று பெரும்பாலோர் நம்பி யேமாந்து
ஏற்ற முயற்சிகள் செய்யாதுட் கார்ந்து.
சென்றனர் ஏழையாய் சீர்கெட் டலேந்து
சேர்ந்திட்ட மானம், பெருமை, தொலேந்து.

4. ஏற்றமு யற்சிகள் ஏற்ற நேரத்தில்
ஏற்படுத்திப் பலன் ஏற்கும் தீரத்தில்
ஊற்றவே நஞ்சினை ஓர்தடை வந்து
உற்றது ஊக்கமும் தீய்ந்தது வெந்து
ஆற்றும் செயல்களும் தோற்றிடு வண்ணம்
ஆங்கெழும் ராகெனும் காலமென் றெண்ணம்
ஏற்றம டைதலை ஏன்று கெடுக்கும்
ராகுகாலம்சகு னங்கள் ஒடுக்கும்,

5. எட்டாப் பெரும்பொருள் ஆண்டவன் என்றும்
கெட்டார் அதைநம்பி உள்ளார்கள் இன்றும்
நட்டவன் தண்ணீரை ஊற்றுவான் என்று
நம்பியே வீணுக நாட்களைக் கொன்று
கெட்டாயே சோற்றை வீணுக்கியே உண்டு
கேடுறு சோம்பலை தானுடன் கொண்டு
பட்டு அனுபவித் தேங்கிநீ வாட
பாரார்பக வானிப் பக்கமுங் கூட.

6. ஆண்டவ னென்றேநீ கும்பிட்ட முதாய்
அல்லலை நீக்குவா னென்றே தொழுதாய்
ஈண்டப் பொருள்களை பாடுநீ பட்டாய்
ஈசனுக்கே யதை நீசெல விட்டாய்
வேண்டி யழைத்தின்று கூவுகின் றீரோ?
வேதனை தீர்க்கவர் முன்வரு வாரோ?
வேண்டு மண்ணேயறி விங்குநாம் வாழ
வேண்டிய தீமைக ளுண்டுநாம் வீழ.

7. இத்தனை நாளும் கடவுளை வேண்டி
எத்தனை நற்பலன் பெற்ருய்நீ யீண்டி.
அத்தனை நாளை யறிவின்றி நீயே
ஆகும் பயனின்றியே தொலைத் தாயே.

புத்தியுள் ளானிதைச் செய்திடு வானோ?
பொருள்விளைத் தின்பம் துய்த்தி டுவானோ?
ஒத்துவ ராதவெக் கொள்கைக ளையும்
உள்ளம் தயக்கமில் லாமல், களையும்.

8. ஆதலால் நீமன ஊக்கம் விடாதே
ஆண்டவன் பற்றிக் கவலைப் படாதே.
வேதனை தந்திடும் கொள்கையைத் தள்ளு
வேண்டிய தேவை நிறைந்ததைக் கொள்ளு.
ஏதும்நீ செய்திட முற்படுங் காலை
எண்ணியே முன்னதாய் செய்கநீ வேலை
பேதம்பி ரிவுக ளொன்றுமே யின்றி
மக்களோடு வாழ்சம மாகவே வொன்றி.

9. நம்மின் தலைவிதி என்றதோர் சொல்லை
நம்பிடுவோர்க்கு நல் வாழ்க்கையே யில்லை
நம்மின் முயற்சிகள் முன்னதா யெல்லா
நாதன்க டவுள்கள் கொஞ்சமும் நில்லா
நம்பியு ழைத்திடு அண்ணேநீ நாளும்
நன்றுய்முன் னேறலாம் சொல்வதைக் கேளும்
செம்மை படவே பொருள்கள் விளைத்து
சேர்ந்துநீ வாழ்ந்திடு இன்பந், திளைத்து.

---

"ரோஜா மலரும் போதே அழகு மிருந்திருக்கும்; அச்சம் அகலும் போது அரும்பும் நம்பிக்கையே அதிக உற்சாகம் அளிப்பதாகும்"
—ஸ்காட்.

# ஏன் நடக்கக்கூடாது?

வீ. ந. சோமசுந்தரன். (VEEYENNES)

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ஓடிவந்த வேகத்தில் தன்னை ஒருதரம் உலுக்கிவிட்டுக்கொண்டு நின்றது. என் தலையும் பெட்டியின் பலகையும் ஒரு கணம் அன்னியோன்னியமாக இல்லை, இல்லை, காரசாரமாக உறவாடின. "மாயவரம் வந்திடுச்சு" என்று கத்திக்கொண்டே ஒரு சுட்டிப்பயல் வண்டியை விட்டு இறங்கிக்கொண்டிருந்தான். தலையைத் தடவிக் கொண்டே எட்டிப்பார்த்தேன். "நாலு இட்லி ரெண்டணு" என்று கன்னத்தில் அறைவதுபோல் கதறிக்கொண்டே சொன்ஞர் ஒருவர். அங்கே மனிதக்குரல்கள் எழுப்பும் பேரொலியில் எதிர் நீச்சல் அடிப்பதுபோலிருந்தது அவர் குரல்.

நன்ருகப் பொழுது விடிந்துவிட்டது. நமது பைகளில் இருக்கும் பர்ஸ்களின்மீது பாத்யம் கொண்டாடும் "பிக் பாக்கெட்'' காரர்களுக்குப் பயந்தோ என்னவோ பகலிலும் வெளிச்சம் போட்டிருந்தனர் இரயிலில். என் எதிரே உட்கார்ந்திருந்தவர் பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு பையனுக்கு புத்திமதி கூறிக்கொண்டிருந்நார். "நல்லா படிக்கணும்; கண்டபடி சுத்தக்கூடாது" என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார். அவனே தலை குனிந்தவாறே என் கையிலிருந்த அட்டைப்பட நட்சத்திரத்தை அணு அணுவாகச் சுவைத்துக்கொண்டிருந்தான்.

"நீ இன்னும் சிறுது நேரத்தில் செல்லவேண்டும் என்பது போல" மணி அடித்தான் போர்ட்டர். ஊர் தேடி வந்திருக்கும் விருந்தாளியிடம் இவ்விதம் சொல்கிருனே என்று கொஞ்சம்கூட வெட்கப்படவில்லை எக்ஸ்பிரஸ். ஹாய்யாக கொஞ்சம் தண்ணீர் சாப்பிட்டுவிட்டு ஜாலியாக ஒரு மோது மோதி நின்றது எக்ஸ்பிரஸின் இன்ஜின். இன்னும் ஐந்தாறு நிமிடங்களில் மாயூரத்தைவிட்டு அகன்றுவிடுவேன் அல்லவா? அதனுல் கடைசித் தடவையாக பிளாட்பாரத்தைச் சுற்றி பெரியதொரு சுற்றுப் பிரயாணம் செய்தன என் கண்கள். அப்போது .......

ஒரு கையில் குழந்தையுடனும், மற்ருெரு கையில் பூமி யின் கவர்ச்சி சக்தியால் கழுத்திலிருந்து பூமி நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் அங்கவஸ்த்ரத்துடனும், வெகு வேக மாக வண்டியை நோக்கி வந்துகொண்டிருந்தார் ஒருவர். வந்த வேகத்தில் அவரின் ஒரு கால் செருப்பு அறுத்துக் கொண்டு 'ஒத்துழையாமை' இயக்கத்தில் சேர்ந்துவிட்டது. "இத்தனை நாட்களும் உன்னைத் தாங்கினேனே; இப்போது என்னைத் தாங்கு" என்று பொதுவுடமை வாதம் பேசியவாறே ஐந்தடி தூரத்திற்குச் சென்று சவால் விட்டது அந்தச் சிறு மதி படைத்த செருப்பு! அதன் சவாலை ஏற்கக்கூடிய நிலை யிலா அவர் இருக்கிறுர். 'காலக்கோளாறி'ஞல் அதற்குப் பணிந்தார். ஒரு கையில் தாங்கியிருந்த அங்கவஸ்திரத்தை வெகு வேகமாகக் கழுத்தில் சுற்றிக்கொண்டார். சுற்றிய வேகத்தில் கையிலிருந்த குழந்தையையும் வைத்து கழுத் தோடு சுற்றிக்கொண்டார். குழந்தை 'வீல்' என்று சுமார் ஆறரைக் கட்டைக்கு அப்பால் அலறியது.

"அப்பா இல்லே; அம்மா இல்லை;" என்றவாறே ஒற் றைக் கால் செருப்புடன் ஐந்தடி தூரத்தில் அசையாது கிடக்கும் மற்ருெரு செருப்பினை நோக்கி நொண்டிக்கொண்டே வந்தார். அந்தச் செருப்பைக் காலில் போட்டுப் பார்த்தார். கிழக்கிந்தியத் தீவுகள்போல 'கன்னு பின்னு' வென்று அறுந்து கிடந்தது. கையிலெடுத்துக்கொண்டு போய்விடலாம் என்று வெகு வேகமாகக் கீழே குனிந்தார். பாவம்... திரைப்படத் தில் காதலன் வரவு காணு காதலி, பொல பொலவென விடும் கண்ணீர்போல கல, கலவென ஒலித்துக்கொண்டே சட்டைப் பையிலிருந்து கீழே விழுந்தன காசுகளும், பணங்களும்! அப்போது அவர் முகத்தைப் பார்க்கவேண்டுமே.... சிரிக்கத் தெரியாத சிங்மன்ரீ சீற்றங்கொண்ட நேரத்தில், தேள் ஒன் றும் கொட்டிவிட்டால் எப்படியிருக்கும்? அதுபோல இருக் கும் என்ருல் அதற்கு ஒரு திருத்தம் கொண்டுவரமாட்டீர் கள் என்று நினைக்கிறேன். காசு, பணம் எல்லாவற்றையும் சேர்த்து அள்ளினுர். கீழே விழுந்த பணங்களுக்கு வட்டி வேண்டுமல்லவா? அவைகள் பிளாட்பாரத்து 'தூசு தும்பட் டை' களாக வந்து அமர்ந்துகொண்டன அவர் பையில்!

பின்னுல் திரும்பினுரோ இல்லையோ ஆயிரமாயிரம் அணு குண்டுகளை மேலில் போட்டுக்கொண்டவர்போல் குதித்தார். "சீக்கிரம்; சீக்கிரம்;" என்று கத்திக்கொண்டே ஓடி வந்தார். அவருக்குப் பின்னுல் ஒரு போர்ட்டர் படுக்கை, ஈஸி சேர், ஒரு தகர டின் சகிதம் ஓடி வந்துகொண்டிருந்தான். அவனுக்குப் பின் அந்த மனிதரின் மனைவிபோலும் — கையிலே கூஜா, மற்றொரு கையில் குழந்தை முதலியவைகளைத் தாங்கிக்கொண்டு ஓடி வராமலும், நடக்காமலும் வந்துகொண்டிருந்தாள்! இருவருக்கு முன்னர் (அவருக்குப் பின்னுல்தான்!) சுமார் ஐந்து வயது மதிக்கத்தக்க ஒரு பையனும், சுமார் நான்கு வயதுள்ள பெண்ணும் ஓடி வந்தனர். அவர்கள் எல்லாம் ஓடி வருவதே ஒரு ரயில் வண்டி வருவதைப் போலத்தான் இருந்தது. அந்த மனிதர்தான் அந்த வண்டிக்கு இன்ஜின்போல சத்தம் போட்டுக்கொண்டே வந்தார். இந்தக் காட்சியைக் காண கண்ணுயிரம் வேண்டியதேஇல்லை! ஓரிரண்டு இருந்தாலே போதும். அவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவும் நடந்தது.

ஓட்டப் பந்தயத்தில் கடைசிக்கண நேரத்தில் வெற்றி பெறவிழையும் போட்டியாளர்போல, வெகு வேகமாக திறந்திருந்த கதவின் வழியாக உள்ளே ஏறினுர். அவரையும் முந்த நினைத்த அவரது ஐந்து வயதுப் பையன், அவரது வேட்டியைப் பிடித்துக்கொண்டே பின்னுல் ஏற, பாவம் தடுக்கிவிடப்பட்டார். தடுக்கிவிடப்பட்ட அவர் 'தடால்' என்று வழுக்கி விழவில்லை. கதவில் தலையை மோதிக்கொண்டார். அதைத் தடவிவிட்டுக்கொள்ள அவருக்கு நேரம் இல்லை. 'சீ கழுதை' என்று கத்தினுர். ஏறிய பையன் இறங்கிவிட்டான். அவர் கம்பார்ட்மெண்டிற்குள் மேலும் ஒரு அடி எடுத்துவைத்தார். அப்போது அவரை வைத்து '(பச்சைக் குதிரை' தாண்டிக்கொண்டு வந்து விழுந்தது ஒரு படுக்கை. அது பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருந்த போர்ட்டரிடமிருந்துதான் வந்திருக்கவேண்டும் என்பதில் எள்ளளவு என்ன, அணுவளவும் ஐயமில்லை.

ஒரு வழியாக உள்ளே வந்த அவர், காலியாக இருந்த ஒரு பெஞ்சியின்மேல் வைக்க குழந்தையை இறக்கிஞல் முடியவில்லை. அங்கவஸ்த்ரம்தான் குழந்தையை கழுத்தோடு

கட்டிக், கைது செய்திருக்கிறதே! அங்கவஸ்த்ரத்தை எடுத்து விட்டு குழந்தையை எடுத்துப் பெஞ்சியின்மேல் வைத்துவிட்டு வாயிலுக்கு வந்தார். வந்தவரோ திரும்பிப் பார்த்தார். குழந்தை நகர்ந்து நகர்ந்து ஜன்னலருகில் சென்று அங்கவஸ்திரத்தை கொஞ்சங்கொஞ்சமாக ஜன்னலுக்கு வெளியே விட்டுக் கொண்டிருந்தது. திரும்பவும் ஓடினுர். அங்கவஸ்திரத்தை எடுத்துவிட்டு ஜன்னலையும் சாத்திவிட்டு, எதிரே இருந்த இரண்டு பெஞ்சுகளையும் தாண்டிக்கொண்டு ஓடி வந்தார். குழந்தையோ, அப்ளாஸ் பெற்றுவிட்ட அப்பாவி பாடகரைப் போல் தன் கச்சேரியை கனஜோராக மேல் ஸ்தாயில் தூக்கிப் பாட ஆரம்பித்தது!

"இறக்குங்க சாமி; நேரமாயிட்டது" என்று கொண்டே ஒற்றைக் கையை நீட்டினுன் போர்ட்டர். அவனது கையோடு ஒன்றி உறவாடிக்கொண்டிருந்த 'ஈஸி சேரை' இழுத்து வண்டியினுள்ளே போட்டார். அவர் இழுத்த வேகத்திலே போர்ட்டரின் காக்கிச் சட்டையை பதம் பார்த்த வண்ணமே வந்து விழுந்தது அந்த ஈஸி சேர். பிறகு போர்ட்டரின் தோளில் "தைத்தா; தகிடுதா" என்று கதகளி நடனம் புரிந்துக்கொண்டிருந்த ஒரு தகர டின்னை திடீரென்று பெட்டியினுள் தூக்கிப்போட்டார். அந்தடின் என்ன செய்தது தெரியுமா ?

அன்று, அவர், அவர்முகத்தில்தான் விழித்திருக்க வேண்டும்! பின் என்ன ? அந்த டின்னுமா தனக்கும் புரட்சியில் பங்குண்டு என்பதைக் காட்டவேண்டும் ? அதற்கு இதுதானு நேரம் ?........ தூக்கிப்போட்ட வேகத்தில் டின்னின் மேல் மூடி கழன்று கொண்டுவிட்டது. "விடுதலை; விடுதலை" என்ற பாரதியாரின் பாடலைபாட மறந்தவாறே டின்னிலிருந்து படியிலிறங்கி அவசரமாக பிளாட்பாரதத்தில் வந்து அமைதியாகக் கலந்து உருண்டோடின டின்னிலிருந்த "கருவடாங்கள்". உருண்டோடிய கருவடாங்களை ஒன்று சேர்த்துவைக்க விரும்பிய பையனை அதட்டியவாறே அவன் ஒற்றைக்கையைப் பிடித்து தூக்கி உள்ளே விட்டார். பெண்ணேயும் தூக்கி உள்ளே விட்டார். மனைவியின் கையிலிருந்த கூஜாவையும் குழந்தையையும் வாங்கிஉள்ளேவைத்தார். இதற்குள் அவருக்கு பலகைபரிசாக அளித்த அடி, கதவின் மோதல் முதலியன கணக்கிலடங்காததாகும். கொரியா போரீலீடுபட்டு

சிரியாவுக்கு ஓடியவன் கூட இவ்வளவு மோதலுக்கும் அடிக்கும் உட்பட்டிருக்கவே மாட்டான் !

பிறகு " உள்ளே ஏறிவா " என்று மனைவியை அழைத்தார். வாசலிலேயே வைக்கப்பட்டிருக்கும் சாமான்களைக் காட்டி " இவ்வளவையும் தாண்டிக் கொண்டு எப்படி ஏறுவதாம் ? " என்ற கேள்வியைப்போட்டாள் அந்த அம்மையார். இந்த நேரத்தில் அவரை இந்தமாதிரியெல்லாம் கேள்வி கேட்டால் எப்படி இருக்கும் ? கோபம் வருமா ? வராதா ? ஆனால் வருகின்ற கோபத்தையெல்லாம் அங்குகாட்ட முடியுமா ? ஆதலால் அவர் " இமயத்தில் எல்லாம் ஏறுகின்றார்களாம் ....... நீ என்னவென்றால் ?" என்று அரைமனதுக் கேலியுடன் கைகொடுத்து ஏற்றிவிட்டார். எல்லோரும் ஏறிவிட்டார். இரயிலும் அவர்களுக்குக் கிடைத்து விட்டது. இனி அவர்கள் இறங்கினால் ஒழிய இரயில் அவர்களை விடாது.

இப்போது அவரது முகத்தைப்பார்க்க சுமார் பதினாறாயிரத்து சொச்சம் கண்களாவது தேவையாகலாம் ! அடடா ! அன்றலர்ந்த செந்தாமரை என்பார்களே........ இல்லை இல்லை, என்றோமலர்ந்த செந்தாமரையை ஏராளமாகவும் தாராளமாவும் பார்த்திருக்கிறேன் ஒழிய அன்றலர்ந்த செந்தாமரையைப் பார்த்ததே கிடையாது. வேறு எப்படித் தெரியுமா இருந்தது ? பார்மோசா தீவிலே பதுங்கி வாழும் சியாங்கிற்கு பரந்த சீனு கிடைத்துவிட்டால் எப்படி இருக்கும்? ஐசனோவர் ஆட்சியிலேயே அமெரிக்கா அகில உலகையும் ஆதிக்கம் செலுத்தும் வல்லரசாக மாறினால், அவர்முகம் எப்படி இருக்கும் ? அப்படியேதான் இருந்தது இரயிலைப்பிடித்து விட்ட இவர்முகம்.

போர்ட்டர் " சில்லரைகுடுங்க " என்று கத்தினான். பையில் கையை விட்டு சில்லரையெல்லாம் எடுத்தார், ஒரு ரூபாய்களும் எட்டணைக்களுமாக இருந்ததோ என்னவே முக்கால் ரூபாய் தரவேண்டிய போர்ட்டருக்கு நாலணைவாக சில்லரை இல்லை. " தா, சாமி நேரமாவுது " என்று துரிதப்படுத்தினான் போர்ட்டர். " யாரிடமாவது எட்டணைவிற்கு சில்லரை இருக்கிறதா " என்று பொதுவாக எங்களை நோக்கிக்கேட்டார்

எல்லோரும் அவரை அதிசயப் பிரயாணியாகப் (உண்மையில் அவர் ஒரு அவசரப்பிரயாணிதான்!) பார்த்தனரேயன்றி சில்லறை யாரும் தரவில்லை, நான் கூடத்தான்!

திடீரென்று எதிரே பிளாட் பாரத்திலிருந்த 'டீ ஸ்டாலு'க்கு சில்லறை மாற்ற ஓடினார். 'இப்போதே கிளம்பவேண்டும்" என்பதுபோல் இரண்டாவது மணியும் அடித்தது. "உடனே கிளம்புக" என உத்திரவிட்டார் கார்டு. "இதோ கிளம்பி விட்டேன்" என்பது போல் ஊளையிட்டுக்கொண்டே கிளம்பிற்று இரயில். கூலி தந்துவிட்ட அந்த அப்பாவி மனிதர் ஓடிவந்து வண்டியினுள் ஏறப்பார்த்தார். அதுதான் கடைசி வண்டி. பாவம்; முடியவில்லை. பிளாட்பாரத்தில் நின்றவாறே கையையும் காலையும் உதறிக்கொண்டார். என்ன செய்து என்ன பண்ணுவது? ஆண்டாண்டுதோறும் அலறிக்குதித்தாலும் தாண்டிய இரயில் வண்டி மீண்டும் வந்திடுமா? அவர் வண்டியை விட்டு விட்டார். இல்லை-வண்டி அவரை விட்டுவிட்டது. அந்த அம்மையாரோ சிறுபிள்ளை போல சிணுங்கி அழ ஆரம்பித்துவிட்டார். பக்கத்திலிருந்த ஒரிருவர் ஏதோ கூறி சமாதானம் செய்துக்கொண்டிருந்தனர்.

மல்லியம் ஸ்டேஷனில் வண்டி வந்து நின்றது. நானும் இறங்கினேன். அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் எனக்கு நிச்சயமாக-கண்டிப்பாக-தெரியாது. "சும்மா சொல்லய்யா", என்று கேட்கிறீர்களே தெரிந்தால் தானே சொல்லமுடியும்? தெரியாததையா சொல்லமுடியும்? "இது வரை நடந்ததெல்லாம் தெரிந்தாய்யா சொன்னீர்? நம்மகிட்டையே 'கப்ஸா' விடுறீயே; இப்படியும் நடக்குமா?" என்று வேறு கேட்கிறீர்களே, நான் தான் கேட்கிறேன் - இப்படி ஏன் **நடக்கக்கூடாது?**

---

**"இதயத்தில் நல்லுணர்ச்சிகள் ஏற்படுவதைத் தவிர ஏனைய வெல்லாம் பேதமை என்று கருதுவதே கவிஞனின் நோக்கமும் தொழிலுமாகும்"** —*ஸ்காட்*

# விடுதி வாழ்க்கை

"சொ. ஆனந்தன்"

காலை மணி அலறும்
கசப் புடனே எழுவேன்
காப்பி அருந்தி விட்டுக்
கணக்குப் போட நினைப்பேன்.

கணக்குப் போட மனமும்
விரும்பாமல் இருக்குங் கால்
அக்கம் பக்க மெங்கும்
அரட்டை ஒலி கேட்கும்.

"ஏதடா இது தொல்லை
படிக்கவோ வழி இல்லை
எப்போது தொலை வேனோ
இந்த அறையை விட்டு?"

என்று முணு முணுத்தே
அடுத்த அறை செல்வேன்
படிக்க வேண்டி யிருப்பினும்
பேச்சில் மனம் செல்லும்

அடக்க சென்ற நானும்
அரட்டையில் ஆழ்ந் திடுவேன்
அடித் திடுவான் மணியை
'அடடா' வென்றெ ழுவேன்

இட்லியோ பூரி யையோ
புட்டுப் போட்டுக் கொண்டு
ஆறிப்போன காப்பி யையும்
விட்டுக் கட்டிக் கொள்வேன்.

கல்லூரி மணி இசைக்கும்
கவலையுடன் செல்வேன்
அங்கும் ஏதோ நடக்கும்
அதையும் கேட்டு மீள்வேன்

உணவு அருந்தி மீண்டும்
கல்லூரிக்குச் செல்வோம்
அடிப்பான் மீண்டும் மணியை
ஆனந்தமாய் மீள்வேன்.

ஆடி ஓடிக் களைத்துப்
பாடி மகிழ்ந் திடுவேன்
நாடிப் படிக்கச் சென்றால்
காசி மணியை அடிப்பான்

அரட்டை ஒலிக ளிடையே
அங்கே உணவை உண்டு
இனிய தோழர் களுடனே
இனிதாய் மீண் டிடுவேன்.

மணியோ எட்டு அடிக்கும்
உடனே பாலும் வருமே
இனிய பாலைப் பருகி
இனிதாய் தூங்கச் சென்றிடுவேன்.

ஐயோ! இதுஎன்ன தொல்லை?
கொசுகு! மூட்டைப் பூச்சிமயம்!
ஐயையோ! விதியே! இங்குத்
தூங்கக் கூடத் தடையா?

நித்தம் நித்தம் இங்ஙனம்
வாழ்ந்து காலம் கழிக்கும்
விடுதிவாழ் மாண வனின்
வாழ்க்கை இது ஐயா.

# "புத்தகப் புழு"

அ. இராமையன் II M P C/T.

அவன் ஒரு "புத்தகப்புழு". உலகத்தின் செப்படிவித்தை களை அறியாத ஒருபேதை. தன் பாடப் புத்தகங்களின் முதல் வரியிலிருந்து கடைசி வரை அப்படியே ஒப்புவிப்பான். ஆனால் ...... அவனுடைய நிலைமையை நோக்க, அவனால் வாழ்க்கை யிலே முன்னேற முடியுமா? உலகின் ஜகஜாலப் புரட்டுகளி லிருந்து அவன் தப்பிக் கரைசேரத்தான் முடியுமா? நிச்சய மாக முடியாது. உலகியல் அனுபவம் கொஞ்சமாவது வேண் டாமா? யாரைப்பற்றி இதையெல்லாம் கூறுகிறேன் என்று எண்ணுகிறீர்கள்? எல்லாம் நம் வகுப்பு சாம்பசிவத்தைப் பற்றித்தான். என் அப்படிக் கூறுகிறேன்? கூறுவதற்குக் காரணம்...........

அன்று சாம்பசிவத்திற்கு " பிஸிக்ஸ் பிராக்டிகல் " வகுப்பு நடக்கவேண்டிய நேரம். அன்று அவன் ரூமில் நுழையும் போதே வெகு "டிப்டாப்"பாக கர்வத்தோடு தான் நுழைந்தான். வகுப்பிலே முதல் மார்க்கு வாங்கினால் அதற்காக இவ்வளவு கர்வமா? அன்று அவனுக்கு இருந்த "பிராக்டிகல்" உலோ கங்களின் "அடர்த்தி" கண்டுபிடிப்பது. சுலபமானது தான். தேவையான கருவிகளைப் பெற்றுக்கொண்டு ஒழுங்காகத் தன் வேலையில் முனைந்தான் சாம்பசிவம். ஒருவாறாக........ முடிந் தது சாம்பசிவத்தின் வேலை. வந்தது விடை 19. "டேபிள்ஸை"ப் புரட்டினான். 19க்கு நேரே "தங்கம்" என்றிருந்தது. "திடுக்" கென்றது சாம்பசிவத்துக்கு. " அடர்த்தி "க்கண்டுபிடிக்கக் கொடுத்திருப்பது தங்கம் பூரித்தான்; துள்ளிக்குதித்தான். அருமையான — ஆனால் விரோதமான — மனச்சாட்சிக்கு எதி ரிடையான — ஓர் எண்ணம் உதித்தது அவன் மனதிலே.

" இதை எடுத்துச் சென்றுவிட்டால் என்ன? சேசே........ இயற்கைக்கு விரோதமாச்சே...... என்ன முட்டாள் தனம். பள்ளிச்சொத்தை நாம் திருடுவதா........ வேண்டவே வேண் டாம் " என்று அவனுடைய மோசமான எண்ணத்திற்கு எதிராக வாதாடியது அவனுடைய உள்ளத்தின் களங்கமற்ற

ஒரு பகுதி. ஆனால் மற்றப்பகுதியோ........ "இந்தக் கட்டி பத்துப் பதினைந்து பவுன் நிறை இருக்குமே! அதனுடைய விலை என்ன! குறைவான விலைக்கு வாங்கினாலும் 500 ரூபாய்க்கு அல்லவா வாங்கவேண்டும்? ஆஹா! இந்தப் பவுனைக்கொண்டு எனக்கு என்னென்ன நகைகள் செய்துகொள்ளலாம்............" என்றும் அவனுடைய எண்ணத்திற்குப் பல்லவி பாடியது அவனுடைய உள்ளத்தின் மற்றப் பகுதி. கடைசியிலே அவன் தீர்மானித்தது தான் என்ன? அந்தக் கட்டியை எடுத்துச் சென்று விடுவதென்று. "அட்டெண்ட"ரிடம் போய், தன்னைல் அடர்த்தி கண்டுபிடிக்க வேண்டிய பொருள் காணமல் போய் விட்டதாகவும், எழுதிக்கொள்ளுமாறும் சொல்லி, தன் கையெழுத்தைப் போட்டுவிட்டு மெதுவாக நழுவினன், உபாத்தியாயரைப் பார்க்காமல் கூட.

போகும் வழியிலே பையிலே கிடந்த காலணவை எடுத்து அதற்கு வெற்றிலை சீவல் வாங்கிப் போட்டுக்கொண்டு நேரே வீட்டைநோக்கி நடையைக்கட்டினன். வீட்டில் நுழையும்போது அவனுடைய அம்மா "வாடாப்பா சாம்பு....... எது வெத்திலைப் பாக்கெல்லாம் போட்டிருக்கா போலிருக்கு! என்ன சமாச்சாரம்?' என்றுகேட்டுவிட்டு, மனதுக்குள் 'பயல் பெரியவனயிட்டான் நாம் என்னசொல்வதற்கிருக்கு; என் சொல்லை இப்ப கேக்குருன?" என்று எண்ணிக்கொண்டு தன் வேலையிலே முனைந்து விட்டாள். சாம்பு தன் புத்தகங்களைத் தூக்கி மேஜை மேல் எறிந்துவிட்டு, தன் அம்மாவிடம் மெள்ள வந்து "அம்மா அம்மா இங்கே பாரம்மா" என்று காட்டினன் அந்தக்கட்டியை. என்னடாது? என்ருள் அவன் தாய். "பவுன் அம்மா பவுன்" என்று கூறிவிட்டு அதோடு நிறுத்திக்கொண்டான........ அது தானே இல்லை! "இதற்கு எனக்கு ஒரு கடிகாரச் செயின், ஒரு மோதிரம், மைனர் சங்கிலி ஒண்ணு......." என்று அடுக்கிக் கொண்டே சென்றுன். "எதுடா இது?" என்ருள் அவன் அம்மா. "ரோட்டிலே வந்தப்ப, ஒரு கடுதாசியிலே மடிச்சு கிடந்துச்சு அம்மா" என்று ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு, தன் அம்மாவுக்குச் சரியாகக்கூட காட்டாமல் ஓட்டமாக ஓடி விட்டான்.

சாம்பசிவத்துக்கு இரவெல்லாம் தூக்கமே வரவில்லை. எப்படிவரும்? "தங்க கடிகாரச்செயின், மோதிரம், மைனர்

சங்கிலி இவைகளை அணிந்துக்கொண்டால் "மாப்பிள்ளை" மாதிரியல்லவா இருப்பேன்" என்ற இன்ப எண்ணத்துடன், படுக்கையிலே புரண்டு, புரண்டு படுத்தான். காலை மணி 5-30 ஆயிற்று. எழுந்துவிட்டான் சாம்பசிவம். பல்கூடத் தேய்க்காமல் அடுத்தத்தெரு "பத்தர்" வீட்டுக்குக் கிளம்பிவிட்டான். பத்தரை தூக்கத்திலிருந்து எழுப்பினன். ஒரு சோம்பலை முறித்துக்கொண்டே பத்தர் 'டுக்'கென்று எழுந்திருந்தார். 'என்ன தம்பி என்ன சமாச்சாரமென்று ஒரு கொட்டாவியை விட்டுக் கொண்டே கேட்டார். "அம்மா உங்களை அழைச்சுண்டுவரச் சொன்னு; நகைகள் செய்யக்கொடுக்கணுமாம்........... பவுன் எல்லாம் வாங்கியாய் விட்டது.......... நீங்கள் வரவேண்டியது தான் பாக்கி" என்று ஒன்று விடாமல் பொரிந்து தள்ளினன். இதைக்கேட்ட பத்தர், மனதிலே, "சரி இன்றைக்கு நரிமுகத்திலே தான் விழிச்சிருக்கோம்........" என்று நினைத்துக்கொண்டு, "சரி தம்பி இதோ இப்பவே வந்து பவுனை வாங்கிக்கொண்டு வந்துடறேன்" என்ருர். ஆனல் சாம்பசிவம் குறுக்கிட்டு "பவுனை இங்கே கொடுக்கிருப்போல இல்லை........ நீங்கள் உங்கள் சாமான்களையெல்லாம் கொண்டுவந்து எங்கள் திண்ணையிலேயே 'பட்டரை'வைத்து வேலையைச் செய்து கொடுத்துவிடும்படியாக அம்மா சொன்னள்" என்ருன். இதைக்கேட்டவுடன் "அதுவும் சரிதான்........ அங்கேபோனல் கூலியையும் கண்டிப்பாகக் கேட்கலாம்" என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு, "சரி, நீ போ தம்பி நான்வரேன்" என்று சாம்பசிவத்திடம் கூறினர். சாம்பசிவம் இன்பக்கரையையே அடைந்தவனய் வீட்டுக்குத் திரும்பினன். அன்று பள்ளிக் கூடத்துக்கு "லீவு" போட்டுவிட்டான். மோதிரம், செயினுக் கெல்லாம் அளவு கொடுக்கவேண்டாமா?

ஆயிற்று.......... சாமான்களையெல்லாம் சாம்பசிவத்தின் திண்ணையில் இறக்கிவிட்டார் பத்தர். அவர் தன் மகன் தலையிலும் சில சாமான்களைத் தூக்கிவிட்டார். பத்தர் மெதுவாக சாம்பசிவத்தின் அம்மாவைக் கூப்பிட்டு, "அம்மா உங்கள் இஷ்டப்படியே நகைகளை உங்கள் முன்னிலையிலேயே', உங்கள் திண்ணையிலேயே செய்கிறேன். அதற்குத் தகுந்தபடி கூலியை "கரெக்டா" கொடுத்துடனும் என்ருர். சரியென்று கூறினள் தாய். "இங்கே வா தம்பி" என்று சாம்பசிவத்தைக் கூப்பிட்டு கடிகாரச் செயினுக்கு கை மணிக்கட்டுச் சுற்றளவு

வையும், மோதிரத்துக்கு மோதிரவிரல் சுற்றளவையும் எடுத்துக்கொண்டார் பத்தர். " சரியம்மா அளவையெல்லாம் எடுத்துக்கொண்டேன்; பவுனைக் கொண்டுவாருங்கள் " என்றார். " ஏண்டா சாம்பு எடுத்தாந்து கொடண்டா. சரியா என் கண்ணுலகூட காட்டமாட்டேன்னுட்டன் " என்று கூறினாள் சாம்பசிவத்தின் தாய். சாம்பசிவம், தான் நன்ருக இரண்டு மடிப்புகளுக்குள் மடித்து, " டிரங்குப் பெட்டிக்குள் பத்திரமாக வைத்திருந்ததை அப்படியே எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான் பத்தரிடம்.

பத்தர் ஒரு கனை, கனைத்துக் கொண்டு உரைகல்லை எடுத்து பக்கத்தில் வைத்துக்கொண்டு பொட்டலத்தைப் பிரித்தார்........ 'பஹீ'ரென்றது அவருக்கு. " என்னம்மா இது வேடிக்கையாயிருக்கு, இது'செம்பு' உலோகமில்லை. தவறிப்போய் பிள்ளை பெட்டியிலே இருந்து வேறே பொட்டலத்தை எடுத்துக்கிட்டு வந்திருக்காப்போல இருக்குது " என்ருர்.

' குபீ ' ரென்று வியர்த்தது சாம்பசிவத்திற்கு. " என்ன ? செம்பா ? " என்று, கேட்டபடியே தன் 'ரூமு'க்கு ஓடி, 'பிராக்டிகல் ' நோட்டை எடுத்தான். கணக்கை மறுபடியும் போட்டுப் பார்த்தான். விடை 9 வந்தது. தலையிலே கைவைத்துக் கொண்டு கல்லாய்ச் சமைந்துவிட்டான் சாம்பசிவம் என்னும் அந்தப் " **புத்தகப் புழு.** "

---

**" நல்ல மேற்கோள் அறிவாளி கை வைரமோதிரம்,**
**அறிவிலி கைக் கூழாங்கல் "** **—ஜே. ரூ.**

# சமுதாயமும் மாணவர் கடமையும்

ப. குணசேகரன்.

மானம், ஒழுக்கம், அன்பு, கல்வி, பொறை என்னும் பல்வகை அழகிய வர்ணக்குழம்புகளால் வரைந்தெடுக்கப் பட்ட சிறந்த ஓவியமே மனிதர். அத்தகைய மக்கள் இணைந்து வாழும் பெரியதொரு கூட்டத்தைத் தான் சமு தாயம் அல்லது சமூகம் என்கின்றோம். பலவகைப்பட்ட மக்கள் எனும் மணிகளால் கட்டப்பட்ட எழிலரங்கே சமூகம். ஆசிரியர்கட்கு " இடுக்கண் வந்துழி உடுக்கை இழந்தான் கைபோல ", உதவியும், ஒண்பொருள் கொடுத்தும், முனி விலாது அவர்கள் கற்பிப்பவைகளைக் கசடறக்கற்றும், கற்ற படி நின்றும் ஒழுகுபவரே சிறந்த மாணவர். பல்வகை வர்ணப் பூக்களால் தொடுத்த மாலைபோல், பல்வகை கலைகளும் நிறைந் தொழுகுபவர் மாணவர். இத்தகைய மாணவரே பாழடைந்த சமுதாயப் பொற்சிலையைச் சீர்திருத்தும் சிற்பியாவர்.

இன்று நம் சமுதாயம் ஓர் ஆரணியமாக இருக்கின்றது, மெலியோரைத் தாக்கும் புலியாக இருக்கின்றனர் சிலர் பலர் பச்சோந்திகளாய், சிலர் ஓநாய்களாய் உள்ளனர். அவர்கள் கையில் சிக்கிய பூச்சிகளாய், ஆடுகளாய் வாழ்கின்றனர் பலர். எத்தனையோ குடும்பங்கள் எனும் குருவிக்கூடுகள் கொடியவர் எனும் குரங்குகளால் பிய்த்தெறியப்பட்டு இருக்கின்றன. வித வைகள் எனும் பைங்கொடிகள் மதியிலார் எனும் மதயானை களால் நசுக்கப்பட்டுக் கிடக்கின்றன. இத்தகைய காடு போன்ற சமுதாயத்தை எழிலொழுகும் பூங்காவைப்போல் ஆக்குவது மாணவர்களின் தலைசிறந்த கடமைகளில் ஒன்றாகும்

ஒருநாடு முன்னேற வேண்டுமானால் அந்தநாட்டுக் சமு தாயம் சிறந்ததாக இருக்கவேண்டும்; ஒரு வீடு முன்னேற இல்லாள் நல்லாளாக இருப்பதுபோல. சமுதாயம் முன்னேற வேண்டுமானால், மக்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயுள்ள தீய எண்ணங்கள், மூடப்பழக்கங்கள் நீக்கப்படல் வேண்டும்.

எனவே மாணவர்களாகிய நாம் கல்வி மிகுந்தவராய் இருத்தல் வேண்டும். கற்றபடி நிற்றல் வேண்டும். நாம் கல்விக்கண்ணைப்பெற்றால் தான், கல்விக் கண்ணற்ற குருடர்களுக்கு நாம் வழிகாட்ட முடியும். உலக இருளை நீக்க அருணன் ஒளி தேவை. அறியாமை இருளை நீக்க கல்வியறிவு தேவை.

" தொட்டனைத்து ஊறும் மணற்கேணி
மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு "

எனும் வள்ளுவர் வாக்குக்கொப்ப, அதிகமாய்க்கற்று மிகுந்த அறிவைப்பெற்றுத்துலங்கவேண்டும். இங்ஙனம் ஊறும் அறிவுச் செல்வத்தால் தான் மடமையெனும் வறுமையை ஒழிக்க முடியும். கற்றோர் இல்லாத சமூகம், நட்சத்திரங்கள் இல்லாத வான்; நல்வளங்கள் இல்லாத பாலை; உணர்வு அற்ற ஓவியம்.

ஆண், பெண் போன்ற உருவப்படங்களை ஒட்டி வேறுபாடு காட்டியிருந்தபோதிலும், அறியாதுநுழைந்து அவமானத்துடன் திரும்பும் மக்கள் பலர் நம் சமுதாயத்தில் நிறைந்திருக்கின்றனர். கைரேகையிட வண்டி மை தேடியலைகின்றனர். இவர்களெல்லாம் எங்கே வாழ்கின்றனர்? கல்வியிற் சிறந்த கம்பரும் உலகுக்கு அறத்தை வழங்கிய வள்ளுவரும் பிறந்த நம்தமிழ் நாட்டில்; பாருக்குள்ளே சிறந்த நம் பாரதப் பொன்னாட்டில் இத்தகைய மக்களுக்கு இரவுப் பாடசாலைகளை அமைத்து கல்வியினைக் கற்றுக்கொடுத்தல் வேண்டும். இப்பணியில் மாணவர்கள் மிக்க ஆர்வமுடன் ஈடுபடல் வேண்டும்.

மேலும் ஒழுக்கத்தை உயிரெனப் போற்றல் வேண்டும். "ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" எனும் அறவுரைக்கேற்ப, வாழ வழிகாட்டவேண்டும். கல்வி மட்டுமிருந்து ஒழுக்கமில்லாதவர், அழகுமட்டுமிருந்து மணமில்லாத ஊமத்தைப்பூவை ஒத்தோராவர்.

இன்று நாட்டிலே உணவுப் பற்றுக்குறை, பஞ்சம், பட்டினிச்சாவு, கொலை, கொள்ளை இவை பரவுகின்றன. வறியோர்கள் கொள்ளையடிக்கின்றனர். அரசாங்கத்துக்கு விரோதமாகக் கள்ளச்சாராயம் காய்ச்சி சிறையேகுகின்றனர். தகுதியில்லாதவர்களை அபேட்சர்களாக்கி ஓட்டளிக்கின்றனர் பணத்துக்காக. பின் நன்மைபெற இயலாது வாடுகின்றனர். பல்வகை நோய்களுக்கும் பலியாகின்றனர். ஏன்? உணவுப்பொருள் இல்லாத காரணத்தால்.

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு''

என்றார் வள்ளுவர். ஆனால் முல்லைக்குத் தேர் ஈந்த பாரியும் பெருந்தலைச்சாத்தனாருக்குத் தன் தலையைக்கொடுத்து வறுமையைப்போக்கத் துணிந்த குமணனும் பிறந்த நாட்டில், பசி என்று கூறிய இலங்கைக்குப் பன்னீராயிரம் தானியக் கலங்களைப் பரிசாக அளித்த சடையப்பர் தோன்றிய நாட்டில், பிற நாட்டு, உபயோகமில்லாத கோதுமைக்குக் காத்துக்கிடக்கின்றது நமது நாட்டுச் சமுதாயம் ஏன்? பரந்த நிலங்களும் உள; பயிரிட விவசாயிகளும் உளர். ஆனால் விவசாயிகள் நலமடையவில்லை. கொழுவில்லா கலப்பைகளும், கோணல் மிக்க மண்வெட்டிகளுமே அவர்கள் கருவிகள். எனவே ஆடுதுறையிலுள்ள ஆராய்ச்சிப்பண்ணைபோல் பல பண்ணைகளமைத்து, நூதன முறையில், புதிய மேல்நாட்டுக் கருவிகளைக்கொண்டு பயிரிட, பஞ்சத்தை ஒழிக்க நாமும் அரசியலாருடன் ஒத்துழைக்க வேண்டும்.

நீதியைக்காக்க உயிர்விட்டான் நெடுஞ்செழியன். கன்றினைக்கொன்ற குற்றத்திற்காகத் தன் பட்டத்துக்கு உரிய மகனைப் பார்மிசை கிடத்தித் தேரினை செலுத்தினான் மனுநீதி சோழன். அவர்கள் நாணும் வண்ணம் நீதி நம் சமுதாயத்தில் சீர்குலைந்துவிட்டது ஆதலால் வரலாறு கற்கும் மாணவர்கள் நீதியைக்காக்கவேண்டும்; நல்ல நீதிபதிகளாய், நற்குண ஆசிரியர்களாய் இருநது நீதியைப் புகட்டவேண்டும். கருப்பாய் இருக்கிறதென்பதற்காகக் கருங்குயிலைக் காகம் என தீர்மானித்துவிடக்கூடாது. "வான்கவிந்த வையகமெலாம் பெறினும் பொய்யோடிடைந்த சொல் கூறற்க '' எனும் நாலடியார்க்கேற்ப, "சமன் செய்து சீர்தூக்குங்கோல்போல் '' எனும் குறளுக்கேற்ப, நடுநிலைமை வகித்து நீதி வழங்கல் வேண்டும். பாலா கள்ளா என்று பார்க்க கண்களுக்குப் பழக்கம் வேண்டும். பொருளாசையால் நீதிதவறக்கூடாது. ஆசை, உள்ளக்கோட்டையில் கவலை இருளைப்போக்கி ஒளிவீசும் தீ. ஆனால் அளவுக்குமேல் சுடர்விட்டெரிந்தால் அவனையே அழித்துவிடும்.

சுதந்திரமுள்ள சமுதாயத்தில் வேலை செய்தும் கூலி கேட்க தைரியமில்லாத அடிமைகளைக் காண்கின்றோம். சுதந்திரம் சொல்லில் மட்டுமல்ல, செயலிலும் இருக்கவேண்டும்.

இன்னும் கற்ற மாணவிகளும் பரிசம் எனும் பெரும் பொருளுக்கு விலைக்கென்று விற்கப்படும் பசுக்களாகக்கருதப்படுகின்றனர். அவர்களுக்கும், சொத்துரிமை, கல்வி பயிலும் உரிமை, கருத்துக்கேற்ற கணவனைத்தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமைகளை வழங்க, மாணவர்கள் பெற்றோர் சங்கங்களை ஏற்படுத்தி அறிவுரை புகட்டல் வேண்டும். பெண் கல்வி பரவப்பாடுபடவேண்டும். கல்விக்கடவுள் யார் என்றால் கலைமகள் என்பார்கள். உன் மகளை ஏன் படிக்க வைக்கவில்லையென்றால் "அடுப்பூதும் பெண்களுக்குப்படிப்பெதற்கு"? என்று கேட்பார்கள். ரஸியாவும், ராணி மங்கம்மாளும் நாடாளவில்லையா ? ஒளவையாரும், வெண்ணிக்குயத்தியாரும் தமிழ்த் தாய் போல் பாராட்டப்படவில்லையா? தற்காலத்தில், சரோஜினி நாயுடுவும், விஜயலட்சுமிபண்டிதரும் போற்றப்படவில்லையா? பெண்கள் கல்வியறிவு மிகுந்தவர்களாக இருந்தால்தான் ஒளிரும் இல் விளக்காவர். ஜீஜிபாய் கல்வியறிவுடையவள். அதனால்தான் சிவாஜியும் சிறந்த, அறிவும், வீரமும் மிக்கவனாகி இந்து ராஜ்ஜியத்தைக் கண்டான்! நல்லாட்சி புரிந்தான் நம் சமூகத்தில், கற்காத பெண்மணிகள் இல்லை என்று கூறும் நிலையடையவேண்டும் நல்லோரைப் படைக்கும் தெய்வமாய் பெண்கள் துலங்கவேண்டும்.

சமூகத்தில் குலம், கோத்திரம், சட்டம் வந்தும் நீங்கியபாடில்லை, குலம் ஒரு தோகையாக இருக்கலாம். ஆனால் குணமிக்கோர் கரும்புபோல் கருதப்படுதல் வேண்டும் குலம் முட்செடியாக இருக்கலாம். ஆனால் அக்குலத்தில் தோன்றிய கற்றோர் ரோசாபோல் போற்றப்படவேண்டும். ஆடுகளைப் பலியிடுதல், முதலிய கொடுமைகளை ஒழிப்பது போல் இக் கொடுமைகளையும் ஒழித்தல் வேண்டும்.

இங்ஙனம் "எல்லோரும் ஓர் குலம்," எல்லோரும் ஓரினம் எல்லோரும் இந்நாட்டு மக்கள்;" என்னும் மக்கள் நிறைந்த சமுதாயமாகி, வீரமுடையவர்களாக வாழவேண்டும். ஒற்றுமை இலாத காரணத்தால்தான் கஜினிமுகமதும், கோரிமுகமதும் 17-முறைகள் இந்தியாவில் படையெடுத்து. கோவில்களைத் தகர்த்து பொன்னையும் பொருளையும் கவர்ந்து சென்றனர் என்ற வரலாறு இந்திய வீரத்திற்கு இழுக்கையும், பாரத நாட்டிற்குப்பழியையும் அளிக்கின்றது. எனவே நாட்டைக் காக்கும், சமூகத்தைக்காக்கும் இளைஞர் படையில் சேர்ந்து மாணவர்கள் தொண்டாற்ற வேண்டும.

சுத்தம், சுகாதாரமுறைகளை யறியாது, நோய்வாய்ப்படுவோர்கள், கடவுளைக்குறை கூறுகின்றனர். எனவே மாணவர்கள் செஞ்சிலுவைச் சங்கத்தில் சேர்ந்து நோயுற்றோரைக்காத்து, சமுதாயத்திற்கு நன்மைகள் பலபுரிய வேண்டும். காலரா, அம்மை முதலிய வியாதிகளின் தன்மைகளையும், பரவும் விதத்தையும், திரைப்படமூலமாகக் காண்பிக்கச் செய்து மக்களை-தாழ்ந்த சமுதாயத்தைத் திருத்த வேண்டும்.

மதுவருந்தி மாய்கின்றனர் சிலர். சூதாடிக்கெடுகின்றனர் பலர். எல்லாம் விதி என்று கூறிக்கொண்டு அநீதி வழியில் செல்லுகின்றனர் பலர். அவர்கட்கு நளனையும், பாண்டவர்களையும் துரியோதனனையும், ஹிட்லரையும் நினைவுறுத்தித் திருத்த வேண்டும். சமுதாயத்தில் நிறைந்துள்ள கொலை, களவுகள், காமம், குருநிந்தை எனும் பஞ்சமாபாதகங்களை யொழிக்க வேண்டும். இக்களைகள் ஒழிந்தாலன்றி சமுதாயப் பயிர் செழித்து வளராது.

நன்குகற்று வைத்தியர்களாகி வியாதியை ஒழித்தும், ஆசிரியர்களாகி அறிவைவளர்த்தும், பாவலர்களாகி, சீர்திருத்தப்பாடல்களும், குறள், நாலடியார் போன்ற சிறந்தநூல்களும் இயற்றி, இருண்டு கிடக்கும் ஆலயங்களைப்பழுது பார்த்து கலையரங்குகளாக்கியும், கல்வி நிலையங்களாக்கியும, தமிழை வளர்த்தும், பிறமொழிகளைக் கற்றும, கைத்தொழில்களைப் பெருக்கியும் சமுதாயத்தை முன்னணிக்குக் கொண்டு வருவது மாணவர் கடமையாகும். மேற்கூறிய சீர்திருத்தங்கள் நிறைந்த சமுதாயமே நல்ல சமுதாயமாகும். அஃது அன்றி கொடுமைகள் நிறைந்த சமுதாயத்தினர் தங்களை நாகரீகமுள்ளவர்கள் என்று வர்ணித்துக்கொள்வது பீங்கான் கற்களை வைரக்கற்கள் என்று வர்ணித்துக் கொண்டதை ஒக்கும். மனிதனின் குறிக்கோள் சிறப்போடு வாழ; சீரழிந்து மாள அல்ல. "எம்மதமும் சம்மதமே;" "யாதும் ஊரே யாவரும் கேளீர்" எனும் புதியதொரு சமுதாயத்தை நாட்டில் பரவச்செய்ய, அண்ணாமலைச் செட்டியார் அவர்களைப்போன்று கல்லூரியினைக்கட்டியும, சிவசாமி ஐயர் போன்று உயர்தரப் பாடசாலைகளை அமைத்தும், சமூகத்தில் வாழும செல்வந்தர்கள் உதவவேண்டும். அரசாங்கமும் இப்பணிகளில் ஈடுபட வேண்டும். மாணவர்களும் விளக்கேந்திக்கொண்டே கிணற்றில் வீழும் சமுதாயத்தினரைத் திருத்தி நற்புகழும், பெரும் பொருளும் ஈட்டிவாழ வேண்டும். இப்பணியில் ஈடுபடும் எல்லோருக்கும் வணக்கம்.

# " கண்கள் "

S. DORAIRAJAN, IV B. Sc.

அன்று மாலை மணி ஐந்து இருக்கும். அகண்ட காவிரியின் மணற்பரப்பிலே மனோஹர் மட்டும் தனித்து உட்கார்ந்து எதையோ, எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தான். அடிக்கடி அவன் கூர்மையான விழிகள் எதிர்க்கரையிலுள்ள மாடிவீட்டின் ஜன்னலை நோக்கிக்கொண்டிருந்தன. வான்மதி மேகத்திரையிலிருந்து மீள்வதும், மீண்டும் செல்வதும் போல, அந்த ஜன்னலில் கமலா வந்து காட்சி தருவதும், மறைவதுமாக இருந்தாள். இப்படிப்பட்ட உண்மையான இளங்காதலர்களின் முகத்தில் வருத்தத்தின் சாயல் படர்ந்திருப்பதைக்கண்டு நான் துணுக்குற்றேன். நெஞ்சிலே துணிவை வரவழைத்துக் கொண்டு அதன் காரணத்தை அறிய அவனை அணுகினேன்.

" வணக்கம்" மனோஹர் உங்களுக்கு தொந்திரவு கொடுப்பதற்கு மன்னிக்கவும்" என்றேன் நான் மெதுவான குரலிலே. " வணக்கம் தோழரே; நீங்கள் யார்? என் பெயர் எப்படி உங்களுக்கு தெரியவந்தது" என்றான் ஆச்சரியத்துடன்.

" நான்; நான்........... வந்து உங்கள் கல்லூரியில் உங்கள் வகுப்பிலேயே படிக்கிறேன்" என்றேன் தயக்கத்துடன். அப்படியா! " இதுவரை நான் உங்களைப் பார்த்ததே இல்லையே" என்றான் சிரித்தவண்ணம். கிட்டிய இந்த நல்ல சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு நான் வந்த வேலைக்குப் பீடிகைப் போட்டேன். " ஆமாம்! நீங்கள் எப்படி என்னைப் பார்த்திருக்க முடியும். உங்களுக்கு பொழுது விடிகிறது, பொழுதுபோவது எல்லாம் இந்த மணற்பரப்பிலே தானே" என்றேன். "ஆம் நண்பரே எனக்கு மணற்பரப்பைவிட்டு வேறெங்கும் போவதற்குப்பிடிக்கவில்லை. அப்படிச்சென்றாலும் என்னை ஏதோ ஒன்று என் அமைதியைக் குலைத்து என்னை பிரமைப்பிடித்தவன் போலச் செய்துவிடுகிறது" என்றான் மனோஹர் வருத்தமாக.

" இப்பமட்டும் என்ன சந்தோஷமாகவா இருக்கிறாய்! இல்லையே!! ஏங்கிக்கொண்டுதான் இருக்கிறாய். " " ஆம் நான்

ஏங்கினேன், ஏங்குகிறேன், ஏங்கிக்கொண்டே இருப்பேன் நான் மட்டுமல்ல, அதோ அந்த ஜீவனும் கூட" என்று மாடி. வீட்டு ஜன்னலில் நிற்கும் கமலாவைச் சுட்டிக்காட்டினுன். "உண்மையான காதலுள்ளம் படைத்த உங்களை ஏங்கித்தவிக்க விடும் அந்தக் கொடியது எது?" என்றேன் ஆத்திரமுடன்.

"அதுதானப்பா! அண்ட சராசரங்களையும, ஆட்டிவைக்கும், அழியாத ஜாதிவேற்றுமை. அந்த பயங்கரப்பேயின் வேகத்தை தணிக்க முயன்ற தலைவர்கள், மகாத்மாகாந்தி, ஆப்ரகாம்லிங்கன், பன்னீர்ச்செல்வம் இவர்களின் உயிரையே குடித்த அது எங்களை மட்டுமென்ன உலகத்தில் உலவவா விடப்போகிறது" என்றுன் கண்களில் நீர்ததும்ப.

"நான் முதன் முறையாக அவளைக்கண்டது சிற்பங்கள் நிறைந்த கோயிலின் வாயிலிலே, நவராத்திரி உற்சவத்தின் போது, அவள் மாம்பழக்கன்னங்கள், மரகதமேனி, கயற் கண்கள், நீண்ட கருங்கூந்தல், துடி இடை, இவைகள் என்னை சிலையாக்கின. அவளையே பார்த்து அசையாது நின்றேன். அவளும் அப்படியே என்னைப் பார்த்தாள். எங்கள் கண்கள் இரண்டும் சந்தித்து அவைகள் பாஷையில் ஏதோ பேசிக் கொண்டன. அதன் பலனுக விவரம் தெரியா அன்பு ஒன்று எங்கள் இருவர் உள்ளங்களிலும் வளரத் தொடங்கியது. நான் தினமும் கோயிலுக்குச் செல்ல ஆரம்பித்தேன். எதற்கு? அந்த சுந்தரவதியைக் காண்பதற்கு. அவளும் வருவாள். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வோம். ஒருவிதமான ஆறுதல் அடைவோம். நாளடைவில் எங்கள் உள்ளங்களில் உருவாகிய அன்பு வளர்ந்தது காதலாக மாறியது.

அன்று நவராத்திரி உற்சவத்தின் கடைசிநாள். அவளுடன் அன்று பேசிவிடுவது என்று துணிச்சலுடன் சென்றேன். அவளும் அன்று ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்ற நோக்கத்துடன் வந்திருப்பாளா போலிருக்கிறது. நான் அவளைப் பின் தொடர்ந்து சென்றேன். அவளும் என்னைத் திரும்பித்திரும்பிப் பார்த்து நடந்தாள். திடீரென்று மின்சார விளக்குகள் அணைந்தன. இருள் கவ்வியது. அப்பொழுது எனமார்பு மீது, ஒரு

பூங்கை துழாவுவதை உணர்ந்தேன். நான் மட்டும் என்ன! உணர்ச்சியற்ற மிருகமா! என் கைகளை எட்டி நீட்டினேன். அவள் மெல்லிய உடம்பு தட்டுப்பட்டது. ஆகா! அந்த ஒரு கணநேரத்திலே நானடைந்த இன்பம், இவ்வளவு அவ்வளவு என்று எட்டிலே தீட்டமுடியாது. விளக்குகள் மீண்டும் எரிய ஆரம்பித்தன. அவள் கேட்டாள், உங்கள் பெயரென்ன ? என்று தன் குயிலினும் இனிய குரலினுல். "மனோஹர்" என்றேன். பிறகு இருவரும் பிரிய மனமில்லாமல் பிரிந்தோம். என்சட்டைப்பையில் ஒரு சிவப்புக் கவர் இருப்பதைக்கண்டேன் பிரித்தேன். படித்தேன். ஆம் ....... அந்த தித்திக்கும் தேன் மொழியாள் எழுதியிருந்தாள்—மணிமணியாக அவளைப்பற்றி.

அவள் பிறந்தப்பொழுதே தாயைப்பறிகொடுத்த அபாக்கியவதி. அவள் தந்தை நரசிம்மய்யரே அவளுக்குத் தாயாகவும் இருந்து வளர்த்து வந்தார். இப்பொழுது அவளுக்கு வயது பதினெட்டு. பருவ ஏணியின் உச்சியில் ஏறிநிற்கும் அவளுக்கு வரன் வேட்டையில் இறங்கி, அவர் தங்கையின் மகன் ராஜாராமனை தேர்ந்தெடுத்து வெற்றியோடு திரும்பினுர் நரசிம்மய்யர். திருமணத்தை தை மாதத்தில் நடத்தப்போவதாக கமலாவிடம் கூறினுர். ஆனுல் அவள் ஒன்றும் அவரிடம் கூறவில்லை எங்கள்வேருன்றியக் காதலைப்பற்றி; ஏன் தெரியுமா? அவள் அப்பா ஒரு வைதீகர், முன்கோபக்காரர். அதனுல் தான் எழுதியிருக்கிருள் ஒரு வழிதேடச்சொல்லி. "நானும் இன்றுவரை ஒன்றும் செய்யாமல் உட்கார்ந்திருக்கிறேன். இன்னும் சரியாக பதினைந்து நாட்கள் தான் இருக்கின்றன, அவள் திருமணத்திற்கு" என்ருன் கவலைத்தோய்ந்த குரலிலே.

இதைக்கேட்டு இந்த உலகத்தையே மறந்து உட்கார்ந்திருந்த என் தோள்களை யாரோ பிடித்து உலுக்கினுர்கள். வேறுயாருமில்லை. கமலாவின் கணவனுகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜாராமன் தான் அது. " வாங்க கலியாணமெல்லாம் எப்படியிருக்கிறது" என்றேன். "அதுவா! எனக்கு வெகுதூரத்திலும், அவளுக்கு வெகு சமீபத்திலும் இருக்கிறது " என்ருன். " என்னப்பா! புதுமாதிரியான புதிர் போடுகிருய்" என்றேன். " அதெல்லாம் இருக்கட்டும் ஆஸ்டலில் மனோஹர் என்று யாராவது இருக்கிருர்களா?" என்று கேட்டான் ராஜாராமன் "இதோ! இருக்கிருரே வருத்தத்துடன் இவர்தான்" என்றேன். அவ்வளவு தான். "மனோஹர்! நீ இனி வருந்தவேண்டாம்.

உன் வருத்தங்களைப் போக்குவது என்கடமை" என்று உணர்ச்சி வசத்துடன் கூறினன் முன்பின்பழகாத அவனிடம், பழகியவன் போல. "என்னப்பா! எதற்காக, நான் வருந்துகிறேன் என்பதை பற்றி சிறிதும் தெரியாத நீ எப்படியப்பா என் ஏக்கத்தை நீக்கப் போகிருய்?" என்ருன். "எல்லாம் எனக்கு நன்ருகத் தெரியும் இதோ! இந்தக்கடிதத்தைப் படித்துப்பார்" என்று ஒரு கடிதத் தைக் கொடுத்தான். கமலாத்தான் அவனுக்கு எழுதியிருந் தாள்.

அன்புள்ள அண்ணன் ராஜாராமனுக்கு,

வணக்கம்! திருமணம்,

இருவர் மனம் ஒத்தபிறகு ஏற்படும் ஒரு ஒப்பந்தம். ஆனல் யாரேனும் ஒருவர் மனம் மாறுபட்டால் அது திருமணமல்ல. உங்கள் மனம் என்னை ஒத்துக்கொள்ளச் சித்தமாகயிருக்கிறது என்பதை நான் நன்கறிவேன். ஆனல் என்மனம் உங்களை நாடவில்.......லை........ ஏன் தெரியுமா. நான் முன்பே என் மனதை, கல்லூரியில் படிக்கும் மனோஹரிடம் ஒப்படைத்துவிட்டேன். நான் அவரது உடமை. அவர் தீண்டிய என்னை, நீங்கள் கன விலும் அபகரிக்க நினைக்கக்கூடாது. உங்களுடன் கூடப் பிறந்த சகோதரிபோல் பாவிக்கவேண்டும். கூண்டில் அடைபட்ட உங்கள் சகோதரியின் கூக்குரலைக்கேளுங் கள். உங்களால் எனக்கும் மனோஹருக்கும் ஏற்பட்ட துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. அவ்விதத் துன்பத்தை விளைவித்த நீங்கள், பிராயச்சித்தமாக எங்களை வாழ்க் கையிலே எப்படியாவது ஒன்றுப்படுத்திவிடவேண்டும். கண்ணீரால் எழுதப்பட்ட கடிதம். அதுவும் பேதைக் கண்ணீரால் எழுதப்பட்ட கடிதம். தீர ஆலோசித்து முடிவு செய்யுங்கள். மனமார்ந்த நன்றி.

இப்படிக்கு உங்கள் தங்கை,

கமலா.

படித்து முடித்ததும், மகிழ்ச்சியின் மிகுதியால் "நீ தானப்பா பெண்ணின் மனநிலையை உணர்ந்து அதற்கேற்ப நடக்கும் அறிஞன்" என்று கூறி அவனை அணைத்துக்கொண்டான் இறுக. அவன் அணைப்பிலிருந்து விடுபடுவதற்காக, "மனோஹர் உன்

னைப்பற்றி நான் தெரிந்துகொள்ளலாமா?" என்றான் ராஜா ராமன். இன்பத்தில் மிதந்த அவன் "...........ஓ............நன்றாக; நான் மருங்காபுரிப் பண்ணையிலே வேலை செய்யும், ராமசாமி நாடாரின் ஒரே மகன். பரம ஏழை. உழைப்பால் கிடைக்கும் பணத்தை என் படிப்பின் பொருட்டு செலவழிக்கிறார். நானும் அதை விரயமாக்காமல் நன்றாகப்படித்துக்கொண்டு வரு கிறேன்" என்றான் மனோஹர்.

"..........அடுத்த இருபத்திநாலு மணிநேரத்தில் தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் கடும்புயல் வீசலாம். மக்கள் ஜாக் கிரதையாக நடமாடவேண்டும். இத்துடன் ஆல் இந்தியா ரேடியோவின் தமிழ்ச் செய்தியறிக்கை முடிவடைந்தது......." என்று அரசினர்க் கல்லூரியின் ஆஸ்டல் ரேடியோ அலறியது. அதற்கேற்ப வானம் கருத்தது. காற்றுமெல்ல வீசத்தொடங் கியது. "மனோஹர், நாளைக்கு நரசிம்மய்யர் சுவாமிமலைக்கு போவதாக சொல்லிக்கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் போயிருந்தால், வீசப்போகும் அந்த கோரப் புயல் அவரை பலிவாங்கிவிட்டால்........என்ன மோசமான நினைவு. எதற்கும் வா. போய் பார்த்துவிட்டு வருவோம்" என்று மனோஹரையும் அழைத்துக்கொண்டு கிளம்பினான் ராஜாராமன்.

கதவைத் தட்டினான் ராஜாராமன். "யார்?" என்ற கேள்வி யுடன், வளையல் குலுங்க ஓடிவந்து கதவைத் திறந்தாள் கமலா. திறந்தவள் அப்படியே மலைத்துநின்றாள், மனோஹ ரைக் கண்டவுடன். பிறகு மெதுவாக சமாளித்துக்கொண்டு "வாருங்கள் உள்ளே இருவரும்" என்றாள், மெதுவான குரலிலே. "கமலா, அப்பா எங்கே" என்றான் ராஜாராமன். "சுவாமிமலைக்கு சுவாமித் தரிசனத்திற்காகப் போயிருக்கிறார் என்றாள் அவள். ஐயோ! போய்விட்டாரா" என்று துக்கம் நெஞ்சை அடைக்க அலறினான் ராஜாராமன். ஒன்றும்புரியாமல், தவித்த கமலா விடம் விஷயத்தை விளக்கமாகக் கூறினான் மனோஹர். கமலா பதைத்தாள்; துடித்தாள்; அழுதாள். கடைசியில் சுவாமி தரிசனத்திற்காக சென்ற அவருக்கு அவன் அருளால் கண்டிப் பாக ஏதும் தீங்கு நேரிடாது என்று மனதை தேற்றிக் கொண்டாள்.

"மனோஹர் வா போகலாம் அவர் இல்லாத சமயத்தில் நாம் இங்கு இருப்பது சரியல்ல. இன்னும் கொஞ்ச நாள்

பொறுத்துக்கொள். அப்புறம் நீயும், கமலாவும் சேர்ந்து பேசலாம்............" என்று கூறி அழைத்துசென்ருன்.

காலையில் இலேசாக ஆரம்பித்த புயல், மத்தியானத்தில் வெகு வேகமாக வீசத்தொடங்கியது. மரங்கள், மாடி வீடுகள் எல்லாம் சிதறிச் சின்னுபின்னமாயின. வீடுகள்மேல் வேயப் பெற்ற தகரங்கள், ஓடுகள் பறந்துவந்து வீதியிலே வீழ்ந்தன. நரசிம்மய்யர், சுவாமிமலையில் சுவாமி தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்தார். புயலின் கோரத்தைக் கண்டு குலைநடுங் கினர். வீட்டுக்குப் போவதா அல்லது இங்கேயே தங்கிவிடு வதா என்று எண்ணி மனம் குழம்பினர். அப்பொழுதுதான், தாயைப் பிரிந்த ஒரு கன்றின் கதறல் ஒருபுறம், அவர் காதைத் துளைத்தது. மறுபுறம், மாடி வீடு ஒன்றில் பெரிய ஆலமரம் விழுந்து, அதை நொருக்கித் தரையோடு தரையாக் கியது. அதிலிருந்த ஜீவன்களின் கடைசி அலறல் அவர் மற்ரெரு காதைத் துளைத்தது. இவைகள் அவருடைய மனக் குதிரையை ஓடவிட்டு பலவித பயங்கர எண்ணங்களை எழுப் பின. அவர் தன் வீட்டையும், அதிலுள்ள கமலாவையும், அதற்கருகில் உள்ள பெரிய மா மரத்தையும், திருப்பித் திருப்பி நினைத்துப் பார்த்தார். இவை அவர் குழம்பிய மனதை இன்னும் குழப்பி, அவரை பிரமைப் பிடித்தவராக்கிவிட்டன. அவ்வளவுதான்! உடனே புயலின் வேகத்தையும், கோரத் தையும் சிறிதும் பொருட்படுத்தாமல், "கமலா! கமலா!" என்று கதறிக்கொண்டு ஓடலானர் வீடு நோக்கி. வழியில் பல மரங்கள் அவருக்கு முன்னும் பின்னும் விழுந்தன. அவை களிலிருந்து தப்பி பிழைத்துவந்தார். ஆனல் விதி யாரை விட்டது. ஒரு சிறு கிளைத் தடுக்கி, குப்புற விழுந்தார். என்ன துரதிஷ்டம்: கீழே கிடந்த முறிந்த பெரும் கிளைகள், அவர் கண்களையும், முகத்தையும், உடலையும் குத்தித் துளைத்தன. இரத்தம் பிரவாகமாக ஓடியது. அதிலே மிதந்துக்கொண்டி ருந்தார் நரசிம்மய்யர்.

அப்பொழுது அதிருஷ்டவசமாக வந்த போலீஸ் லாரி, அவரை எடுத்துச்சென்று ஆஸ்பத்திரியில் சேர்த்தது. இச் செய்தி கமலா, மனோஹர், ராஜாராமன் இவர்கள் காதுக்கு எட்டியது. ஆஸ்பத்திரிக்கு ஓடினார்கள். அங்கே தலையில்

கட்டுடன் கிடந்த நரசிம்மய்யரைக் கண்டு கதறினர்கள்; துடித்தார்கள்; பதறினர்கள். "கவலைக்கொன்றுமிடமில்லை. நீங்கள் ஒன்றும் பயப்படவேண்டாம். ஆனல், அவர் வாழ்க்கைக்கு அவசியமான கண்களை இழந்துவிட்டார் என்ருர் டாக்டர்.

*கண்கள்! கண்கள்!! கண்கள்!!! இது மூவரின் கோரமான அலறல்.*

சிகிச்சைகள் பலமாக நடந்தன. நரசிம்மய்யர் சிறிது சிறிதாக குணம்பெற்று வந்தார். முற்றிலும் குணமாகிய பின் ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு அழைத்துவரப்பட்டார். ஆனல் அவர் தன் கண்களை இழந்த ஏக்கத்தனலோ என்னமோ! நாளுக்கு நாள் இளைத்துப் படுத்த படுக்கையானர்.

ராஜாராமனின் மூளையில் ஒரு புது சூரியன் உதயமானன். அவர் கண்களை இழந்ததை உபயோகப்படுத்தி சரியான வழி ஒன்று கண்டுப்பிடித்தான். கமலாவின் வேண்டுகோளைப் பூர்த்திச் செய்ய; ஜாதி வேற்றுமையை ஒழிக்க; மனேஹர்—கமலா இவர்களின் வாழ்க்கைப் படகை ஓட்டச்செய்ய. தன்னுடைய வழியை கமலா—மனேஹருக்கு எடுத்துக் கூறினன்.

அன்றுதான் தன் மகளின் திருமணத்திற்கு நரசிம்மய்யர் தேர்ந்தெடுத்த நாள். நரசிம்மய்யர் ஏதோ நினைத்துக்கொண்டார். உடனே "கமலா உன் கையை இப்படிக் கொடு; ராஜாராமா உன் கையை இப்படிக் கொடு" என்ருர் நரசிம்மய்யர். அவர் எண்ணத்தைப் புரிந்துகொண்ட ராஜாராமன், அவன் கண்டு பிடித்த அந்த புதிய வழியைக் கடைப்பிடிக்கலானன். மனேஹரைப் போய் கையைக் கொடுக்குமாறு சைகை செய்தான் ராஜாராமன். முகத்தில் ஒரு புது மகிழ்ச்சிப் பொங்க, "உங்கள் மங்கள வாழ்வைக் கண்டுகளிக்கக் கொடுத்துவைக்காதப் பாவி, நான் என்றுக் கூறி அவர்கள் கைகளை இணைத்தார் நரசிம்மய்யர். 'கிளிக்' என்ற சப்தத்துடன், ராஜாராமனின் கையிலிருந்த கேமிராவின் 'பிளாஷ் பல்பு' மின்னியது. அந்த மின்னல் ஒளியிலே ஒன்றி மறைந்தது அவர் ஆத்மா. தான் தன் மகளுடன் சேர்த்துவைத்தது நாடாரின் மகனை என்று தெரிந்தாயிருக்கப்போகிறது அந்த கண்ணற்ற வைதீக பிராமணருக்கு!

"என்ன ரொம்ப சந்தோஷப்படுகிருய்? சாதிக்கமுடியாத ஒரு அரும்பெரும் செயலே சாதித்துவிட்டோம் என்ரு ? ஆம் நீ, சாதித்தது உண்மை. ஏன் ? எதற்கு? உன் மாமாவின் மகள் சுகவாழ்விற்காக; ஆனுல் அன்று, மதுரையில் தீண்டா மையினுல், மக்கள் அடைந்த கொடுமைகளேப்பற்றி பத்திப் பத்தியாக பத்திரிக்கையில் படித்தாயே அப்பொழுது அந்த தியாக உணர்ச்சி எழுந்ததா? நன்ருகச் சிந்தித்துப்பார்! சுய நலம் உன்னிடம் எவ்வளவு சூழ்ந்துக்கிடக்கிறது" என்று இடித் துக்காட்டியது அவன் மனச்சாட்சி. "போதும், போதும் இது வரை நான் சுயநலமித்தான். இனி நான் அப்படியல்ல. இதோ போகிறேன் மதுரைக்கு. அங்கே மக்களிடம் பரவிக்கிடக்கும் தீண்டாமையையும், அதற்கு ஆதரவுகாட்டும் .புல்லர்களின் கூட்டங்களேயும் அழித்தே வருவேன். அல்லது அங்கேயே சாவேன் சந்தோஷமாக. என்கடமை முடிந்தது. நான் சென்றுவருகிறேன்" என்று கூறிக்கிளம்பினுன் ராஜாராமன். "எங்கே?" என்றனர், மஹேஷரும், கமலாவும் ஏககாலத் தில். "எங்கே மதவெறித்தாண்டவ மாடிகிறதோ! எங்கே சீர்த்திருத்தம் தேவைப்படுகிறதோ!! எங்கே என்னுடைய தியாகம் தேவைப்படுகிறதோ!!! அங்கே தான், நான் செல்லு கிறேன்" என்று மறுமொழிக்கூறுவதற்கு முன் போய்விட்டான்.

"தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்" மதுரையை வெகு துரிதமாக நெருங்கிக்கொண்டிருந்தது. மதுரை வந்ததும் ராஜாராமன் இறங்கி ஹோட்டல் ஒன்றில் தங்கினுன். சில நாட்களுக்குப் பிறகு மேடைகளில் ஏறிச்சீர்த்திருத்தக் கருத்துக்களே அள்ளி வீச ஆரம்பித்தான்.

வருடங்கள் உருண்டன. இப்பொழுது அவன் நன்கு அறிமுகமாய் விட்டான் தன்னுடைய மேடைப் பேச்சுக் களினுல், திண்டாமையை வளர்க்கும் தீயர்களுக்கு. இவனே நடமாடவிட்டால், நம் கும்பலேயே அழித்துவிடுவான் என் பதையறிந்த தீயவர்கள் ஒன்ருகக்கூடி அவனே கொல்வதற்கு சதியாலோசனே செய்தார்கள். ராஜாராமன் பேசும்பொழுது சுடச்சொல்லி, அவனே கொன்றுவிட வேண்டும் என்ற பயங்கர திட்டத்தை தீட்டினுர்கள்.

கமலா முழுமாதக்கர்ப்பிணி. மஹேஹர் அவளைக்கண்ணும் கருத்துமாகக் காத்துவந்தான். ஒருநாள் அவன் கேட்டான். "குழந்தைக்கு என்ன பெயர் வைக்கப்போகிருய் கமலா ? என்று குதுகலம் முகத்தில் தாண்டவமாட. "என்ன, இது கூடவா இன்னும் தெரியாமல் இருக்கிறீர்கள். ஆண் குழந்தைப் பிறந்தால், ராஜாராமன் என்றும், பெண்குழந்தைப் பிறந்தால் ராஜலெக்ஷ்மி என்றும் வைப்பேன் " என்ருள் கமலா.

அன்று தான் ராஜாராமன் தலைமை தாங்கப்போகும் மாபெரும் கூட்டம். அதுவே தான், தீண்டாமையை வளர்க்கும், தீயவர்களுக்கு முடிவுகட்டும் கூட்டம். பொதுக்கூட்டம் தொடங்கியது. ராஜாராமன் அன்று, என்றுமில்லாமல், ஒரு புது உணர்ச்சியுடன் தன் சீர்திருத்தக் கருத்துக்களை அள்ளி வீசிக்கொண்டிருந்தான். திடீரென்று வஞ்சகக்குண்டுகள், பயங்கரச் சப்தத்துடன் அவன் மார்புமீது பாய்ந்தன. குண்டுகளின் வேதனைத்தாங்காமல் துடித்துக்கொண்டிருந்தான். உயிர் ஊசலாடிக்கொண்டிருந்தது.

அங்கே பிரசவவேதனையைத் தாங்காமல் கமலா துடித்துக் கொண்டிருந்தாள். அங்கே எரிந்துக்கொண்டிருந்த மங்கள விளக்கு திடீரென்று அணைந்தது. அந்த இருளிலே அழகான ஆண் குழந்தையை ஈன்றெடுத்தாள் கமலா.

அதேநேரத்திலே, ராஜாராமனின் உயிர் இவ்வஞ்சகவுலகை விட்டு நீங்கிவிட்டது தீயவர்களின் வஞ்சகத்தினுல் என்பதும், ராஜாராமன் அவர்களின் மகனுக வந்திருக்கிருன் என்பதும், மஹேஹர்-கமலா இவர்களுக்குத் தெரிந்தாயிருக்கப்போகிறது? அவர்களுக்கு மட்டுமென்ன; இந்த உலகத்தினருக்கே, தெரியாத ஒரு சிறந்த உண்மை அது.

---

**"இலட்சியம் சீக்கிரமாகப் பழுத்துப் பயன்தருவது, தியாகம் செய்வோருடைய இரத்தம் பாய்ந்து போஷிக்கப்படும் பொழுது தான்". — *மாஜினி***

# பிரிவும் பரிவும்

அ. சிகாபுதீன்:

பொன்னிறக் கதிர்களுடன், தன் பெரும்பயணத்தைக் களைப்புப் பகலெல்லாம் தன் கடமையை வெற்றிகரமாக முடித்துவிட்டோம் என்ற இறுமாப்பிலே, அடிவானத்திற்கும் கீழ், தன் அழகுமனையாளின் அன்புமடியிலே மஞ்சத்துயில் கொள்ளப் பறந்து சென்று, பாறையின் இடுக்கிலே சென்று மறைந்து விட்டான் கதிரவன். அந்தப் பொன்னொளியின் பூரிப்பால் பொங்கிநின்ற அந்திவானத்தின் அழகு, உணர்வு உள்ளம் படைத்த எவனையும் உவகையில் ஆழ்த்திவிடும். காலை முதல் கூடியிருந்துவிட்டுப் பிரியும் நேரம் நெருங்கியபோது, பகலவனின் பட்டொளியால் பொன்னென மின்னும் மணிக்கதிர்கள் அவனை அள்ளி அணைத்துத் தன் கொத்தான தலையசைத்து, 'ஓ'வென்ற சோககீதம் பாடி விடைகொடுத்தன.

இத்தகைய எழில் வாழ்வைப் பார்த்தவாறே நீண்ட நேரம் நின்றுவிட்டாள் அந்த மங்கை நல்லாள்! அவள் அழகின் செல்வி; இளமை அவளுக்குத் தன் திறம்காட்டி, திறம்கூட்டி எழில் ஊட்டியிருந்தது. இளமையின் பூரிப்பால் பொங்கி வழிந்த அவள் அழகு, ஏங்கும் உள்ளத்திற்கும், இடையறுத பெருமூச்சிற்கும் இடையில் அல்லற்பட்டுக்கொண்டிருந்தது. நீண்ட நேரம் அமைதியாக, இயற்கையின் எழிற்சுனையில் ஆறுதல் காணலாம் என்று நின்றிருந்தாள். அந்த நேரத்தில் அவள் கண்ணெதிரே பறந்துசென்ற பறவையைக்கண்டாள். அந்தப்பறவை அமைதியற்று, உயரப்பறந்து சென்று நோக்கிப் பின்னர் திரும்பி வந்தது. மீண்டும் சிறிதுதூரம் பறந்து சென்று ஏமாற்றத்துடன் மரத்தின் கிளையிலுள்ள கூட்டில் அமர்ந்து வெளியை உற்றுநோக்கியது. ஏதோ ஒன்றின் வரவை எதிர்பார்ப்பதுபோல் மீண்டும் பறந்துசென்று நோக்கியது. இவ்வாறு அதன் இடைவிடாத செயலைக் கண்ணுற்றாள் அந்தக்காரிகை. தினமும் அந்தப்பறவையும் அதன் ஜோடியும் ஒன்ருகச் சேர்ந்து பறந்து சென்று, இரைதேடி, இன்புற்று, அந்திப்பொழுதில் வீடுதிரும்பும் அழகோவியத்தை அவள் காணத்தவறவில்லை! இத்தகைய இன்பஜோடிகளின் இணை

பிரியாத இல்லற வாழ்வை எண்ணியெண்ணி அவள் மகிழா மலும் இல்லை! உயிர் வாழ்வினங்களில் அற்ப ஜந்துக்களான இவைகளுக்கு, தினமும் இருக்கும் இன்பம் அளவிடற்கரியது. அவைகள வாழ்வில் போட்டி மனப்பான்மையும், பொறுமை உள்ளமும் தலைகாட்டுவதில்லை. உலக உயிரினங்களின் காதல் வாழ்வுக்கு காவியம் தீட்டும் பேறுபெற்றிருந்தன. இணைந்து மகிழ்ந்த அந்த இருஉள்ளங்கள் பாசத்தின் பிணைப்பில் காத லின் கனிவை, உலக இன்பத்தின் உயர்வைக்கண்டன. பொல் லாத துன்பம் அவர்களைப் பிரிவால் வாட்டியதில்லை. உழைப் பைப் பணயம் வைத்து, உலகவாழ்வுடன் போராடும் போதும், அழகிய நீலவானில், தன் அன்பு மனைவியுடன், சின்னஞ்சிறு சிறகடித்து, சிங்காரக் கீதம்பாடி சிரித்துவாழும் இனமாக அவைகள் என்றுமே வாழ்கின்றன. அவ்வாறு காதல் வாழ்வுக் கோர் எடுத்துக்காட்டாக வாழ்ந்த அந்தக் காதல் தம்பதிகளில் ஒன்று — பெண்பறவை தன்னந்தனியாக துயருறும் காட்சி யைக்கண்டு, அந்த மெல்லிடையாளின் மேனி சிலிர்த்தது. உள்ளம் வருந்தினாள்.

ஏறத்தாழ அப்போது இருட்டிவிட்டது அவள் காத்துக் கொண்டிருந்த அந்தப் பறவையின் ஜோடி வெகுவேகமாகப் பூரித்த உள்ளத்துடன், தன் இனியாளை நோக்கிக் காதல் கீதம்பாடி காற்றினும் கடிதாகப் பறந்து வந்தது. அங்கு தன் வரவுநோக்கி, விழித்திருந்த பெட்டையுடன் கூடிக்கொஞ் சிக்குலாவியது. சின்னேரத்திற்கு முன் தனியளாக இருந்த அந்தப் பறவையும் அன்புப்பெருக்கால் ஆனந்தம் கொண்டது. இரண்டு காதலர்களும் பின்னர், ஏதோதோ பேசுவதும், சிரிப் பதுமாக உல்லாசப் பொழுதுபோக்கிக் கொண்டிருப்பதாக அவள் நினைத்தாள்.

இத்தகைய வியத்தகுகாட்சி, மங்கையின் மனத்தைவாட் டியது. அவள் எண்ண அலைகள் கடந்த காலப்பெருவாழ்வை, தனக்குத் தன் நாயகன் நல்கிய நல்லின்பத்தைச் சுற்றி வட்ட மிட்டன.

தாரகைக் கூட்டம் தவழ்ந்துவர, நீலவானிலே நீந்திவரும் நிலவு, தன் பட்டொளியை, விரிந்து நின்ற வையகத்து மாந் தர்க்கெல்லாம் வரையாது வழங்கிக்கொண்டிருந்தது. வெண்

ணிலாவின் தன்னொளியில் அந்தச் சிங்காரச் சோலையிலே, சிந்துபாடும், சிட்டுக்குருவிகள் போல், தனது அன்பு நாயகன் அருகிருக்க அவர்கள்கண்ட இன்பம் தமிழகத்துத் தனிமரபை அகத்துறையின் அழகிய காட்சியை நினைவூட்டும், அவ்வின்ப வேளையில் தன் காதலன் தனக்குக் கூறிய மொழிகள் அவள் நெஞ்சத்தில் நீங்காத இடம் பெற்றுவிட்டன. "அன்பின் தலைவியே, அழகின் செல்வியே, பொற்கொடியன்னாய் — உன் பொன்னிற மேனியின் பொலிவை இழந்து நான் எவ்வாறு வாழ்வேன். அழகுத்தமிழ்க்காவியமே, நின் அன்பு மொழிவிட்டு, அமுதூட்டும் கைவிட்டு, வெறும் நெஞ்சத்திடைப்பட்டு, வேண்டாத வாழ்வு வாழமுடியுமோ தலைவி! அலைகடல் முத்தே உன் அமுதமொழிகேட்டு இன்புற்ற என் உள்ளம் பிரிந்து நின்று உவகைகொள்ள இயலுமோ!" "இவ்வாறெல்லாம் அன்புமொழி கூறப்பிரிந்து சென்ற அவர் ஏனோ இன்னும் என்னை நினைந்து இங்கு வரவில்லை. அவரைக்காணாத என் உள்ளம் ஒடுங்கிச் சாகின்றதே.

பிரிவுத்துன்பம் பொறாத என் துன்பநிலையைகாணப் பொறுக்காமல் அவர் வருகின்றாரா என்று என் கண்கள் திக்கெட்டும் நோக்குகின்றன. அவர் வருகையைக் காணும் பொருட்டு என் நெஞ்சம் உயர்ந்த மரத்தின் உயரத்தையும் கருதாமல், நெடுங்கிளைகளில் ஏறிக்காணுகின்றதே! என் நாயகன் தந்த பிரிவுத்துன்பம் என்று நீங்கும்" என வருந்துகின்றாள். இத்தகைய அழகிய காட்சியைத்தான் நம் வள்ளுவப் பெருந்தகையார்

> " கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
> கோடு கொடேறும் என்நெஞ்சு "

என அழகு தமிழ்க் காவியமாகக் காட்டுகிறார்.

---

"இனிய கருணையே பெருந்தன்மையின் அடையாளமாகும்". — *ஷேக்ஸ்பியர்*

# வள்ளுவன் வகுத்த வழி

அ. தனுக்கோடி, (கல்லூரி இடைநிலை வகுப்பு.)

தமிழ் நாடும், தமிழ் மொழியும் முயன்ற அருந்தவப் பயன்காரணமாக ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நம்நாட்டில் சென்னைமாநகரின் அண்மையிலுள்ள திரு மயிலையம்பதியில் ஒரு பேரொளி, அறிவொளி தோன்றிற்று. அப்பேரொளி தான் வையகம் புகழும் வள்ளுவன், நமக்கெல் லாம் வழிவகுத்த வள்ளுவன், ஆவான். தமிழன்னைத் தலை நிமிர்ந்து அவள் மக்களாகிய நமக்கு இன்முகங்காட்டி அழ குடன் மிளிர்வது இவ்வள்ளுவன் பிறப்பினாலன்றோ? யாரும் எந்நாட்டவரும் பெறமுடியாத பெருமையை – பெறுதற்கரிய பேற்றை நாம் – முடியுடை மூவேந்தர் வாழ்ந்த முத்தமிழ் நாட்டிலுள்ள நாம் – ஒரு புறாவின் உயிருக்காகத் தன் உட லையே அர்ப்பணித்த சிபி வாழ்ந்த நாட்டில் பிறந்த நாம், அடைந்துள்ளோம்.

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு ".

என " தனி ஒருவனுக்குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடு வோம்" என்று கூறின புரட்சிக்கவிஞர் பாரதியாரும், வாழ்க்கை வரையறுத்த வள்ளுவனைப் புகழ்ந்து கூறியுள்ளார். வள்ளு வனது வரலாறு சரியான சான்றுகளுடன் நமக்குக் கிடைத்தில. இருப்பினும் வள்ளுவன் என்பவன் – சான்றோன் ஒருவன் வாழ்ந்தான்; திருக்குறள் என்ற உலகோர் போற்றும் உயரிய அறநூலை எழுதினான் என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மை. ஆம் வள்ளுவனை உருவாக்கிய – உருவாக்கித்தந்த நம் தமிழ்நாடு வையத்தில் தலைநிமிர்ந்து பெருமிதத்துடன் தான் மிளிர்கின்றது.

பண்டு வாழ்ந்த பழம்பெரும் பெரியோர்கள் தங்கள் எண் ணிய எண்ணம் நிறைவேறும் பொருட்டு எல்லாப்பொருளையும் உருவாக்கிய – எல்லாம் வல்ல – விருப்பு வெறுப்பற்ற – மலர் மிசை ஏகின – இறைவனை வாழ்த்துதல் அக்கால வழக்கம். அதுபோன்றே நம் வள்ளுவனும் தன் நூலிலே முதற்கண் கட வுள் வாழ்த்தாக,

" அகரமுதல எழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு "

என்ற குறளை அமைத்துள்ளான். நமக்காக வள்ளுவன் அற நெறி வகுத்துள்ளான். கடவுள் வாழ்த்துக்கு அடுத்தாற்போல "வான்சிறப்பு" என்ற அதிகாரத்தினை அமைத்துள்ளான். ஆம். இப்பரந்த உலகில் பருவத்தில் மழைபெய்யாது விட்டால் தானம், தவங்கள் எல்லாம் எங்கிருந்து தான் நடைபெற இயலும்? இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னமே மக்கள் எவ்வாறு வாழ்க்கை நடத்தவேண்டும், எவ்வாறு நடத்தினல் மக்களாவார் என்று அறிந்திருந்தான் வள்ளுவன்; மக்களைப் பார்த்து " கள்ளுண்ணுதே ", " கொலை செய்யற்க ", " பொய் கூறற்க ", " புறங்கூறற்க " என்று கூறினவன் வள்ளுவன் தான். வள்ளுவனது குறட்பாக்களையெல்லாம் கூறுவதென்ருல் – வள்ளுவனைப்பற்றி எழுதுவதென்ருல் – பல ஆண்டுகள் – பல காலங்கள் ஆகும். ஆதலால் ஈண்டு முக்கியமானவற்றை மட்டும் கண்டுணர்வோம்.

வள்ளுவன் – பொய்யில் புலவன் இல்லறத்தைப்பற்றிப் புகலும்போது மனையாள் எப்படி இருக்கவேண்டும் என்பதனை – மனையாளின் பண்பைக் கூறுகின்ருன், அஃதாவது, கணவனது வருவாய்க்குத் தக்கவாறு செலவு செய்கின்றவளே மனையாள் என்ற பெயரைப் பெறத்தக்கவள் என்று கூறியுள்ளான். முப் பாலில் நாற்பால் மொழிந்த முதற்பாவலன் அடுத்தடியாக இல்வாழ்விற்கே அணிகலமான மக்கட்பேற்றைப்பற்றிக் கூறி யுள்ளான். அக்குறளாவது,

" மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட்பேறு "

என்பதாம். இல்வாழ்வோரின் செல்வம் யாதெனில் நல்ல மக்களைப் பெற்றெடுத்தலே என்பதாம். அன்புடைமையைப் பற்றிக் கூறப்போந்த வள்ளுவன், அன்பு செய்தற்பொருட்டே உயிர் நிலைத்துவாழ்கின்றது. அவ்வாறு அன்பில்லாத உடல் வெறும் என்பும் தோலும் போர்த்தஉடம்பு என்று கூறுகின்ருன் அடுத்தப்படியாக இல்வாழ்வின் பண்பாகிய 'விருந்தோம்பலை'க் கூறுகின்ருன். அஃதாவது, விருந்தினரைப் பேணுதற் பொருட்டே இல்வாழ்க்கை செய்கின்ருேம் என்று பகர்கின்ருன். பிறருடைய இன்சொல் நமக்கு இனிமையைத் தருகின்றது

என்பதனை நன்குணர்ந்தவன் தான்மட்டும் ஏன் வன்சொல் வழங்குகின்ருன்? என்று கடிந்துரைக்கின்ருன் பொய்யாமொழி யான். சொல் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதனைப் பேசவந்த வள்ளுவன் கூறுகின்ற சொல்லாவது கேட்டவர்களைத் தன் வயப்படுத்துமாறும் கேளாதவரை அச்சொல்லை விரும்புமாறும் அமையவேண்டும் என்பதாம். அதனை அவர் வாய்மொழி யினுலே காணலாம். அஃதாவது,

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்" என்பதாம்.

கல்வியைப்பற்றிக் கூறப்போந்த வள்ளுவன், கல்வியைக் குற்றம் நீங்க, அஃதாவது ஐயந்திரிபறக் கற்றுணரவேண்டும்; கற்றவண்ணம் நிற்றல் வேண்டும் என்பதாம். செய்நன்றியைப் பற்றி தெய்வப்புலவன், எந்த நன்றியை மறந்தாலும் கழுவாய் உண்டு ஆனல் செய்நன்றியை மறந்தவர்க்குக் கழுவாய் என்பதே கிடையாது என்று இயம்புகின்ருன். இதனையே "நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன் செய்தி கொன்ருேர்க்கு உய்தி இல்' என அறம்பாடிற்றே" என்று பழம்பெரும் நூலாகிய புறநானூறு பகர்கின்றது. மனிதர்களுக்கு அடக்கம் அவசியம் அவற்றுள் நாவடக்கம் மிகமிக அவசியம் என்றும் பிறரைப் பற்றி புறங் கூறி உயிர்வாழ்தலினும் சாதலே மேல் என்றும் மொழிந் துள்ளான்;

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்"

ஈகைக்கு இலக்கணம் கூறவந்த வள்ளுவன் வறியவர்களுக்கு ஈவதே ஈகையாகும்; மற்றெல்லாம் பிறர் உதவியை நாடி செய்வதேயாகும் என்பதாம். புகழ் இல்லாத மக்களைக்கண் டான் வள்ளுவன். அவர்களைப்பார்த்துக் கூறுகின்ருன். தோன் றினும் புகழுடன் தோன்று; அல்லாவிடில் தோன்ருமலிருத் தலே நலம் என்று. பல உயிர்களைக்கொன்று பல்லாயிரம் யாகங்கள் செய்கின்றவர்களைக் கண்டான் வள்ளுவன். அவர் களுக்கு அறிவுரை கூறுகின்றதாவது ஆயிரம் உயிர்களைக் கொன்று பல யாகங்கள் செய்தலைக்காட்டிலும் ஒன்றன் உயி ரைக்கொன்று அதனைத் தின்னுமை நன்று என்பதாகும். மனித வாழ்க்கை நிலைமையற்றது என்பதனை யுணர்ந்த வள்ளுவன்,

" உறங்குவதுபோலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்று கூறுகின்ருன். இதன் கருத்து யாதெனில் மனிதர்கள் சாவது தூங்குவதுபோலும், பிறத்தல் உறங்கி விழிப்பது போலும் காணப்படுகின்றது.

வீரம் செறிந்த இருகாளையரைக் கண்டான் வள்ளுவப் பெருமான். அவ்விருவருக்கும் ஒரே ஐயம் தோன்றியது. அதாவது, இருவருள் யார் வீரம் செறிந்தவர் என ஐயம் எழுந்தது. அவற்றுள் ஒருவன், " நான் காட்டிலே ஒரு அழகிய முயலைக்கண்டேன். அது என்னைக்கண்டதும் ஓடத் தொடங்கியது. நானும் பின்தொடர்ந்து சென்று வில்லினல் குறிவைத்து அம்பொன்று எய்தேன். முயல் கீழே வீழ்ந்தது. நான் வீரன் அல்லனே?" என்ருன். மற்றவன், " நான் ஒரு மதம் பொருந்திய களிறு ஒன்றினைக்கண்டேன். அது என்னை எதிர்த்தது. "நானும் கூற்றுடன்று மேல்வரினும் கூடியெதிர் நிற்கும்" ஆற்றலுடன், என் கை வேலைக் குறிபார்த்து அதன் மத்தகத்தை நோக்கி எறிந்தேன். குறிதவறியது. தவறியதும் யானை ஓடத்தொடங்கியது" என்ருன். இதனைக் கேட்ட வள்ளுவன் யானையை எதிர்த்தவனை மட்டும் வீரன் என்று கூறினன். அதனை அவர் மொழியாலேயே காணலாம்.

" கானமுயல் எய்த அம்பினில் யானை
பிழைத்த வேல் ஏந்தல் இனிது "

முயலின்மேல் எய்த அம்பினிலும் யானையின்மேல் எறியப்பட்ட வேலே சிறந்தது என்னுங் கருத்தமைந்த மேலேகண்ட குறளை வள்ளுவன் எழுதியுள்ளான். என்னே வள்ளுவனின் கைவன்மை!

வள்ளுவன் வேருேரிடத்தில் - கயவர்களை - புறங்கூறி பொய்த்துயிர் வாழும் பொய்யர்களைக்கண்டார். பொய்யர் களின் - கயவர்களின் தன்மை பொதிந்தபாடலாவது,

" அறைபறை யன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான் "

என்பதாகும். இதிற் செறிந்துள்ள கருத்தை உற்றுநோக்கினல் வள்ளுவனின் வன்மை விளங்கும். பறையைத்தட்டுகின்ருேம். அது ஒலிக்கின்றது. அதுபோன்று நாம் ஒரு

ரகசியத்தைப் பேசிக்கொண்டிருப்போம். அதை அக்கயவர்கள் கேட்டுப்பிறரிடம் கூறிக் கூறி அதே பழக்கமுடையவர் களாகவே வாழ்கின்றனர்.

மற்ருேரிடத்தில் இரந்து உயிர்வாழ்கின்ற மக்களைக் கண்டு மனம் பொருத வள்ளுவன்,

" இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் " என்று கூறுகின்ருன்.

இதன்கருத்து யாதெனில், நீர்செறிந்த இவ்வுலகில் பலர் பணமும் புகழும் பெற்று மாடமாளிகையிலே - வானளாவிய வீட்டிலே வாழ்ந்து வர ஒரு சிலர் மட்டும் ஏழைகளாய் - இரக்கின்றவராய் - வாழ வழியற்றவராய்-கோழைகளாய்சுற்றி அலைந்து திரிந்து பிறரை நம்பிவாழ்வதேன் என உணர்ந்த வள்ளுவன் இவ்வாறு உண்டாக்கியவன் - படைத்தோன் - இறைவன் மேல் தான் குற்றம் உள்ளது. ஆதலால் அவனும்- படைத்தோனும் இரக்கின்றவர்களைப் போன்று தெருத்தெரு வாய் ஊர் ஊராய்ச் சுற்றி அலையக்கடவது என்கின்ருன். ஆம், ஏன் சொல்லமாட்டான் ? கடவுளாய் இருந்தால் என்ன, அல்லது யாராய் இருந்தால்தான் என்ன ? குற்றம் குற்றந்தானே. ' நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றங் குற்றமே' எனக்கூறிய பண்டு தமிழ்ப் புலவன் நக்கீரன் வாழ்ந்த நாட்டில் தோன்றினவனல்லவா வள்ளுவன் ? நக்கீரனை ஈன்ற தமிழன்னைதானே வள்ளுவனையும் ஈன்றுள்ளாள். இந்தக் குற்றம் மறக்க முடியாததுதான். அதோடுமட்டு மின்றி மன்னிக்க முடியாததும்தான். மற்றவர்கள் வாழ ஒரு வன் மட்டும் சும்மாயிருப்பதா? ஆதலால் வள்ளுவனே உலகைப்படைத்தோனுக்கு உரிய தண்டனையை - மேலே கூறிய தண்டனையையும் அளிக்கின்ருன். என்னே வள்ளு வனின் நீதிவன்மை ?

வேருேரிடத்தில் வள்ளுவன் செல்வர்களிடத்தில் சென்று இரந்து நிற்கும் இரவலரைக் காணுகின்ருன். இரவலர்கள் தங்கள் வறுமையின் திறத்தை எவ்வாறெல்லாம் கூறமுடி யுமோ அவ்வாறெல்லாம் எடுத்து இயம்புகின்றனர். ஆனல் செல்வர் செவிமடுக்கவில்லை. மனம் மாறவில்லை. உள்ளம்

உருகவில்லை. 'ஏழைகளின் அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்' என்பதனை அறியாது அவர்களின் கண்ணீரைத் துடைக்க பொருள்தரவில்லை. பொருள்'இல்லை' என்று நாகூசா மலும் மொழிகின்றனர். 'இல்லை' என்ற நஞ்சுபொருந்திய சொல்லைக்கேட்ட போதே இரவலர் உயிர் போய்விடுகின்றது. ஆனால் இல்லை என்ற சொல் வந்த வழி - வாய் - நஞ்சினைக் கொண்டவாயர்களது உயிர் எங்கு ஒளித்திருந்ததோ? இத னைக்கண்ட வள்ளுவன் தன் கற்பனையின் சக்தியினால் ஒன்றே முக்காலடியில் அமைக்கின்றான். அக்குறளாவது,

" கரப்பவர்க்கு யாங்கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்."

என்பதாகும். எல்லாவற்றையும் கூறிப்போந்த வள்ளுவன் மக்களின் - மக்கள் வாழ்க்கையின் முக்கியமான இல்லற இன் பத்தைப் பற்றியும் கூறுகின்றான். அதாவது ஊடுதல் காமத் திற்கு இன்பந்தருவதென்று. ஊடுதலாவது, தலைவன் தலைவி யர் கூடுவதற்குமுன் இருவருள்ளேயும் சிறுபூசல் ஏற்படும்; அதுதான் ஊடுதல் என்று கூறப்படுகின்றது. அவ்வூடல் முடிந்த பின் தலைவனும் தலைவியும் கூடி ஒருவரோடொருவர் தழுவப் பெற்றால் அவ்வூடலுக்கு இன்பமாகும் என்னும் கருத்தமைந்த,

" ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின் "

என்ற பாடலை எழுதியுள்ளான்,

இனி அவனது சிறப்புக்களை அஃதாவது மேற்கூறியவற் றிலிருந்து அவனது பெருமையை - அறிவின் திறத்தைக் காணுவோம். சந்திரனது ஒளிமண்டலத்தைக் கடந்து அதன் இயற்கையைக் கண்டறிய கண்கூசி வலியற்று நிற்பதுபோல, வள்ளுவன் என்ற மதியினது புகழ்மண்டலத்தைக்கடந்து அதனது உண்மை வரலாற்றை உணர நாம் சக்தியற்று தவிக்கின்றோம். ஆசிரியன் தன்னையே தன் நூலில் அமைத்து விடுகின்றான். அவ்வாறே வள்ளுவனும் தன்வாழ்க்கையை ஒரு நூலாக - மக்களுக்குப் பயன்படும் முறையில் அமைத் துள்ளான். இதன் காரணமாகவே மில்டன் என்ற ஆங்கிலக் கவியும், " புலவன் தன் பூதவுடல் நீங்கியபின்னும் தன்புகழ் உடம்பு நிலைபெற்று நிற்க தனது ஆருயிரை வாசனையூட்டித்

தைலத் தோணியில் வளர்த்திட்டுவைப்பது போன்றதாகும் அவன் செய்தநூல்" என்று வரைந்துள்ளார்.

• அங்கண் விசும்பில் ஒளிரும் திங்கள் தன் தண் கதிரை-கதிரின் ஒளியினை இன்னார்தான் நுகரவேண்டும் என்ற வரையறை இல்லாமல் எல்லாரும் - எளியாரும் வலியாரும், உடையாரும், இல்லாரும் நுகருமாறு தண்ணளி செய்வதுபோல் வள்ளுவன் தானும் தான் வகுத்த நூலை யாருக்கும், எம் மதத்தினருக்கும், எந்நாட்டவருக்கும், விரும்புகின்றவர்களுக்கு அறிவுரைக்காக வழங்கியுள்ளார். வள்ளுவன் தன் சிறந்த கருத்தில் ஒன்றை ஒரு பாடலின் மூலம் வெளிப்படுத்துகின்றான். அதனை ஈண்டு அறிவது மிக மிக அவசியம். அந்த குறளாவது,

" ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. "

என்பதாகும். இந்தக் குறளின் கருத்தை ஆழ்ந்து நோக்குவோமாயின் இதன் சிறப்பு நமக்கு புலப்படும். அதாவது, 'நீர் நிறைந்த ஊருணியானது தன்னையடைந்தார் எல்லார்க்கும் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடின்றி தன் இனிய தண்ணீரைச் சுரக்கின்றது. அதனைப் போன்றே பேரறிவாளன் திருவும் நெடிதுநின்று வேண்டுவார்க்கு வேண்டியபோது உதவும் என்பதுதான் இதன் கருத்து. அந்த பேரறிவாளன் திருவிற்காக நம் வள்ளுவன் என்ற பேரறிவாளன் திருவாகிய பொதுமறையை எடுத்துக் கொள்வோம். இந்த ஊருணி அறிவுநீர் பெற்றுள்ளது. இவ்வூருணியை அறிவுத்தாகம் எடுத்து இதனை அடைந்த அரசன் முதல் ஆண்டி ஈருகவுள்ள அனைவருக்கும் அறிவுநீர்தந்து தாகம்தணிக்கிறது. என்னே வந்தவர்க்கு இல்லையென்னது வழங்கும் குறளின் வண்மை? ஒருவன் வேறொன்றையும் படிக்காமல் குறளையே நன்கு கற்றுணர்ந்தானேயானால் அவனைப்போன்ற அறிஞன் வேறொருவனும் இருக்கமாட்டான். நிச்சயம் அவன் ஒரு அறிஞன் தான். அவன் ஒரு வழிகாட்டியாவான்.

இத்திறத்தை யுணர்ந்த புலவர்கள்பலர் வள்ளுவனைப் பாராட்டியுள்ளனர். அவற்றுள் ஔவை மூதாட்டியும் ஒருவர். அவர் கூறியதாவது,

" அணுவைத் துளைத் தேழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள். "

என்பதாகும். இதனின்று பெண்களும் ஆண்களை ஒத்து நுண்மாண் நுழைபுலத்தில் சிறந்து விளங்கினர் என்பது நன்கு புலனாகின்றது. இதனால் வள்ளுவனின் புகழ் எண்ண இயலாதது. வானூர் மதியம்போல வள்ளுவனும் அவனது பயனும் நம்மிடை உலவி அறிவு ஒளிவீசி வருமாக! இறுதியாக கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை வள்ளுவனைப் புகழ்ந்த பாடல் ஒன்றை ஈண்டு தர விழைகின்றேன்.

" வள்ளுவர் தந்த திருமறையைத்—தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே—என்றும்
உத்தமராகி ஒழுகிடுவமே. "

அது இது தான்.

மூவேந்தர் மடிவளர்ந்த முத்தமிழ் வாழ்க!

இரசாயன போதகர் :- *கண்ணப்பா தண்ணீரின் கொதிநிலை என்ன?*

கண்ணப்பன் - 100 *டிகிரி சார்.*

இரசாயன போதகர் :- *அதை எப்படி கண்டுபிடிப்பாய்?*

கண்ணப்பன் :- *ஒரு 100 டிகிரி உஷ்ணமானியைக் கொண்டு சார்.*

இரசாயன போதகர் :- *சரி. 200 டிகிரி உஷ்ணமுள்ள ஒரு பொருளின் உஷ்ணத்தை, எவ்வாறு கண்டு பிடிப்பாய்?*

கண்ணப்பன் :- *200 டிகிரியா! இரண்டு 100 டிகிரி உஷ்ணமானிகளைவைத்து வர்ற உஷ்ணத்தை சேர்த்துக் கூட்டிக்கலாம் சார்.*

# ஏழை மகன்

வே. சந்திரகாசன்,

தமிழ் நாட்டிலே நாயக்கன்பட்டி என்ற ஊரிலே பொன்னன் ஓர் ஏழையாக வாழ்ந்து வந்தான். பொன்னன் பொன்னைப் பரப்பும் பொன்னி நாட்டுக்கு உரியவன் என்றாலும் அவனை இந்த உலகம் ஏழையாகத்தான் விட்டுவைத்தது, அறியாப் பொன்னன் வேதாசல முதலியார் என்ற பெரும் பணக்காரரிடம் ஓர் அடிமையாக அடைக்கலம் புகுந்தான். ஓநாய் நரியிடம் தஞ்சம் புகுந்ததன்மை போன்றது தான்! உழைப்பவனின் ஊதியத்தைக் குறைக்கும் அம்முதலாளியிடம் பொன்னன் எவ்வாறு வறுமையற்று வாழமுடியும்? எனவே இவன் முதலியாரிடம் கடன்படும் நிலை ஏற்பட்டது! வட்டிக்கு வட்டி எதிர் வட்டி போட்டுத் தொகையை அதிகப்படுத்திய வேதாசலம் "கடனை விரைவில் கொடுக்காவிடில் வேலையிலிருந்து விலக்க நேரும்" என்று பொன்னனிடம் கூறிவந்தார். ஏழையாகிய பொன்னன் தன்வீட்டு ஒரு சில செம்பு பித்தளைப்பாத்திரங்களையும், மனைவியின் மங்கல அணியையும் விற்றுக்கொடுத்தான். இப்பணமானது அவன் கடன் தொகையில் கடுகளவு கூட ஈடு செய்யவில்லை.

பொன்னனுக்கு நல்லான் என்ற ஒரு மகன் உண்டு தன் மகனை எவ்வாறு துன்பப்பட்டாகிலும் படிக்கவைக்கவேண்டும் என்று நினைத்து அதன்படி நடத்திவந்தான். நல்லான் அறிவு, அழகு எல்லாவற்றிலும் சிறந்தவனாக இருந்தான். நத்தை வயிற்றிலே முத்தும், சேற்றிலே செந்தாமரையும் தோன்றுவது இயற்கைதானே! நல்லான் தன் தந்தைபடும் இன்னலைச் சகியாதவனாய் தந்தைக்கு உதவிசெய்ய அவனே ஐந்தாம் வகுப்போடு கல்விக்கு முற்றுபுள்ளி இட்டுவிட்டான்.

பொன்னனின் மனைவி மருதாயி வறுமையாலும், கவலையாலும் நோய்வாய்ப்பட்டு இறந்தாள். வீடு துக்கத்தில் மூழ்கி இருந்தது, அது சமயம் அந்த இரக்கமற்ற முதலாளி பொன்னனின் வீட்டைச் 'சப்தி' செய்யவேண்டிய ஆட்களுடன் வந்து அவருடைய திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருந்தார்.

அன்பும், அருளும் உருவெடுத்த அருமைத் தமிழகத்தில் தான் இது நடந்தது! கருணையற்றவன், கல்நெஞ்சன், என்று தன்னுடைய ஆத்திரத்திலை் சொல்லிவிட்டான். இதைக் கேட்டு சினத்தில் சிக்கிய அச்செல்வந்தர் இவனைப் பிடித்துச் செல்லும்படி ஆட்களை ஏவினர். பொன்னன் தன் இறந்த மனையாளின் சவத்துடன் வெளியேறி அன்னப்பன் என்ற தன்னுடைய அருமை நண்பனின் உதவியைக்கொண்டு சவத்தை அடக்கம் செய்தான். பிடித்துச் செல்லப்பட்ட நல்லான் முதலியார் மாட்டுக்கொட்டகையில் இரவுவரை கட்டுண்டுகிடந்தான். இவனை விட்டுவைத்தால் தன்னை விடமாட்டான் ஏன்று நினைத்து முதலியார் இவனை அடக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அன்றிரவே சப்பின்ஸ்பெக்டருக்கு ஆள் அனுப்பினர்.

மறுநாள் காலையில் நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டான் நிரபராதி! "நேற்றிரவு இந்த நல்லான் என்பவன் வேதாசல முதலியார் வீட்டில் ரூ. 3000 பெருமானமுள்ள இந்த நகைகளைத் திருடினன். இவனை பிடித்துக்கொண்டு முதலியார் எனக்குத் தெரிவித்தார். உடனே நான் இவனைக் கைதுசெய்தேன். என்றார் சப்பின்ஸ்பெக்டர். "சாட்சி இருக்கிறதா?" என்றார் நீதிபதி. உடனே இரண்டுபேர் ஓடிவந்து சொல்லிக்கொடுத்திருந்த பாடத்தை அப்படியே ஒப்பித்தனர். நீதிபதி சாட்சியையும், சந்தர்ப்பத்தையும் கண்டு மூன்றாண்டு கடுங்காவல் தண்டனை விதித்தார். ஆம்! ஏழையின் வழக்கு ஏன் எளிதில் முடியாது?

நாட்கள் ஆக ஆக பொன்னனின் மனம் கலங்கியது. பொன்னன் தன்னுடைய மகனைச் சூழ்ச்சிக்காரன் என்ன செய்தானே என்று நினைத்து ஏக்கமுற்றான். அன்னப்பன் பொன்னனை தன் இல்லத்தில் வைத்துக்காத்துவந்தான். துக்கத்தால் மிஞ்சியவன் நோய்வாய்ப்படுவது இயற்கை தானே! நோய்முற்றிற்று. "அன்னப்பா........ என் மகன்........ உயிரோடிருந்தால் கவ........னித்துக்........கொள்" என்று சொல்லிவிட்டு உயிரை விட்டுவிட்டான். ஆம்! இந்தப் பாரில் பணமில்லார் வாழ்வு பிணந்தானே!

நல்லான் விடுதலையாகும் நேரம் நெருங்கியது. சிறையில் இருந்துக்கொண்டு சிங்கம்போல் சீறுவான். பின் ஆறுதல் படுத்துவான் தன் மனதை; தந்தையையும் தாயையும் நினைந்து தரையில் உருளுவான். "வஞ்சகனின் குருதியைக் குடித்தே தீருவேன்" என்று வஞ்சினங்கொள்வான். பிறகு சினம் தன்னை என்ன செய்யும் என்பதையும் உணர்வான். ஏன்? படித்ததோடு அறிவுள்ளவன் ஆகையினால். "நான் முதலி யாரைக் கொல்வதினால் என் உயிரும் தப்பாது. அதனால் நான் நாட்டுக்குச் செய்யப்போகும் தொண்டையும் இழப்பேன். ஆகையினால் அவனுக உணருங்காலத்தை உண்டுபண்ணவேண் டும்" என்று முடிவு கொள்வான்.

விடுதலை அடைந்தான். தலைதெரிக்க ஓடிவருகின்றான். ஏன்? தந்தையைப்பார்க்க அவ்வளவு ஆவல் அவனுக்கு. அன் னப்பனையும், அங்குள்ளோரையும் நோக்கி "வாய்மூடி மௌனி களாக இருக்கின்றீர்களே! எங்கே என் தந்தை? சொல்லுங் கள் சீக்கிரம்;' என்று தழுதழுத்த குரலில் கேட்டான். பிறகு நடந்ததை அறியவும் அவன் அடைந்த துக்கத்திற்கும் அள வுண்டோ! அந்த வஞ்சகக்காரனிடம் எவ்வாறு விழித்துக் கொண்டு வாழ்வது என்று எண்ணி அதேசமயம் அன்னப்பனின் ஆதரவான வார்த்தைகளை மறுத்துவிட்டு அவ்வூரைவிட்டே வெளியேறினான் எங்கே சென்றான்? நல்வாழ்வுக்கு இன்பபுரி நல்லானை வா!வா! என்று அழைத்தது. அடுத்த ஊரை அடைந் தான். ஊரின் பெயர் பசிதீர்த்தாம்பட்டி. ஆம்! இவ்வேழை மகனின் பசியைத் தீர்த்துவைக்கப்போவதும் அப்படியே. சிறை யில் வாடியவன் ஆகையினால் களைப்பு, பசி, துக்கம் இவை களினால் களைப்படைந்து வழியிலுள்ள ஒரு சோலையில் விழ்ந் தான்

அந்தச் சோலைக்குச் சொந்தக்காரர் பெரும் பணக்காரர்; பெயர் வாசுதேவ முதலியார் இவருக்கு ஒரு பெண் உண்டு. பெண்ணின் பெயர் மல்லிகா. நன்றாகப் படித்தவள். கற்றபடி நிற்கும் அறிவுடையவள். அழகுக்கு உறைவிடம் அவளே என்று சொல்லலாம். சுருங்கக்கூறின் பாரதிகண்ட கனவுக்குத் தகுந்த "புதுமைப் பெண்"ணாகத்திகழ்ந்தாள் அவள். இளமை முதலே, ஏழைகள் உய்யப்பாடுபடவேண்டும். மக்களாட் சியை உண்டாக்கவேண்டும் என்ற அருமையான கருத்துகள் அவள் இதயத்தில் குடிகொண்டிருந்தன.

சோலைக்கு மல்லிகாவும் அவள் தோழியும் வந்தார்கள். அப்பொழுது அங்குக் களைப்போடு விழுந்து கிடந்தவனைக் கண்ட மல்லிகா உடனே களைப்புத்தீர சிறந்த வழிகளை வகையுடன் செய்தாள். நல்லான் விழித்துத் தன்னிலை உணர்ந்தான். அவர்களுக்கு நன்றி தெரிவித்தான். களைப்புற்றதற்கும் கவலைக்கும் காரணம் என்ன என்று நல்லானை மல்லிகா கேட்டாள். அவன் தன்னுடைய வாழ்வின் விசித்திரத்தைச் சிறிது விளம்பினன். மல்லிகாவின் இரக்கச்சிந்தையும், பணக்கார வீட்டுப் பெண்ணாக இருந்தாலும் ஏழைமேல் கொண்டுள்ள அன்பையும் எண்ணி வியந்தான். மல்லிகாவும் இவன் உரைகளிலிருந்து நாட்டுத்தொண்டே நாட்டமாகக் கொண்டுள்ளதை அறிந்து, இவன் சிறந்த அறிவாளி என்று உணர்ந்தாள். நல்லானும் மல்லிகாவின் நற்குணங்களை உணர்ந்துவிட்டான். பிறகு இருவர் கண்களாகிய மடைவழியாகப் பாய்ந்த அன்பு நீரில் இருவர் உள்ளமும் கலந்து கரைகின்றது. இருவரும் தொண்டுசெய்வதற்கு முயற்சி எடுத்துக்கொண்டார்கள்.

வாசுதேவ முதலியார் தன் மகள் மல்லிகாவுக்குத் திருமணம் செய்ய ஒரு பெரிய இடத்து மாப்பிள்ளையைப் பார்த்து வைத்திருந்தார். ஒருநாள் வாசுதேவ முதலியார் மல்லிகாவை அழைத்து "மல்லிகா, உனக்கோ வயது வந்துவிட்டது. இனி நீ கல்யாணம் செய்துகொள்ளாமல் இருப்பது சரியல்ல. நாயக்கன்பட்டி ஜமீன் வேதாசல முதலியார் மகனைத்தான் உனக்கு மாப்பிள்ளையாகப் பார்த்திருக்கிறேன். எல்லாம் முடித்துவிட்டேன். என்ன சொல்கிறாய்" என்றார் முதலியார். மல்லிகா திடுக்கிட்டு "அப்பா, என்ன காரியம் செய்தீர்கள்? இதற்காகத்தான் காரணமில்லாமல் நேற்று வந்திருந்த மூவர் முன்னால் என்னை அழைத்தீர்களோ? அப்பா, பெண்ணினத்தை மாட்டுக்குச்சமமாக எண்ணி வாணிகம் செய்யாதீர்கள். பெரிய இடம் என்றால் பெருங்குணங்கள் அமைந்துவிட்டது என்று பொருளா? பெற்றுவளர்த்த தந்தை என்பதற்காக என் அறிவை அடகுவைக்கமாட்டேன். கலப்பு மணந்தான் செய்து கொள்வேன். அதுதான் இன்றைய உலகில் சாதி மத வெறியர்களுக்குக் கொடுக்கும் சம்மட்டியடி!" இது கேட்டுத்துடித்த மல்லிகாவின் தந்தை, "அடிபாவி, உன்னை இதற்குத்தான் பெற்றேனா? என் குலப்பெருமையை அழிக்கவாவந்து பிறந்தாய்? அம்மா

மல்லிகா நீ படித்த பாடத்தையெல்லாம் உன் வாத்தியாரிடத்திலேயேகொண்டுபோய் காண்பியம்மா. முதலியார் மகனைத்தான் மணம் செய்துகொள்ளவேண்டும். தயாராயிரு.'' என்று சொல்லிவிட்டு 'ஜவுளி' எடுக்கப் பட்டணத்திற்குச் செல்கிருர்.

வழியிலே வாசுதேவ முதலியாரை ஒரு கொள்ளைக்கூட்டத்தினர் மறித்தனர். இவர் கொண்டு சென்ற பொருள்களையும் பறித்துக்கொண்டு இவரையும் கொன்று விட்டனர். ஆம்! இவர் இறப்புக்கு இவரேதான் காரணம். ஏன்? ஓடி உருண்டுவரும் செல்வம் சிலர்கையில் சிக்குண்டு யாருக்கும் பயனின்றி குவிந்து கிடப்பதால்தானே நாட்டில் எண்ணிறந்த திருடர்கள் பெருகிவிட்டனர்! அக்கூட்டத்தில் அகப்பட்டு தப்பிய ஒருவன் தன் எசமான் கொலையுண்டார் என்று மல்லிகாவிடம்தெரிவித்தான். மல்லிகா அடைந்த துக்கத்தை இங்கு வரையவேண்டியதில்லை.

மல்லிகா ஒரே குழைந்தை; செல்வமாக வளர்க்கப்பட்டவள்; ஆகையிளுல் தாய் சேய் சொல்லிற்கு மறுப்புக்கூறமாட்டாள். பிறகு சொத்துக்கே சொந்தக்காரி இவள் தானே; பின் கேட்கவாவேண்டும், மல்லிகா நிலங்களை உழவனுக்கே சொந்தமாகப்பிரித்துக்கொடுத்தாள். நல்லானும், மல்லிகாவும் நாட்டின் மேன்மைக்காகப் பாடுபடக் கிளம்பினர். இவர்கள் காதலையும் அருந்தொண்டையும் கண்டு 'உலகம்' உவந்தது. ஆனல் அறிவிலிகள் சிலர் தூற்றினர்.

இருவரும் முதியோர் பள்ளிக்கூடங்கள் பலவற்றை ஏற்படுத்தினர். ஏழைகளுக்குக் கல்வி கற்பித்து உதவினர். நாட்டின் நிலையை உணர்த்தினர். பாட்டாளிகளின் கூட்டாளிகளாக அவர்களுக்கு உதவிபுரிந்தனர் கிராம மக்களுக்குச் சுகாதார முறையை எடுத்துரைத்தனர். 'நம் வாழ்வை உயர்த்த வந்த தெய்வங்கள்' என்று சொல்லும்படியாகத் தொண்டாற்றினர். ஆங்காங்கே பல கூட்டங்களைக் கூட்டி ''கூண்டில் அடைக்கப்பட்ட கிளிகள் போல் பறக்க முடியாதபடி இன்று நம் நாட்டை ஒரு மன்னன் தன் மனப்படி ஆண்டு வருகிருன். ஆனல் மக்களுரிமை உயரவேண்டுமானல் முடியாட்சிக்கு முடிவுகட்டியாக வேண்டும்; மக்களாட்சியை மலர்விக்கவேண்டும். முடியாட்சியை அறப்போராலே கவிழ்க்கவேண்டும்.

உறங்கிக்கொண்டு கிடக்கும் உழைப்பாளிகளைத்தட்டி எழுப்ப வேண்டும் வீணில் உண்டு கொழுப்பவரை ஒழிக்கவேண்டும். பாட்டாளிகளின் காளான்பூத்த அடுப்பிலே தீ மூட்டவேண்டும். அவர்களின் ஓட்டைக்குடிசையை உயர்த்தவேண்டும். பஞ்சத்தைப் பஞ்சாகப் பறக்கடிக்க வேண்டும். கொடுமையுற்ற அடிமைவாழ்வை அகற்றவேண்டும். உழவனுக்கு நிலம் சொந்தமாகவேண்டும், என்று சொற்பெருக்காற்றி மக்களைத் தட்டி எழுப்பினர்கள்.

மக்களின் மனத்தை வீணை புரட்சி செய்து மாற்றுகிருர்கள் என்று அந்நாட்டு அரசன் இவர்களைச் சிறையில் அடைக்கும்படி கட்டளை இட்டான். மன்னனின் பெயர் நீதிதேவன். அட்டதரித்திரியத்திற்கு அன்னபூரணி என்ற பெயர் அமைந்ததுபோலத்தான். மக்கள் இதை அறிந்து கொதித்தெழுந்தனர். கூட்டங்கள், செய்தித்தாள்கள் எங்கும் புரட்சித் தீ பற்றிக்கொண்டு எரிகிறது. குற்றவாளிக் கூண்டிலே இருவரும் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுகிருர்கள். இவர்கள் செய்தது ‘இராஜத்துரோகம்’ என்று குற்றம் சாட்டப்பட்டு இருவரும் தூக்குமேடையில் நிறுத்தப்பட்டிருந்தார்கள் வெள்ளம் போன்ற மக்கள் திரளைக்கண்ட மன்னன் ஒன்றுமறியாமல் விழித்தான். தொண்டர் இருவரின் நீண்ட நாள் உழைப்பும, மக்கள் எழுச்சியும் மன்னன் மாளிகையின் எதிரே மக்கள் கூட்டமாகக் காட்சியளித்தது; எங்கள் தலைவர்களை விடுதலை செய். மக்களாட்சியைக் கொடு.” என்ற குரலாக மிளிர்ந்தது. மக்கள் ஒற்றுமை என்ற உளியினுல் கொடுமை ஆட்சி என்ற பாராங்கல்லையும் சுக்கு நூருக்க முடியும். எனவே, மன்னன், “அமைச்சரே இதற்கு என்ன செய்வது” என்று பதற்றத்துடன் கேட்கிருர். அமைச்சர் இளஞ்சேரர், “வேந்தே, இனி ஒன்றும் செய்ய முடியாது. மக்களின் ஆவேசம் நம்மை அள்ளி விழுங்கிவிடும்போல் இருக்கிறது அவர்களை விடுதலைசெய்துவிட்டு மக்களாட்சியைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்” என்ருர். மன்னனும் மறுக்க முடியாமல் மக்களாட்சியைக் கொடுத்து மக்களை மகிழ்விக்கிருன். நீதிதேவன் முன்னல் நீதிக்குப்புறம்பாக நடந்தாலும் இறுதியில் நீதிதேவன் என்ற பெயருக்கு அழகைக்கொடுத்துவிட்டான்.

மக்கள் மகிழ்ச்சி தாங்காது, "எங்கள் தலைவர்கள் வாழ்க!" என்று பேரிகை முழங்கினர். மக்களின் கூட்டத்தின் நடுவில் வைத்து இருவருக்கும் மலர் மாலை சூட்டினர். காதலர்கள் இருவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தனர். அந்த மலர் மாலைதான் அவர்கள் மணமாலையாகப் பயன்பட்டது. அந்த நாள்தான் அவர்கள் வாழ்வின் பொன்னுளாகும். பிறகு மக்களாட்சி மாசறநடந்தது. பொதுவுடைமைத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. தொண்டர்களின் மேலே குறிப்பிட்ட சொற்பொழிவின்படி எல்லாம் நடந்தேறியது என்ருல் அந்நாட்டின் பெருமையைச் சொல்லவாவேண்டும்! நாட்டுமக்களின் வாழ்வு மலர்ச்சோலையாகக் காட்சியளித்தது. அவர்கள் வாழ்வில் மகிழ்ச்சி மணம் கமழ்ந்தது. கலை, பண்பாடு, இலக்கியம் அவைகளின் பொலிவு பிற நாட்டாரைப் பொருமைப்பட வைத்தன. அந்நாட்டில் பஞ்சம், பட்டினி கிடையாது. தோழமை மக்களிடையே உலவியது. எங்கு நோக்கினும் இன்பம்தான் காணப்பட்டது!

---

தொல்லையில்லாமல் இருப்பதற்காகவே மக்கள் தாங்கள் எல்லோரும் ஒரே மதத்தினர் என்று கூறிக்கொள்கின்றனர். ஆனல் விஷயத்தை நன்கு ஆராய்ந்தால், எல்லா விஷயங்களிலும் ஒரே மதத்தையுடைய மூன்று பேரைக் கூட எங்கும் காணமுடியாது. —ஸெல்டன்

# நட்பு

இரா. தேசபந்து, (IV B. A Maths.)

உண்மையும், உழைப்பும், உறுதியும், ஊக்கமும், ஆக்கமும் அறிவும் படைத்த ஒருவன் தகைமையும், பகைமையற்று வாழும் பண்பும், பல்லோருள்ளும் நல்லோரை நாடிச்செல்லும் நாட்டமொடு வாட்டமற்ற நயம்படைத்த நல்லோனை, அன்பெனுந் தாளிட்டு குறுமதியினைக் களைந்தெடுக்கும் திறம் பெற்று, யாம் பெற்ற இன்பம் தன்னை நாடி, தன்மனத்திலே மாண்புடன் வீற்றிருக்கும் குறுமதியற்ற குணசீலன் பெறுக! என்ற மனம் படைத்த மக்களிடையே மாண்புடன் விளங்குவது நட்பு. இதனுக்கேற்ப "நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன் செய்ந்நன்றி கொன்றோர்க்குய்வில்லென அறம் பாடிற்றேயாயிழை கணவ" என்று புறம்பாடிய ஆலத்தூர் கிழாரால் செக்கரொளி வானிலே பன்மீன் நடுவிலே பாங்குடன் வீற்றிருக்கும் பான்மதி போன்று தமிழ் மக்களிடம் மட்டுமல்ல உலக மக்கள் அனைவரிடத்திலும் அறியாமை இருளையகற்றி அறிவைப் புகட்டும் ஆற்றல் படைத்த "அறம்" என சிறப்பித்து "புறம்" பாடியோரால் போற்றப்பட்ட, குறுகத் தறித்த குறள் பாடிய பொய்யாமொழியார் நட்பிற்கு நல்லதொரு இலக்கணத்தை நல்கியுள்ளார்.

" புணர்ச்சிப் பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்." என்று. நட்புக்கு நன்றாக ஆய்ந்து கூறுமிடத்து தொடர்போ, அல்லது பழக்கமோ வேண்டியதில்லை; ஆனால் ஒத்த உணர்ச்சியும் ஊக்கமும் நட்புக்கு வேண்டிய உரிமையை வரையாது கொடுக்கும் என்பது பொருள். தென்றல் வளரும்; நிலவு வளரும்; செல்வம் வளரும்; அவைபோல நட்பும் நாளுக்கு நாள் வளரும் தன்மையது.

அறிவுக்கு அறமென்று பட்டதை அழுத்தந் திருத்தமாக அறைதல், அல்லாததை ஆங்கனமே அடாது என்று அறிவுறுத்தல் உண்மை நண்பனுடைய ஓர் உயர்பண்பாகும். பறங்கிக்கு பறங்கி விதையும் பாகைக்கு பாகை விதையும் வேண்டுமென்பது அறிந்ததே; மற்ற எல்லாச் செடிகளும் அத

னதன் வித்திலிருந்தே முளைக்கின்றன என்பதும் அறிந்ததே. "விரையொன்று போட சுரையொன்ரு முளைக்கும்?" என்ற பழமொழியும் இதனை வற்புறுத்துகின்றது. பகை என்ற செடி நட்பு என்ற விதையிலிருந்துதானே முளைத்து வருகின்றது. நட்பு என்ற விதையின்றி பகையென்ற பயங்கரச்செடி எப்படி முளைக்கும் ?

மேலும் அறிவுடையோன், அறிவற்ற குறுமதி படைத்தவன் இவர்கள் நட்டைப்பற்றிக் கூறுமிடத்து, அறிவுடையோன் நட்பு வானிலே திகழும் வனப்புமிக்க பான்மதி போன்றதாகும். ஆனல் கயவனது நட்போ பொலிவற்றுத் தேய்வுறும் மதியினுக்கொப்ப செல்ல செல்லக் குன்றி, விரைவில் குறைந்துவிடும் சந்திரன் போன்றது. இதனையே "நிறை நீர நீரவர் கேண்மை பிறைமதிப்பின் நீர பேதையார் நட்பு" என்று ஆணித்தரமாக அறைந்துள்ளார் அமரப்புலவர் வள்ளுவர். நண்பன் தனது மனதிலே உறைவிடம் பெற்றுவிட்டால் அவனிடம் குற்றம் காணுமிடத்து அவனைத்திருத்தி நல்வழியில் நாட்டங்கொள்ள வழிவகுப்பானே தவிர, தன் மனதிலிருந்து நண்பனை திடீரென்று திடமுடன் வெருட்ட விரும்பான்.

நாம் நூலினைக் கற்குமளவு, மணற்கேணியினின்று நீர் எப்படித் தோண்டத்தோண்டக் குறையாமல் கிடைக்கின்றதோ அதனுக்கு ஒப்ப ஆழ்ந்த கருத்துக்களும், மேம்பட்ட அறிவும் மிளிர்வதேபோல் நற்பண்பு உடையோரிடத்தில் நட்புகொண்டால், நாளுக்கு நாள் நலிந்து, மெலிந்து, ஒழியாது, இன்பம் பயக்கும் என்பதனை நாயனர்,

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

என்று சுருங்கக்கூறி விளங்கவைத்துள்ளார். துன்பம் நேருமிடத்து ஒதுங்கி நின்றும், இன்பமுடன் வாழுமிடத்து "முதலைக் கண்ணீர் வடித்தல்" என்ற சொல்லினுக்கு ஒப்ப தம் தந்திரத்தால், துன்பத்தினின்றும் விடுபட்ட பிறகு, வந்தடைந்து, இன்சொல்கூறி, இனிது நாடி, இன்னலுற்றதனை நினைந்து வாடுதல்போல் வாடி நட்டல் நட்பன்று. நெஞ்சம் மலரும்படி உள்ளன்புகொண்டு நட்டலே நட்பாகும். என்பதனை "முகநக நட்பது நட்பன்று நெஞ்சத் தகநக நட்பது நட்பு" என்ற குறள் மூலமாக திருவள்ளுவர் நமக்கு

நன்கு விளக்கியுள்ளார். நண்பனது நலமற்ற பண்பினைப் பல ரறிய பறைசாற்றுதல் நட்பன்று. இத்தகை தன்மையினை, உண்மையில் பெற்ற பதர்களை விலக்குதல் மிகவும் சிறப்புடைய தாகும். உலகிற்குகந்த நல்லதொரு உயர்நிலையினை நட்பிற் குக் கூறுமிடத்து, பச்சோந்தியின் பண்பும், பாசமற்ற உள்ள மும் இருத்தல் கூடாது. அதற்குமாருய் ஏசுவின் தன்மையும் மானின் வாழ்க்கையும் மக்களுக்குத்தேவை. இதனைஉணர்த்த

" நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை "

என்று கூறியுள்ளார் நாயனுர்.

நட்பென்பது ஆராய்ந்து அதனுக்குத் தக்க தன்மைகளை ஊகித்துணர்ந்து உற்றதனையறிந்து நாடுதலே நட்பாகும். ஊடலுக்குப்பின் கூடல்போல் நட்பினுக்கு அடிப்படையில் ஆராயத்தக்க இயல்புகள், குணம், குடிப்பிறப்பு, குற்றம், குறைத்துக்கூருத நல்லறிவு இவைகளாகும். ஆதலால் இவை படைத்த மக்களோடு நட்பு கொள்ளல்வேண்டும். இதனுக்கு அச்சாணிபோல் அறைந்துள்ளார் பொய்யில் புலவர்.

" குடிப் பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல் வேண்டும் நட்பு " என்று.

உயர்குடியில் பிறந்து தம்மையடையும் பழியினுக்கு அஞ்சி நாணும் தன்மை படைத்தோனை, பொருள் கொடுத்தாவது நண்பனகக் கொள்ளல் வேண்டும் என்பதனை உணர்த்தியுள் ளார் வள்ளுவர். ஊதியம் என்று கூறத்தகுந்த உயர்பண்பு யாதெனின் அறிவற்ற, அன்பற்ற, குறுமதி படைத்தோனிடம் நட்பு கொள்ளுதலைவிட்டு அவனுடைய நட்பென்னும் வலுவற்ற நூலின் பிணைப்பிலிருந்து நல்லதருணம் நாடி நழுவுதலாம். இதனைகூறுமிடத்து,

" ஊதியம் என்பது ஒருவர்க்குப் பேதையார் கேண்மை ஒரீஇ விடல் ". என்று கூறியுள்ளார், நண்பனென்ருல் இன் றைய நிலையிலே மாணவர்களும், மற்றைய தோழர்களும் காரணமின்றி சிரித்தோ, தோளோடு தோள் பூட்டி, கருத்தற்ற வற்றைக் காலம் கழிவதறியாமல் கண்மூடித்தனமாய் பேசு

பவரை நண்பனென்று நாடுகின்றனர். ஆய்ந்து கூறுமிடத்து இதுவா உண்மை நட்பு! அன்று "ஐரோப்பாவின் நோயாளி" யாகக் கருதப்பட்ட துருக்கி இன்று தலைமிர்ந்து நிற்பதன் காரணம் கமால் பாஷா இளைஞர்களின் நட்பை நாடியதால் தான். வீணையிலிருந்து நாதம் பிறக்கும்; மலரிலிருந்து மணம் தோன்றும்: காதலிலிருந்து எல்லாம் தோன்றுமல்லவா ? அதைப் போல நட்பிலிருந்து நலம் பிறக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

மலரிருப்பது மணம் நுகர; கனியிருப்பது ரசம்பருக; வாழ்க்கை யிருப்பது இன்பக் கேணியில் குளிக்க; இதனுக்கு ஒப்ப நட்பென்பது நன்மைபயக்க. அணுகுண்டு கண்டு உலகம் அதிசயிக்கின்றது. ஆனால் அதே சமயம் அச்சமுமடைகிறது அதன் அழிவுச் சக்தி என்ன கேடு தருமோ என்று! இந் நிலையைத்தான் காணமுடியும் நாடோடியின் நட்பில்.

" மக்களே போல்வர் கயவர் " இதனை ஆய்ந்து அறிந்து நல்லோரை நாடலே நட்பு. " பணிகுதல் இல்லை அஞ்சுதல் இல்லை பாய்ந்திடும் ஒற்றுமையாலே" என்ற புரட்சிக் கவிஞர் கூற்றுக்கிணங்க, நல்லதொரு நட்பினை நாடி நாட்டுக்கு நலந்தனைத்தேடி வாழ்தல் வேண்டும். மானமே மனிதனை மனிதனாக்குகிறது என்பதனை மாணவர்களும், மற்றைய மக்களும் உணர்தல் வேண்டும். உலுத்தர் பேச்சை உதறித் தள்ளுதல் வேண்டும் ! சாதிமத பேதத்தைச்சாடுதல் வேண்டும்! சமத்துவம் நாடுதல் வேண்டும் ! சகோதரத்துவம் கோருதல் வேண்டும் ! காதலித்தவளைக் கடிமணம்புரியும் வாய்ப்புப் பெற்ற காளையின், களிப்பைப் போன்றதுதான் உண்மை நண்பனை நாடப்பெற்றோன் உள்ளம். கார்கண்ட மயிலை, கதிரவன் கண்ட கமலத்தைக் காணவும் வேண்டுமோ? இதோ தமிழர்களைக் காணுங்கள்! பிறப்பால்மட்டுமல்ல; உணர்வால் பண்பால் தமிழர்களாக உள்ளவர்களைக் காணுங்கள்; இவ் வளவும் தெரியும் !

# என் கனவு!

பொ. அரங்கராசன்.

அன்பும் பண்பும் ஆருயிர் வாழ்வும்
அறிவும் ஆற்றலும் போகுமுன் தாழ்வா?
அடக்கினா ரென்னை அடங்கவில்லை நான்
அழுத்தினா ரென்னை இறக்கவில்லை நான்
அறிவுரை புகன்றார் அமைதியோ டொருவர்
ஏற்கவில்லை நான் காரணம் என்னை?

காதலும் வீரமும் கடமையும் கருணையும்
கற்புடன் வாழ்வும் கனிவுட னீதலும்
தேடிவருபவர்க்கிவை திறந்து காட்டினால்
தெவிட்டா தினிக்கும் தீந்தமிழ் மொழியை
தேனினு மினிய தென்னவர் மொழியை
தேடினால் கிடைக்குந் தீங்கிலா மொழியை

குழவிகள் கொஞ்சும் மழலை மொழியை
குருடர்கள் போற்றும் குறையிலா மொழியை
இலக்கியம் இலக்கணம் என்றநூல் இவையோடு
இன்ப ஊற்றாம் அகப்பொருள் புறப்பொருள்
திருக்குறள் மேகலை சிலப்பதி காரமோடு
குண்டல கேசியும் குறுந்தொகை நன்னூல்

சிந்தா மணியும் தொல்காப் பியத்தொடு
அனைத்தையு மற்றும் நற்றிணையும் கொண்டதொடு
ஆன்றோர்களா லறிவு மொழிகள் எனப்படும்
மற்ற மொழிகளில் மாட்சிமை யுடனே
இயல்பாய் இயங்கும் என் தாய் மொழியை
இழிவாகப் பேசினான் என்ற சொல்லைஎன்

இருசெவிக ளாலும் கேட்ட போழ்தில்
ஈயத்தைக் காய்ச்சிக் காதில் ஊற்றினான்
என்று கண்டேன் கூறியவனைக் கொன்றேன்
சுருக்கென் றேதோ படுக்கையில் கடிக்க
திடுக்கென விழித்துத் தேடிப் பார்க்க
மூட்டைப்பூச்சி ஒன்று மூலையில் ஓடினதே!

# விலங்கின்பால் அன்பு.

க. கணேசன், II P.C.N/T.

**உலகில்** மக்களனைவரும் உவகையுடன் உய்வதற்குப் பலவித வசதிகள் தேவை. அவற்றில் பெரும்பாலானவற்றை நாம் விலங்குகளினின்றே அடைகின்றோம். வரையற்ற வழிகளில் பல விலங்குகளும் நமக்கு உதவுகின்றன.

முதலில் உலகில் உறையும் உயிர்கள் அனைத்திற்கும் உணவு இன்றியமையாதது என்பது யாவரும் உணர்ந்ததே. அவ்வுணவைப் பயிரிடுவதற்குப் பாங்கற்ற பூமியை உழுது பதப்படுத்த மாடுகள் உழைக்கின்றன. விளைந்த நெல்லை வீட்டுக்குக் கொணரவும் அவைகள் உதவுகின்றன. வயோதிகர்களையும் இளங்குழவிகளையும் பாலூட்டி வளர்ப்பதும் விலங்கினமாகியப் பசுவே. பலம் குன்றியவர்களுக்கு எளிதில் பலமூட்டும் முட்டைகளை இடுவதும் கோழிகளே. கடுங்குளிரைத் தடுக்க நாம் தரிக்கும் கம்பளங்கள் ஆடுகளிலிருந்து கிடைக்கும் உரோமத்தினால் ஆனவைகளே. மக்களது உடல் உழைப்பைக் குறைப்பதற்கு விலங்கினங்கள் பலவாறு பயன் படுகின்றன. பயிர்களைச் செழுமையாக்கும் சிறந்த உரங்கள் அவைகளின் கழிவுப்பொருள்களிலிருக்கின்றன. காரிருளில் கள்வர், வீட்டை அணுகின் குரைத்து அவர்கள் வருகையை உணர்த்துவதும், தன்னைப் பரிமாரிப்பவனையும் தனது உயிர் போமளவும் புரப்பதும் நாய். மனிதனால் தூக்கமுடியாத மூட்டைகளையும், கருங்கற்களையும் தங்களது முதுகுகளில் சுமந்து செல்வதும் கர்த்தபங்கள்தான். வீரர்கள் ஏறியோடவும், சவாரி செய்யவும் பயன்படுகின்றன குதிரைகள். இங்ஙனமே, பல விலங்குகளும் நமக்கு நண்பனைப்போல பற்பல துறைகளில் பயன்படுவதால் தான் மனிதவர்க்கமே அமைதியான சிரமமற்ற வாழ்க்கையை நடத்த முடிகிறது. அவைகளில்லாவிடில் நாம் மிகவும் வருந்த நேரிடும்.


அங்ஙனம் அரும்பாடுபட்டுழைக்கும் விலங்குகளினால் நாம் பல உதவிகளைப்பெறுவதை நாம் கண்கூடாகக் கண்டிருந்தும் அவற்றைக் கவனியாது வாளாவிடுதல் மிகவும் தவறன்றோ!

செய்நன்றியறிதல் என்ற கொள்கைப்படியேனும் அவற்றை ஓரளவாவது கவனிக்கவேண்டும். நமக்கு வீடுகள் நன்ருகவும், மழை வெயில தாக்காதபடியும் மிகவும சீரியமுறையில் அமைத்துக்கொளகிருேம். ஆனல் விலங்குகளுக்கு நாம் அமைக்கும் கொட்டில்களின் நிலைமையோ மிகவும் தாழ்ந்த நிலையில் உள்ளது. நமக்கு வியாதி ஏற்படின், உடனே உகந்த வைத்தியரிடம சென்று மருத்துவ சிகிச்சைப் பெறுகிருேம். ஆனல், விலங்குகளுக்கு வியாதி ஏற்படின் சூடு போட்டும், மிளகாய்ப் பொடியைக் கண்களில் தூவியும், இன்னேரன்னத் துன்பங்களைச் செய்கிருேம். அவை வியாதியால் வாட்டமுற, நாம் நமது பலம் கொண்டமட்டும் அவற்றை அடித்து, ஓய்வு இல்லாமல், உழையாது உழைக்கச் செய்கிருேம். பலவீனததால் சரிவர வேலைசெய்ய இயலாவிடின, தாரினல் குத்தியும், நகர மறுத்தால் வாலைக்கடித்தும் கூடத் துன்புறுத்துகிருர்கள. கடினமாக உழைத்த மாடுகளுக்கு ஓரளவு வைக்கோல் போட்டுவிட்டு, மறுநாளும் அவ்விதமே கடினமான வேலை வாங்குகிருர்கள் சிலர். கொட்டில்கள் அன்ருடம் சுத்தம் செய்யப்படுவதில்லை. மற்றும் சிலர் விலங்குகளை இளவயதில் நன்ருக வேலை வாங்கிவிட்டு, வயது சென்றுத் தளர்ச்சியடைந்தவுடன் விட்டுவிட நினைக்கின்றனர். விறகமுடியாவிடின் தெருவில விட்டுவிடுவர். அரசினருங்கூட இளமையில உழைத்த மாந்தர்களுக்கு இறுதியில் உபகாரச் சமபளம் கொடுத்து உதவுகினறனர். அங்ஙனமிருக்க, இந்தப் பரிதாபமான விலஙகுகளுக்கு ஓரளவு உணவுகூட அளிப்ப தில்லையே! அவையும் நமமைப்போல கருவுற்றுப் பிறந்து உண்டு வளர்ந்து உருவாகியவைதானே! சிலநாய்களை வளர்க்க விரும்பினும் அவைகளைக் கல்லால் அடித்து அவைகள் கத்துவதைக்கண்டு களிப்படைகினறனர் சில மக்கள். இவ்வாருக அறிந்தும் அறியாமலும் விலங்குகளுக்கு இன்னல் விளைவித்து வருகிருேம். விலங்குகளை சீரிய முறையில் அன்புடன் நடத்த வேண்டும். சுகாதார முறையுடன் அமைக்கப்பட்டக் கொட்டில்களில் கட்டவேண்டும். பற்பல இடங்களிலும் தண்ணீர்த் தொட்டிகளைக் கட்டிவைத்து மாடுகள் வேண்டும்போது அருந்துமாறு செய்தல்வேண்டும். நோயுண்டமாடுகளை வேலை வாங்குவோரைக் கண்டுபிடித்து அங்ஙனம் செய்யாவண்ணம் கவனிக்க வேண்டும். சர்க்கார் இதனபொருட்டு ஒரு சங்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். கடின வேலைக்குப் பின்னர் விலங்குகளுக்குச்

சரியான சரிவிகித கலப்புணவுகள் அளிக்கப்படவேண்டும். வாரத்தில் ஒரு நாளைக்கு வேலை வாங்காமல் விடுமுறை அளிக்க வேண்டும். வியாதியுண்ட காலத்து கொடூர சிகிச்சைகள் புரியாது தகுந்த மருத்துவரிடம் காணபித்து எளிதான மருத்துவச் சிகிச்சைகள் செய்யவேண்டும். கன்றுகளுக்குப் பாலைவிடாமல் கறக்கும் பழக்கத்தை அகற்ற வேண்டும். கூடுமானவரை, அனேக இடங்களில் கால்நடை சிகிச்சை சாலைகளை ஏற்படுதத வேண்டும். வில்ங்குகளின் குறிப்பறிந்து அவற்றிற்கு வேண்டுவனவற்றை நம்மால் முடிந்தவரை செய்தல் வேண்டும்.

ஆகவே, நம்மால் இயன்றஅளவு விலங்குகளை அன்போடு நடத்தினுல் அவைகள் நல்லமுறையில் உழைக்க முடியும். அவ்வித உழைப்பில் தான் நம் நாட்டுச் செல்வம் பெருகும். விலங்குகள் பலவீனமாயிருந்தால் விவசாயம் போன்ற தொழில்கள் செவ்வனே நடைபெருது. பஞ்சம் மேலிட்டு, நாம்வருந்த நேரிடும். ஆகையால் அவற்றைப் பரிவுகூர்ந்து பார்ப்போமாயின் நம்நாடு முன்னேற்றமடையும். நாமும் நல்வாழ்வு வாழ்வோம்!

**"அறிவை விலைக்கு வாங்கமுடியும்; ஆனல் அன்பு ஒரு நாளும் சந்தைக்கு வருவதில்லை."** — ஜே. ஆர். லவல்.



# எங்கள் பயணம்.

**டி. பி. சீனிவாசன்.**

எங்கள் பயணத்தை 14—9—54 அன்று, திருச்சி செல்லும் புகைவணடி துவக்கிவைத்தது. ஆசிரியர் சுகுமாரன் தலைமை வகித்தார். இருபது மாணவர்கள் கலந்துகொண்டோம்.

சரித்திரம் புகழும் மங்கம்மா சத்திரத்திலிருந்து தான் மகிழ்ச்சிப் பயணம் தொடங்கியது என்று கூறத்தேவையில்லை. ஏனெனில் நாங்கள் மதுரை அடையுமுன்பு மகிழாத நேரமேயில்லை! பகலெல்லாம் நூல் நிலையம், இரவெல்லாம் சினிமா நிலையம். அந்தக் கட்டிடத்தின் பெயரை நூல் நிலையம் என்று அழைப்பதா, சினிமா நிலையம் என்று அழைப்பதா? இரண்டுந் தான். நல்லதொரு ஏற்பாடு - நினைவில் நிற்கும் ஓர் கட்டிடம். எங்கள் கவனத்தைக் கவர்ந்த அடுத்த இடம், (Poly Techanic). கலையையும், விஞ்ஞானத்தையும் படித்து பயன் என்? தொழிலைப்படி என்றது அந்நிலையம். உள்ளே சென்றோம். எல்லாவற்றையும் கண்டோம். ஏன் இங்கே படித்திருக்கக் கூடாது என்ற வினா எங்களை நோக்கிவந்தது. நாங்கள் சென்ற அடுத்த இடம் டி. வி. எஸ் தொழிற்சாலை. 1000 தொழிலாளர் மூலை முடுக்கெல்லாம் தென்பட்டனர். அவரவர் பகுதியிலிருந்தும் ஒலிகள் கேட்டுக்கொண்டிருந்தன. கடைசி மூலையில் ஓர் பஸ் நின்றது. அந்த பஸ்ஸைப் பார்க்கும்போது அது "என்னுடைய ஒவ்வொரு பகுதியையும் ஒவ்வொருவர் செய்கிறார்" என்று கூறி, வேறொருவரைக்காட்டி, "இவர்தான் எனக்கு உயிர் கொடுக்கிறார்" என்றது. நான் பொருளாதாரத்தில் படித்த "Division of Labour" என்ற பகுதியை ஞாபகப்படுத்திக்கொண்டேன். மதுரை என்றாலே நாயக்கர் மஹால் தான் முன்நிற்கிறது. பார்த்த இடமெல்லாம் கலைச்செல்வியின் சிலம்பொலி! மறக்க முடியாத நடனம்! கயல்விழியாளின் [ மதுரை மீனாக்ஷி ] அழைப்பு எங்களது நினைவிற்கு வந்தது. வானளாவிய கட்டிடம், எதிரே ஓர் நீர்நிலை. ஓவியப்பாவைகள் ஓர்புறமிருக்க, சிலைச்செல்விகள் மறுபுறமிருக்க, கயல்விழி அரியாசனத்திலிருந்தாள் — எங்களுக்கு நல்லதொரு வரவேற்பு. திருப்புறங்குன்றம், மதுரைக் கல்லூரிகள் முதலியன கண்டு,

இரண்டுநாள் மதுரையில் "கழித்தோம்........" இல்லை இரண்டு நாட்கள் எங்களிடமிருந்து சீக்கிரமாக விடைபெற்றன. சோழ நாட்டான் பாண்டிய நாட்டில் எத்தனை நாட்கள் தங்குவது!

சேரநாடு எங்களை அழைக்காவிட்டாலும் நாங்களே போய்ச்சேர்ந்தோம். "Grand Hotel" என்ற 'சிறியவிடுதி" யில் தங்கியிருந்தோம். சேரநாட்டின் தலைநகரான திருவனந்த புரம் செழுமையான ஓர் நகரம். எங்கள் தங்கை எங்களோடு இருந்தபோது, தமிழ்த்தான் பேசினாள். ஆனால் இப்பொழுது மலையாளம் பேசுகிறாள் — தமிழையே மறந்துவிட்டாள் — எங்களோடும் சரிவர பேசவில்லை. தங்கை தானே பின் உணர் வாள். காலை உணவிற்குப்பின் உலாவச் சென்றோம். University College, கடற்கரை, நீர்வாழ்வன நிலையம், விமான நிலை யம் முதலியன கண்டோம். நினைத்தால் ஒவ்வொன்றும் மனக் கண்முன் நிற்கிறது. பின்பு........ஓர் பெருங்கட்டிடம். அதனுள் உலகத்திலுள்ள பிராணிகளில் எறும்பிலிருந்து யானை வரையில் இருந்தன. எங்களுக்குத் தெரியாத எத்தனையோ பிராணிகள் இடம் பெற்றிருந்தன. ஆனால் அவைகள் ஆட அசைய வில்லை! பாவம்!

பின் மிருககாட்சிச் சாலைக்குச் சென்றோம். இங்கும் எல்லா வித மிருகங்களும், பறவைகளும் இருந்தன எல்லாம் விநோதை மானவைகள். முன்னையதைப்போன்று இறந்தவை அல்ல, உயிருள்ளவை!

திருவனந்தபுரத்தைப் பார்த்தவர்களுக்கு குமரிமுனையை யும், குமரியைக்கண்டவருக்கு, திருவனந்தபுரத்தையும்காட்ட ஓர் உருவம் ஓயாது தொண்டு செய்து கொண்டிருந்தது. அது தான் எங்களையும் குமரிக்கு "எடுத்து"ச் சென்றது. இடையே பல இயற்கை எழில்களையும் காட்டியது. 18—9—54 காலை 7-30 மணிக்கு குமரி அடைந்தோம். உலகே ஓய்ந்தாலும் கடல் ஓயாது என்பர். அதுவும் மூன்றுகடல் சேர்ந்தால்! ஓரே ஓசை! மூன்று கடலின் அலைகளும் ஓர் குன்றை அடிக்கடித் தாக்கின. குன்று அசையாததைக் கண்ட அலைகள் ஏமாந்து தரையை வந்து முட்டின. இங்கும் ஏமாற்றம்! "ஏன் இந்த முயற்சி" என்றது எங்கள் உள்ளம். "நீ குமரிக்கண்டத்தை விழுங்கியது போதும், மீதித்தமிழகத்தை விட்டுவிடு; அமைதி

யுடன் இரு " என்றுள் அங்குள்ள குமரிதேவி. தடுத்து நிறுத்துவதுபோன்ற குமரிசிலை தெற்கு நோக்கியுள்ளது.

அன்று மாலைவரை இன்பமாகப் பொழுதுபோக்கினோம். மாலை 5 மணிக்கே மேற்குநோக்கிச் சென்றோம், ஓய்வு எடுத்துக்கொள்ளச்செல்லும் சூரியனை, கடலோடு இணைத்துக்காண. ஆனால் அவன் கடைக்கண்காட்டி, மேகத்திரையில் ஒளிந்து மறைந்தே விட்டான். அந்தக்காட்சி தான் என்ன காட்சி! மறுநாள் "காலை இளம்பரிதி"யைக் காணச்சென்றோம் ஆனால் இங்கும் மேகம் எங்களுக்குத் துரோகம் செய்தது.

அன்று திருநெல்வேலிக்குப் புறப்பட்டோம். 60 மைல் பஸ் பிரயாணம். மணிமுத்தாறு திட்டம், நாங்குநேரி ஏரி முதலியன கண்டோம், பஸ்ஸிலிருந்தபடியே. R. V. லாட்ஜில் எங்கள் பெட்டிப்படுக்கைகளைப் போட்டுவிட்டு, திருக்குற்றாலம் காண, நீராட சென்றோம். " தேனருவித்திரை எழும்பி வானின் வழி ஒழுகும் " அருவிகண்டோம. நீராடினோம், என்ன குளிர்ச்சி! சூழ்நிலையும், சிறநதவையே. மலையிலே மரம், செடி. கொடி. " செல்வம் மல்கு செண்பகம வேங்கை சென்றேறிக் கொல்லை, முல்லை, மெல்லரும்பு ஈனும் " மலைகள். அந்த மெல்லிய பூங்காற்று உடற்கின்பம்! கண்ணுக்கின்பம் இயற்கை எழில்! உள்ளத்திற்கின்பம் நண்பர்கள் மகிழ்ச்சி!

திருநெல்வேலியில் மறுநாள் தங்கினோம். நகரின் கல்லூரிகள் கண்டோம். அந்நகர் எழில்மிக்க நகராக இல்லாவிடினும், மக்கள் தொகை அதிகம். எங்கள் பயணம் சோழநாட்டிலே தொடங்கி, பாண்டிய நாட்டில் இருநாள் தங்கி, சேர நாட்டை அடைந்து மீண்டும் பாண்டியநாட்டிலே முடிவுற்றது வாழ்க்கையில் மறக்க முடியாத ஓர் பெரும் பயணம்!



# திருவள்ளுவரும் - ஷேக்ஸ்பியரும்.

**வ. பெருமாள்,** முதல் வகுப்பு.

இந்த ஈரங்கண்மா ஞாலத்தில் தோன்றியுள்ள பற்பல இலக்கியங்கள் அந்தந்த நாட்டின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் விளக்கா நிற்கின்றன. இவ்வாழிசூழ் தரணி போற்றும் தன்னிகரில்லாத தமிழகத்தின் தகைமைசான்ற பண்புகளை இவ்வையத்து மாந்தர்களுக்குச் செலச்சொல்ல, செந்நாப் போதார் செப்பிய திருக்குறளே சாலும். தமிழகத்தில் திருவள்ளுவர் தோன்றியுள்ளதைப் போன்று ஆங்கில நாட்டில் தோன்றியுள்ள பேரறிவாளர்தான் வில்லியம் ஷேக்ஸ்பியர். இரண்டு உலகப் பேரறிவாளர்களின் கருத்து ஒற்றுமையும் ஈண்டு சிறிது ஆராய்வோம்.

வீரனின் இலக்கணத்தைக் கூறப்போந்த திருவள்ளுவர் "போர் ஏற்பட்டால் அதனை விரும்பி உயிரை விடுவதற்கு அஞ்சாத வீரரை, அரசர் வேண்டாமென்று வெகுண்டாலும் தங்கள் புகழ்ச்சியில் குறைபாடுடையரல்லர்" என்றார்.

"உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும்சீர் குன்றல் இலர்."

ஷேக்ஸ்பியர் இதே கருத்தை "ஜூலியஸ் சீசர்" என்னும் நாடகத்தில்

"Cowards die many times before their deaths;
The valiant never taste of death but once."

என்று தீட்டியுள்ளார்.

"நேற்று வாழ்ந்த ஒருவன் இன்றில்லை என்னும் ஒரேஒரு பெருமை தான் இந்த ஆழிசூழ் உலகத்திற்கு உண்டு" என்பதே வள்ளுவர் உட்கிடக்கை.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு."

நமது ஆங்கிலக் கவிஞரும் இதே பொருளை

" Golden lads and girls all must,
As chimney sweepers, come to dust. "

என்று சிம்பலினில் கூறிப்போந்துள்ளார்.

ஒருவனை ஆராய்ந்துத் தெளிய வேண்டுமானால் அவனுடைய பெருமைக்கும் மற்றைய சிறுமைக்கும் அவரவர் செய்யும் செயல்களையே உரைகல்லாகக் கொண்டு மதிப்பிடலாம்.

" பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமேக் கட்டளைக் கல்."

என்ற திருவள்ளுவர் திருவாக்கையும்,

" The evil that men do lives after them;
The good is oft interred with their bones. "

என்ற (ஜூலியஸ் சீசர்) ஷேக்ஸ்பியர் வாசகத்தையும் ஈண்டு நோக்கத்தக்கது.

நட்பின் தன்மையை உலகச் செம்மல்களுக்குச் செப்பப் போந்த செந்நாப் போதார் "நண்பர்போல் நன்மையானவற்றை சொன்னபோதிலும், பகைவர்கள் சொற்களின் உண்மை விரைவில் உணரப்படும"

" நட்டார்போல் நல்லவை சொல்லினும்
ஒட்டார் சொல் ஒல்லை உணரப்படும். "

என்று சுருங்கச்சொல்லி விளங்க வைத்துள்ளார்.

நாடக ஆசிரியராகிய ஷேக்ஸ்பியரும் " நீ விரும்பிய வண்ணம் " (As You Like It) என்ற நாடகத்தில்

" Most friendship is feigning,
Most loving mere folly. "

என்று எழுதியுள்ளார்.

பெருமையின் இலக்கணத்தை வகுக்க எண்ணித்துணிநத வள்ளுவர் " மேல் நிலையில் இருந்தாலும மேன்மைப்பண்பு இல்லாதவர் மேலானவர் அல்லர், கீழ்நிலையில் இருந்தாலும் இழிகுணம் இல்லாதவர் கீழ்மக்கள் அல்லர். "

" மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழ் அல்லார் கீழ் அல்லவர் "

என்று செப்புகின்றார்.

நமது ஆங்கிலக் கவிஞரும் "பன்னிரண்டாம் இரவு" என்னும் நாடகத்தில்

" But be not afraid of greatness: some are born great, some achieve greatness and some have greatness thrust upon them. "

என்று மொழிகின்றார்.

பொறுமையைப்பற்றி பேசுங்காலை "செருக்கினால் தீங்கானவற்றைச் செய்தவரைத் தாம் தம்முடைய பொறுமைப் பண்பினால் வென்றுவிட வேண்டும்."

" மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல் "

என்ற வள்ளுவர் வாய்ச்சொல்லையும்,

" Still have I borne it with a patient shrug,
For sufferance is the badge of all our tribe. "

என்று வெனிசு வணிகன் (Merchant of Venice) என்ற நூலில் எழுதிய ஷேக்ஸ்பியரின் வாய்ச்சொல்லையும், ஈண்டு நோக்கத் தக்கது.

வறுமையைப்பற்றி பேசுங்காலை குறள் ஆசிரியர் "நேற்று கொலை செய்ததுபோல் துன்புறுத்திய வறுமை இன்றும என்னிடம வருமோ "?

" இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு. "

என்று ஏங்குகின்றார்.

ஷேக்ஸ்பியரும் " ஹாம்லட் " எனும் நாடக நூலில்
"When sorrows come, they come not single spies,
But in battalions. "

என்று எழுதுகின்றார்.

பொய்யில் புலவர் புகன்ற

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."

என்ற ஆழ்ந்த அறிவுரைக்கும்,

"Lend thy ear to all, but few thy voice."

என்ற ஷேக்ஸ்பியர் அறிவுரைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு ஆராயத்தக்கது.

நலம் புனைந்துரைத்தல் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவனார்

"நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்"

என்று தலைமகன் தன் ஆருயிர் தலைமகளின் மென்மைத் தன்மையைப் புகழ்ந்து பாராட்டுவதாகக் கூறுகின்றார்.


இதே உட்கருத்துள்ள "அரசன் லியர்" (King Lear) என்ற கூத்துப்பனுவலில்

"Her voice was ever soft,
Gentle and low, an excellent thing in woman."

என்று செப்புகின்றார்.

எனவே திருவள்ளுவரும் ஷேக்ஸ்பியரும் இருவேறு நாட்டில் தோன்றியுள்ள போதிலும் அவர்களது உயர்ந்த கருத்துக்கள் ஒன்றாகவே இருக்கின்றன. (Great men think alike). எனவே ஷேக்ஸ்பியரை ஆங்கில நாட்டுத் திருவள்ளுவர் என்று செப்புவதில் சற்றும் தவறு இருக்கமுடியாது.

MADRAS



PUBLIC LIBRARY
21 NOV 1956
MADRAS

# Shall students take part in politics?

( N. RADHAKRISHNAN, IV B. A. )

This is a question discussed by almost all people through the length and breadth of the country. This is not a question to be answered lightly. Some are of opinion that students form an essential part in political organisations, whereas some others advocate a complete non-interference in politics.. As it is helpful to consider the views of various kinds of people to come to a conclusion, let us further discuss this topic.

Some great Politicians, take the students' participation as one of the powerful weapons in moulding the minds of the people or to achieve certain ends. Mustafa Kemal of Turkey wanted the people to follow the culture and civilisation of the West. He felt that the students must be taught first and they were sent to foreign countries for their studies. After a few years of his coming to power he brought into practice many things that he wanted to do. As the result of his effort, the veils (purdha) of women went away for ever. Superstitions took to their heels. The country was completely transformed in its activities, outlook and conventions with in a few years. The secret of his success lay in the method of educating the students in the best possible ways in all matters. In China, the students were provided with scissors and kept standing in the corners of the streets to cut the long-grown back pair of the people, as it was considered as an uncivilized habit. They met with success. Even now in Russia political matters are taught in the schools. Even though it is to

make them patriotic, to appreciate the activities of their leaders, no doubt, it is also a major intention to make them capable of leading the country in such a proper way as to make the country prosperous in the future. So the modern politicians seem to thing that there is no harm in the students taking part in politics and that students can sometimes do more effective work than the politicians themselves At the same time, they say, that does not mean that they must neglect their studies.

Let us next take the views expressed by the parents into consideration. Students who take part in politics are generally not good at studies. Of course there are some exceptions. But we are not dealing with those who have exceptional or extraordinary talents. Though it is argued by great educationists and scholars themselves that the modern education is defective, it is a powerful means to earn one's bread at present. The man who is not a B E. graduate may be more capable of constructing a dam or building than an actual B. E and a village medical practitioner may be more efficient in curing some diseases than a learned M. B. B. S doctor. But unless one has such a qualification one will not become an Engineer or doctor. It is with this hope that parents educate their children in their own toilings and strugglings of life. They spend a greater part of their income on the education of their sons and daughters in the hope that they would earn their livelihood, and be helpful in their old age.

What is the general opinion of the teachers about the participation of students in political

activities? Even though some of them are of opinion that the students may participate in politics, they advise the students not to take part in other external matters but to concentrate their attention on the studies.

If these are the views expressed by various sections of people, let us examine to what extent they are agreeable. We know, the students of to-day are the presidents, prime-ministers and other high officials of to-morrow. They are the men to protect the hard-earned independance and freedom of our country. Their duties do not end with protecting the country, but they must be capable of leading the country through economic and national crisis. It is foolish to think that they will be able to undertake this task without previous experience and knowledge of political developments at home and abroad. Education now brings only a degree and nothing more. Stalin, the architect of modern Russia had no school education as we have. Though our prime-minister Nehru had his education in his youth, it was completely different from that of politics. Edison was not a B. Sc or M Sc graduate. So we can say that everything requires some sort of experience or real interest in that sphere. If the student is interested in the study of subject, he must be allowed sufficient freedom to pursue it. Restriction is necessary, but "too little liberty brings stagnation and too much brings chaos."

Then what is the students' part in politics? They should not be ignorant of the present world. This is the age of atom; age of wonderful achivements and sudden changes in all the fields—scientific, economic, political, educational and cultural. In

this progress, if the student is content only with his studies he becomes unfit to be an useful member of modern society. So every man must be clear as to what is going around him in the world. He must know the position of his own country in these world affairs, to what extent India is functioning in a right way, to what extent America or other European countries are greedy enough to spread their powers and to dominate the world and a host of other such problems. To know all these things, the modern world has given the best possible means: the news-papers.

It is regrettable to note that more than 50% of the students have neglected the reading of news-papers. They find no time to read either because of over—concentration in studies or because of vain and useless conversation with friends. So, my earnest request to my fellow-students is that they must cultivate the habit of reading news-dailies, and not to forget to concentrate attention on studies, at the same time. This is the only effective means to know the world side by side with studies.

---

"Smiling they live and call life pleasure;
To me that cup has been dealt in another measure"

*-Shelley.*

# World Peace.

R DESABANDHU, IV B. A.

Since the attainment of Independence, many years have rolled by. What has Independence given us? Some of our satesmen and leaders, enthusiastic and optimistic, acclaimed the termination of hostilities as the glorious and welcome conclusion of a war which was to end all wars. The golden age had arrived, they think, to stay with us eternally.

We have waited long. The golden promise has not yet materialized. Still do not let us accept the belief that all our efforts were futile, that our sacrifices were offered in vain. Truly the fruit for which we hungered is not yet ripe for the gathering, but we were, perhaps hasty and premature in expectation of reward; our disappointment may thus result from impatience, natural though it might be after relaxation from a long and almost intolerable strain.

Those who to-day should have been in the prime of manhood, able and eager to join with brain, heart and hand, the colossal task of reconstruction, are gone before their work as citizens could even begin. But though we deplore their loss we must not let ourselves be mastered by despair. The work has to be carried on; and it is for the young generation—with broad outlook and liberal education—to undertake the re-building of a broken world.

The pity is that progress towards reconciliation is hampered and retarded by a long period of general insanity, such as was experienced in the years 1939-1945 it and has not yet been completely cured. Each nation has difficulty in recognising recovery of reason by other nations, hence

arise mutual suspicions and distress. Thus fear is bred and "fear is an evil counsellor"; it produces nothing better than a narrow nationalism—nationalism disguised as, and miscalled, patriotism, but which is at bottom only selfish jealousy.

Nationalism is commonly held up to admiration as a high virtue, while internationalism, which in others is generous sympathy to our fellow men, is branded as a crime, a surrender, a betrayal of our own peculiar interests and rights. Until this view —this regrettable attitude—is altered we cannot hope for any enduring amelioration in international relations.

It is often said that war is in accordance with the law of nature, that man has always fought and always will fight, that human nature cannot be changed. As I have already suggested, human nature is not a bad nature; it need not be changed, but it can be trained and guided by education and example to its betterment. Nations now maintaining international peace and good order by means of their own organised police forces must restrain personal and party brawling.

To an unprejudiced and dispassionate observer there can be, however, no obvious reason why the rational procedure, which has resulted in the establishment of a happy social state by the fusion in amity of once hostile tribes, should not be extended to the creation of a wide comity of nations, nations independent yet inter-dependent—a federation or fellowship; without being a puppet in the hands of any wealthy country.

And in the end, war is not a satisfactory method of settling disputes. War brings lasting benefit to none of the combatants.

What have the victories of the great Nepoleon Bonaparte brought to him or his nation? Where are the permanent advantages resulting from the political and military combinations, the strategical triumphs of Moltke and Bismarck? Wars have been usually waged in olden days for the spoils of victory, increase of territory, acquisition of wealth, even glory to the victor. That lust for expansion is not yet quite dead, but the glory of the conquest is departing; its gains are "dead sea fruits", its legacy, bitter memories alone. We earth-dwellers are prisoners on the planet; there is no way out. So, as we cannot escape from the proximity of our *neighbours, it is surely better to live with them* as friends than as enemies.

At the present moment, many years after the close of the war which was to bring an enduring peace to all, we find the cleverest brains everywhere busily experimenting with new *inventions* for easy slaughter, building more horrible engines of destruction, brewing more atrocious poison, designing more monstrous methods of murdering their fellow men and women. If war comes on us, the peaceful members of our so called civilized communities—our women and children not excepted—will be as open to attack as the soldier in the field, for the conventions that non-combataants are respected no longer hold good.

Recent progress in science has now given to the machine mastery over man, its maker. Until lately politicians and statemen—who are the authors and initiators of war—could feel safe in their own homes surrounded by their families. That happy security is now a dream of the past.

Many obstacles have been cleared away. Science has overthrown barriers and given egress in all

directions. Man is now able to navigate the atmosphere, plumb the deep seas, traval in space at a speed unimaginable to our ancestors. Willingly or unwillingly he has become a world citizen, and the duties of that citizenship cannot be evaded; duties calling for the whole-hearted co-operation of every man and woman alive, joined in mind and purpose to promote the good and the advancement of all.

The U. N. O. is alive and active, and courts exist for determining and adjusting all international differences, judicial and financial. No nation at heart wants war, but in the course of history, it has happened and is happening that ambitious leaders, inspired by a narrow nationalism, may exercise a compelling influence on impressionable and inexperienced youth to urge them on a path of promised glory. This, especially in countries which have suffered recent territorial losses, whose over-crowded population is looking for outlet, exerts a "magnetic lure on immature minds."

But the world is in peril because of the lack of faith. Governments, distrusting treaty-makers, no longer hold treaties in respect, but regard them as merely temporary makeshifts. Lasting agreements, permanent mutual understanding, has to be founded on truth and honesty. The great economist, Ruskin, has expressed in one sentence this principle of law and order—in the fifth volume of "Modern Painters" published in 1860: "Government and co-operation are in all things the laws of life; Anarchy and competition the laws of death."

A distinguished scholar and profound thinker, the President of Columbia University, in words spoken not long ago, has emphasized the fact that "the fundamental evil in our day is the world-wide lack of confidence." In his opinion world organisation, world consultation and co-operation, are essential to world prosperity and international peace—as essential for the nations of the world to-day as for the thirteen independent, competitive and self-centred states of America in the eighteenth century.

---

# The National Savings Scheme.

( V. SAMBASIVAM, IV. B. A. )

India has undertaken a five-year developmental programme involving an outlay of Rs. 2069 crores. India is a poor country with a *per capita* income of near about Rs. 260 per annum. This national development work requires a large investment of capital. The total resources available in the country are very inadequate. Therefore the required investment can be supplied from the savings of the nation. In order to meet the requirements of development we have to depend on the voluntary contribution of the people to find the requisite money. Taking into account all the total resources, there is still a gap between our target of expenditure and the available funds. So we have to cover the deficit by more savings. The Five Year Plan is the plan of the people. As architects of their future, men of moderate means are requested to build up the prosperity of the country by subscribing to the national development.

We have got from the British Government when they left us an institution called the National Savings Scheme. This was intended to finance the war. The Government lost interest in it after the termination of the war. Once again this institution regained its vigour with the undertaking of the development works. By its offings it makes the common man associate with development works.

Small savings have been given a very high place in raising finance for the first Five Year Plan. In fact savings constitute about one-third of the target set for the finance to be raised by the central Government from internal sources. A sum of Rs. 270 crores is the target fixed for small savings scheme. Government have been taking various measures to augment the savings proportionately. Rs. 45 crores is the annual budget fixed for the collection through the national savings schemes.

There is a target fixed for each State. It has been provided that any State raising loans through savings exceeding the target will be able to derive the advantage of this provision for development works.

To spread the small savings movement, the Government have initiated a variety of schemes of investment to enable the different classes of citizens to partake in it. The two recent schemes—National Plan Certificate and Annuity Certificate—have proved popular. Recently Government have introduced a special scheme for rural areas. This scheme is known as Rural Agency Scheme. There is also another—a women's savings campaign. This compaign will enable the women to feel that they are the direct participants in the task of national construction.

Huge expenditure is envisaged in the constructive activities that embrace almost every section of national life. When the magnitude of this task is realised, one can understand that the Government cannot accomplish everything by itself. The participation of the people through small savings is the crux of the national development. The success of any rural scheme can be judged solely in terms of collection made.

In some States, among the people the habit of savings is practically non existent even though there may be some surplus money. No development work can be executed without cutting down the expenditure of the people. Admittedly the majority of people in India live on the margin of subsistence. The opportunities that exist before us are numerous. We know what promise the Plan holds for us and we know too the necessity of our participation. We can enlist the co-operation and sympathy of others and persuade them to lend a helping hand. If we want to raise the standard of living of the nation it is incumbent on our part to save something by curtailing our expenditure. This task of nation-building activities is indeed a heavy burden. But let us also remember that when there are many hands, through small savings, to lift it, the heavy burden will be considerably lightened.

# The Upholder of Civilization.

V. SUKUMARAN, B.A., B.Sc., Proctor.

The railway authorities knew nothing of the reservation but then the students have always known their stuff and hence the words, "Reserved for students only" written in chalk on either side of the compartment. It has always beat me how at a railway station the students could put their hands on a piece of chalk so readily, but there it is that a chalk is always available to them when they require it. The scribbled words implied a warning to casual passengers against possible intrusions into what the students considered their unquestioned realm of activity and enjoyment.

The train was moving fast. The night was setting in. Through the window could be seen rows of green trees and the far-off, cloud-crested mountains moving in the opposite direction. Occasionally an open heath speckled with little rocks or a patch of cultivated land came into view. My eyes were glued to the scenery when suddenly the grating of breaks was heard and the train came to a stop at a wayside station. A solitary individual wandered up the platform to our compartment, glared at the forbidding words on the outside, peered into the half-empty room, turned the door handle and got in. He closed the door carefully after him and, as the train steamed out, stood for a time taking in the scene inside, trying to choose his seat. I surveyed him from head to foot and then from foot to head. In the semi-darkness caused by the clouded sky outside and the dim lights within, there loomed before me at the doorway a tall, wiry man in a dirty dhoti and an equally dirty shirt torn at the

shoulders and unfastened in the front. His half-bare arms and protruding legs were long and bony; his hair wanted a bit of oiling and combing and he had about six days' beard on his face. In his left hand he held a bulging, little, blue bag that, in contrast with his general appearance, looked rather a romantic appendage to his otherwise earthy self. For a second I speculated on what that bag might contain but presently I was aware of two things at the same time. One was a general averment of deprecation by the students of the intrusion and the other the alarming presence of the stranger next to me. Obviously the stranger had decided to honour me by his proximity. I looked at the students and every eye was fixed on the stranger; some had even risen from their seats and were craning their necks over the backs of seats to look at the object of curiosity. I turned and looked at the stranger. He was smiling—smiling to himself and at everybody who cared to look at him and, believe it or not, that self-appreciative, cognitive smile of his was rather contagions. Suddenly he turned and bulleted out the question, "You are coming from?"

It is indeed the bounden duty of every Indian citizen to enquire into the whereabouts of every fellow-traveller in a railway train but, then, I was not prepared for anything so precipitous. I waited to recover my breath and then answered him. "From the town of T." I thought my answer would appease his curiosity but question after question followed and having exhausted details about my name, vocation, salary and so on he proceeded to narrate the story of a rogue elephant that came down a tunnel off Shencottah, saw the night train approaching, turned and in the movement had its long tusks caught

among the furrowed rocks, could not move and had to be shot. He rambled on while I looked outside.

The shadows deepened. Streaks of lightning struck across the sky making dark objects momentarily visible, a thunder rumbled in the distance trailing into some subterraneous sound; it repeated and grew nearer. A cool breeze blew making many sneeze; a drizzle began and soon the sharp clatter of September rain patted against the glass panes of the windows I had pulled up. While the train sped on through thickly wooded country, whistling occasionally in that silent night, one could be dimly conscious of the "tuck-tuck" sound of the springs as the wheels passed over rail joinings, and dream a thousand things. As the clouds were slowly carried westwards by the wind, the rain stopped. In my eagerness to look outside I pushed down the shutters. Drops of water from the upper regions of the roof fell on my face and the seat as the train swung sideways during the run. The moon which was up in the sky looked shyly through the scattered clouds and spread a dim ethereal glow over the scenery. After the rain there was an unusual calm outside broken only by the chirping of the grasshoppers on the trees and the croaking of the frogs in the puddles. Occasionally a wind rustled through the wet leaves; drops of water shaken off by the wind clattered against the fallen leaves beneath. Away, against the sky, the imperial heads of mountains in a veil of white, fluffy, rolling clouds were visible. I looked sideways and saw my neighbour had moved to a seat opposite to him.

The train stopped at a small station A man with an umbrella came past our compartment and

in the dim circle of light cast by the kerosene lamp on the platform I could see a short, well-fed man who would not be rufled easily. He hesitated for a moment at the door of our compartment and then entered it. Our first companion looked at him from behind heavy eyelids and said, " This compartment is for students only. It is reserved. Saw the writing outside? "

Second Companion :- " No. But it is all right. The other compartments are crowded and there is lot of room here. " He sat down on a seat nearby and placed his umbrella beside him.

First Companion :- " But this is reserved for students, you cannot travel in this. "

S. C: " All the same I am travelling in this compartment. I have to travel only a short distance. "

F. C: No, you must not travel in this compartment. All you people belonging to this place are like this. What is the use of your education!

S. C: " Please don't pick a quarrel. I do not like to, anyway. And don't make sweeping remarks about any place or its people. "

F. C: Why not? I told you this is reserved. Even then you come and sit down. What is the use of your education? Do you know what is civilization? You have no civilization, no manners, no culture. "

S. C: " What has civilization to do with this! I occupied this seat because it was vacant. You can't have a whole train to yourself. The train is not private property. "

F. C: Oh, *your* private property! I know all about it. After freedom everybody in India thinks

he can do what he likes. Everything is public property. Are you civilized?"

The train stopped at another station in the meanwhile. The quarrel between the two went on, one using vituperative, broken English and the other defending gently but effectively. Our first companion always ended by asking the other whether he was civilized Presently I felt a finger on my shoulder and heard the words, "Tickets, please." I turned and saw the ticket examiner in his white uniform and a brown muffler around his head. I presented 26 tickets and added, "Tickets for all in this compartment except those two there." He signed the tickets and gave them to me. He approached the first companion and asked for his ticket and entered into conversation with the other. Our first visitor put his hand into his shirt pocket, took it out without the expected ticket but with an exclamation expressive of surprise. He searched here, he searched there, told the ticket examiner that the ticket might be in the blue bag and went through the connecting door to the next compartment The ticket examiner waited for some time and then accosted him back.

Ticket Examiner: "Have you got a ticket?" The other was silent.

T. E: I knew you had no ticket. All you did was a hoax I have met many like you in my life. Stand there."

S. C. to T. E: "But he was telling me that he was a member of the students-party. He told me this compartment was reserved and that I should not enter it. He told me I was uncivilized."

T. E: "Did he? the fellow must be kicked. Travelling without a ticket and telling others that they should not enter!" I began to smile. The scene

was too enticing to keep silent. Further, in an indirect way I was also involved.

I to the T. E: "I heard all that he was saying and wanted to know the end. In the meanwhile you came. I was much amused. I wish he would define civilization of which he seems to be a great exponent."

T. E to me: "I tell you the fellow entered this compartment to sneak away something when all of you fell asleep. He would open your box, grab all that he can get, put everything in his bag and get away at some station. I will teach him a lesson." Turning to the S. C.: "By the way, does he know who you are?"

S. C: "No, I did not reveal my identity."

T. E: "Why are you travelling now?"

S. C: "You see, I was on leave for a few days. I am joining duty tomorrow. I thought I could take the last night train."

T. E. to me: "You see this man is a Station Master. And that fellow was telling him he should not travel in this compartment!" To the S. C: "You are getting down at the next station? I too shall get down there and frame a charge against him and you will please be a witness." The ticket examiner smiled The ticketless traveller glared at the other two. What were the thoughts passing through his mind?

The train stopped and the "station master" got down. Also the ticket examiner with the ticketless traveller. The train steamed out of the platform. The station and its people receded. Around me the flooding moonlight gleamed over the vales and the mountains. The chorus of the frogs and the chirping of the grasshoppers echoed through the silence of the cold night. Were the frogs and grasshoppers laughing?

*Quality Food*

*&*

*Best Catering*

# SRI VENKATA LODGE,

**Coffee & Meals Hotel,**

61, MUTT STREET : KUMBAKONAM.

* *Dinner and*
* *Tea Parties*
* *undertaken*
* *at Short Notice.*

*Efficient & up-to-date Catering guaranteed.*

Our Motto:

"Customers' Satisfaction."

REMEMBER

**RAJAN'S**

For Life-like Portraits, Childrens' Portraits, Bromide Enlargements and Outdoor Groups of High Schools and Colleges.
For perfect Developing, Printing & Enlarging,
send your Exposed Roll Films to :

***RAJAN STUDIO***

**PHOTOGRAPHERS.**

*Authorised Dealers For :*

**KODAK, ILFORD, GEVAERT GOODS,**
**36, BIG STREET, KUMBAKONAM.**

*Sri Venkateswara Photo Studio,*
**Town High School Road, Kumbakonam.**

*

Our Speciality is Neat and Prompt Service to Amateur Photographers.

**We also undertake Enlargements and Out-door Groups of High Schools & Colleges.**

**We Develop Amateur-Films, Print & Enlarge Amateur Negatives Very Promptly.**

***We also deal in photo goods of every variety.***

PROP. M. PERIASWAMY.

*For All College Texts and Guides*

*Please call at*

## Sri Venkateswar Book Depot,

**Town High School Road,**

KUMBAKONAM.

---

Other School books, Tamil Novels and Presentation Books, and quality Students' note books also available.

---

FOR EVERYTHING IN
Games, Sports, Scout,
Citizenship Equipments,
Cups, Medals
&
Shields.

PLEASE VISIT OR WRITE TO
PREMIER SPORTS, KUMBAKONAM.
ESTD. 1921.

Restringing
of
Tennis and
Badminton
Rackets
a Speciality.



சிறந்த சிற்றுண்டி,

உயர்ந்த உணவு,

குளிர்ந்த பானங்கள்,

முகமலர்ந்த உபசரிப்பு

✱

எல்லாம் ஒருங்கே
அமையப்பெற்றது

ஸ்ரீ கோமதி விலாஸ் காபி & சாப்பாடு ஹோட்டல்

பஸ் ஸ்டாண்டு ○ காந்திபார்க் சமீபம்

கும்பகோணம்.

N B :— டீ பார்ட்டி & டின்னர் முதலியவைகளை உடனுக்குடன் கவனித்து நல்லமுறையில் தயார்செய்து சப்ளை செய்கிறோம்.

உரிமையாளன் : K. ராஜகோபாலன்.



CONNEMARA PUBLIC LIBRARY
21 NOV 1956
MADRAS





*For Service*

*and*

*for Spares Too.*

✱

*The National Watch Co.,*

POTHAMARAI SOUTH.

KUMBAKONAM.